விலை – ரூபா 20 பக்கங்கள்28

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 212 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 11.வெள்ளிக்கிழமை 26.06.2015

**அனகாரிக தர்மபாலவை உதவிக்கு அழைக்கும் மஹிந்த ராஜபக்ஷ**
பக். 17

# மிருசுவில் எண்மர் கொலை இராணுவ அதிகாரிக்கு தூக்குத் தண்டனை

### 15 வருடங்களின் பின்னர் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
2000ஆம் ஆண்டு, மிருசுவிலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 8 பேரைக் கொலை செய்து புதைத்த குற்றவாளியான இராணுவ அதிகாரிக்கு 15 ஆண்டுகளின் பின்னர் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதி மன்றம். குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய 4 சிப்பாய்களையும் நீதிமன்றம் விடுவித்தது.
யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் இருக்கிறது மிருசுவில். 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 19ஆம் திகதி, மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்ற திட்டப் பகுதியிலுள்ள தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக 9 பேர் சென்றிருந்தனர். அதன் பின்னர் அவர்கள் காணாமற் போயிருந்தனர். ஒருவர் மாத்திரம் படுகாயமடைந்த நிலையில் தப்பி வந்தார். பக்.24



## போதையை எதிர்த்து இன்று விழிப்புணர்வு

வடக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் நடக்கும், கல்விச் சமூகத்தால் நடைபவனிகளுக்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 26
போதைப் பாவனை மற்றும் கெட்ட நோக்கத்துடனான ஆள்கடத்தல் என்பன தொடர்பாக வடக்கில் உள்ள பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இன்று காலைப் பிரார்த்தனையின்போது விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு வட மாகாண கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.
காலை 8 மணி தொடக்கம் 8.20 மணிவரையுள்ள நேரத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு உரை ஒன்றை ஏற்பாடு செய்யும்படி பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். போதைப் பாவனை பக்.24

## வடக்கு நெற்கபேகள் மீது இறுகுகிறது சட்டத்தின் பிடி

இணையக் குற்றங்கள் புரிந்தால் இழுத்து மூடவும் பொலிஸாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடக்கில் இணையக் குற்றங்கள் (சைபர் குற்றம்) புரியும் நெற்கபேக்களை இழுத்து மூடுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு யாழ். மேல்நீதிமன்று பணித்துள்ளது. தவிர 18 வயதுக்குட்பட்டவர்கள் பெற்றோரின்றி நெற்கபேக்களுக்கு வருவார்களாயின் அவர்களுக்கு அனுமதி வழங்குதக்கூடாது என்ற நடைமுறையை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறும் மேல் நீதி மன்று அறிவுறுத்தியுள்ளது. மீறி அனுமதி வழங்கும் நெற் கபேகளை இழுத்து மூடவும் அதன் நடத்துநர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தவும் நீதிபதி உத்தரவிட்டார்.
மல்லாகம் நீதிமன்ற வழக்கு ஒன்று தொடர்பில் மேல் முறையீடு செய்யப்பட்ட நிலையில் அந்த பக்.24

## புலம்பெயர் தமிழ் மக்கள் அனைவரும் புலிகளல்லர்

நாடாளுமன்றத்தில் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26
புலம்பெயர் தமிழர்கள் அனைவருமே புலிகள் அல்லர். அவர்களில் முதலீட்டாளர்கள், கல்விமான்களும் இருக்கின்றனர். அவர்கள் எமது நாட்டில் முதலீடு செய்வதற்கு - தமது அறிவு, புலமை, நீதி ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றனர். வடக்கில் மட்டுமல்லாது முழு நாட்டிலும் முதலீடுகளைச் செய்து இந்த நாட்டினை அபிவிருத்தி செய்ய அவர்கள் விரும்புகின்றனர்.
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். பக்.24

## "நான் ஓர் அப்பாவி" குற்றவாளி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
"நான் இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபடவில்லை. நான் அப்பாவி."
இவ்வாறு மிருசுவில் படுகொலை குற்றவாளி, முன்னாள் இராணுவ சார்ஜன் நீதிமன்றத்தில் தெரிவித்தார். அவருக்கான தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வாசிக்கப்பட்டதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.
விடுதலை செய்யப்பட்ட ஏனைய 4 இராணுவச் சிப்பாய்களும் நீதிமன்றத் தீர்ப்பைக் கேட்டு பக்.24

## "தண்டனை சரியானதுதான்" இறந்தவரின் மகள் வரவேற்பு

15 வருடங்களின் பின்னராவது நீதி நிலை நாட்டப்பட்டமை குறித்து மகிழ்ச்சியும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
"15 வருடங்களின் பின்னராவது அப்பாவைக் கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்டிருப்பது மகிழ்ச்சி தான். இனிமேல் இவ்வாறு எந்தவொரு அப்பாவிகளும் கொலை செய்யப்படக் கூடாது. அப்பாவைக் கொலை செய்த ராணுவ அதிகாரிக்குத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது சரியானதுதான்."
இவ்வாறு தெரிவித்தார் மிருசுவில் படுகொலைச் சம்பவத்தில் தனது தந்தையையும், இரு சகோதரர்களையும் பறிகொடுத்த திருமதி ந.சோபா.
மிருசுவில் எண்மர் கொலை வழக்குத் தீர்ப்பு வெளியான தன் பின்னர் உதயன் பத்திரிகை அவரைத் தொடர்பு கொண்டு பேசியது.
மிருசுவில் சம்பவத்தில் சின்னையா வில்வராஜா, அவரது மகன்களான பிரதீபன் (வயது-15). பக்.22

## குடாநாட்டிலும் இன்புளுவன்சா குழந்தை பிரசவித்த பெண் சாவு

### குழந்தைகள், கர்ப்பிணிகள் என 20 பேர் விடுதியில் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். குடாநாட்டிலும் எச்-1 என்-1 இன்புளுவன்சா வைரஸ் தொற்று பரவிக்கொண்டிருக்கிறது என சுகாதாரத் துறையினர் அறிவித்துள்ளனர். இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 20 பேர் யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். குழந்தைகள், கர்ப்பிணிகளும் பாதிக்கப்பட்டவர்களில் அடங்கியுள்ளனர்.
இந்த வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த கர்ப்பிணி ஒருவர் சிசிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். அவரது குழந்தையைக் காப்பாற்ற முடிந்தபோதும் தாயாரைக் காப்பாற்ற முடியவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவர் மன்னாரைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.
காய்ச்சல், மூக்கால் நீர் சிந்துதல், தலையிடி என்பவை பக்.24

## மீண்டும் காணி பிடிக்க இராணுவம் முனைப்பு

தென்மராட்சி, ஜூன் 26
சாவகச்சேரி கோவில் குடியிருப்பு பகுதியில் உள்ள தும்புத் தொழிற்சாலைக் காணியில் மீண்டும் முகாம் அமைக்க படையினர் முயன்ற வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இங்கிருந்த கட்டடத்தில் இருந்த படையினர் கடந்த வருடம் வெளியேறி அல்லாரை தம்ப தோட்டத்தில் தங்கியுள்ளனர். அவர்களால் அமைக்கப்பட்ட சிற்றுண்டி நிலையம் அகற்றப்படாமல் தும்புத் தொழிற்சாலை அருகிலேயே காணப்பட்டது.
படையினர் காணி மற்றும் கட்டடத்திலிருந்து வெளியேறிய பின்னர், கட்டடத்தை மாகாண கைத்தொழில் திணைக்களத்தினர் பொறுப் பக்.24

தேனிசை இராகங்கள்
நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும் தேனிசை இராகங்கள் (இசை நிகழ்ச்சி)

(27.06.2015)
நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
0771013235
பிரதான அனுசரணை: Rio Ice Cream, Hari Engineers,
ஊடக அனுசரணை: உதயன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல் சந்தைப்படுத்தல் சபை ரூ.844 கோடி தர வேண்டும்

## அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தினார் நிதியமைச்சர்

கொழும்பு, ஜூன் 26

நெல் கொள்வனவுக்காக நெல் சந்தைப்படுத்தல் சபை திறை சேரியிடமிருந்தும் அரச வங்கிகளிடமிருந்தும் பெற்றுக்கொண்டுள்ள நிதித் தொகைகளுள் 844 கோடி ரூபாவை (8 ஆயிரத்து 441 மில்லியன் ரூபா) இதுவரையிலும் திருப்பிச் செலுத்தியிருக்கவில்லை என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை இவற்றுள் 639 கோடி ரூபாவை (6 ஆயிரத்து 386 மில்லியன் ரூபா) இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய மூன்று அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதோடு எஞ்சிய 206 கோடி ரூபாவை (2 ஆயிரத்து 055 மில்லியன் ரூபா) திறைசேரியிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளது என்றும் அமைச்சர் தெரியப்படுத்தியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையானது கடந்த பெரும் போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வது தொடர்பாக திறைசேரியில் இருந்து நிதி வழங்கப்படுவதற்கு முன்னர் இருந்தே இவ்விதமாக திறைசேரியிடமிருந்தும் மூன்று அரச வங்கிகளிடமிருந்தும் நிதியைப் பெற்றுக் கொண்டிருந்தது என்றும் நிதியமைச்சர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

கடந்த பெரும்போகத்தின்போது நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக 750 கோடி ரூபாவை (7 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா) நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு திறைசேரி வழங்கியிருந்தது. அந்த நிதியைக் கொண்டு ஒரு லட்சத்து 60 ஆயிரத்து 301 மெற்றிக்தொன் நெல், நெல் சந்தைப்படுத்தல் சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

பெரும்போகத்தின்போது அரசால் கொள்வனவு செய்யப் பட்டுள்ள நெல் தொகைகள் பகிரங்க கேள்விக் கோரல்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு அதன் மூலமாகப் பெறப்பட்டுள்ள தொகைகள் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டுள்ள பணத்தொகைகளை மீளச் செலுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர், அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்துள்ளார். (ந-22)

# போதைப்பொருள் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு



வலி.வடக்கு, ஜூன் 26

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர மாணவ, மாணவிகளுக்கு மது ஒழிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புனர்வுக் கருத்தரங்கு கல்லூரி உப அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை மற்றும் மதுப்பாவனை அதிகரித்து வரும் நிலையில் இந்த விழிப்புணர் வுச் செயற்பாட்டை உடுவில் பிர தேச சுகாதார வைத்தியதிகாரி பணிமனை மற்றும் சுன்னாகம் பொலிஸார் இணைந்து பாடசாலைகளில் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்



கில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த மற்றும் உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமரன் ஆகியோர் விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர். (ந-86)

## இலங்கை ஆசிரியர் சங்க பேராளர் மாநாடு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 58 ஆவது பேராளர் மாநாடு மன்னார் அல் அஸார் மகா வித்தியாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதில் வழமை போன்று நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும் என்றும், சகல மாவட்டங்களையும் சேர்ந்த அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேட்டுள்ளார்.

இந்தப் பேராளர் மாநாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.பிரியந்த பெர்னாண்டோவும் உப தலைவர்களான நிஸாந்த தேசப்பிரியா, இரத்தினம் ரவீந்திரன் அபாஜீல் இர்பான் மற்றும் ரசிகா கந்தபான்கொட, பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் அனைத்து ஆசிரியர்களையும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டைப் பெறவும் முறையான கடமை விடுமுறை பெறவும் ஆசிரியர்களுக்கு உரிமை உண்டு. அதனை எவராலும் தடுக்க முடியாது என்றும் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (ந-4,108)



கலாசார அமைச்சின் அனுசரணையுடன் கொழும்பு கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடி சாந்தி நிலையத்திற்கு வந்திருந்தனர்.

வடக்கு தெற்கு முதியோர் நட்புறவுப் பாலம் செயற்றிட்டத்தின் கீழ் 125 முதியோர்கள் வருகை தந்து தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி சாந்தி நிலைய முதியோர்களை மகிழ்வித்தனர்.

விசேட வாகனங்களில் வருகை தந்த தென்பகுதி முதியோர் சங்கப் பிரதிநிதிகளை சாந்தி நிலையப் பொறுப்பதிகாரி த.கிருபாகரன் வரவேற்றார். (ந-9)

# ஊடகவியலைக் கற்பிக்க ஆசிரியரை உள்வாங்குக

## பல்கலை. விரிவுரையாளர் அருட்திரு ரூபன் கோரிக்கை

கொழும்புத்துறை, ஜூன் 26

ஊடகவியலை பாடசாலைகளில் கற்பிக்க பல்கலைக்கழக ஊடகவியல் பட்டதாரிகளை உள்வாங்க கல்வித் திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஊடகத் துறை விரிவுரையாளர் அருட்திரு ரூபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

2015 இல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஊடகவியல் கருத்தரங்கு கடந்த வாரம் வைத்திய சாலை வீதியில் உள்ள பிசப் சவுந்தரம் கம்பஸில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஊடகவியலைக் கற்பிக்க பல பாடசாலைகள் ஆரம்பித்துள்ள போதும் அதற்கென தனியான ஆசிரியர்களை நியமிக்காமை பெரிய குறைபாடாகவே காணப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக பட்டப் படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்கள் இருக்கின்ற போதும் அவர்கள் ஊடகவியல் ஆசிரியர்களாக இன்னும் உள்வாங்கப்படவில்லை. ஏனைய பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களே ஊடகக் கல்வியை வழங்குகின்றனர்.

நிரந்தர ஊடகவியல் ஆசிரியர்கள் இன்மையால் பல பாடசாலைகளில் ஊடகக் கல்வியை ஆரம்பிக்க முடியாதுள்ள அதேவேளை ஆரம்பித்த பாடசாலைகளிலும் அவற்றை நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் கல்வித்திணைக்களம் உடனடிக் கவனம் எடுத்து ஊடகவியல் கல்விக்கு பயிற்றப்பட்ட பட்டதாரி மாணவர்களை உள்வாங்கி இந்தக் கல்வியினை இன்னும் அனேகர் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ந-135)

## 20 வருடங்களின் பின்னர் காணி புனரமைப்பு

தென்மராட்சி, ஜூன் 26

கைதடி நுணாவில் நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு அருகில் கடந்த 20 வருடங்களாக புனரமைக்கப்படாத காணி உதயனில் வெளியாகிய வாசகர் திருமுக செய்தியையடுத்து அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ள தாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பிரிவு கிராம அலுவலர், பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரின் தீவிர முயற்சியின் பயனாக காணி துப்புரவு செய்யப்பட்டதால் அந்தப் பகுதியூடாக மக்கள் பயமின்றி நடமாடுவதாகவும் தெரிவித்தனர். (ந-9)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு வீடு திருத்துவதற்கு நிதி உதவி

## முதற்கட்டமாக 45 பேருக்கு வழங்கப்பட்டது

வலி.வடக்கு, ஜூன் 26

யாழ்.மாவட்ட வாழ்வெழுச்சித் திணைக்களத்தால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட சமுர்த்தி பயனாளிகள் நாற்பத்தைந்து பேருக்கு வீடுகளைத் திருத்துவதற்கான மானிய அடிப்படையிலான முதற்கட்ட பண உதவி வழங்கப்பட்டது. வீடமைப்பு வாரத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பத்து தேர்தல் தொகுதிகளில் இருந்தும் தலா முப்பது பேர் என்ற அடிப்படையில் இந்த வீட்டுத்திட்ட மானிய உதவி முன்னூறு குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று யாழ் மாவட்ட செயலக வாழ்வெழுச்சித் திட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



முதற்கட்டமாக நாற்பத்தைந்து [illegible] கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட வீட்டுத்திட்ட உதவியின் கீழ் ஒருவருக்கு எழுபத்தையாயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் இது இரண்டு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வீடமைப்புத் திட்டத்திற்கான மானிய உதவிகள் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட செயலக வாழ்வெழுச்சித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் அதிதிகளாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் மற்றும் செயலக திட்டமிடற் பணிப்பாளர் திருமதி மோகணேஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ந-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 877 பேருக்கு தலை, மூளை பாதிப்பு எலும்பு முறிந்த நிலையில் 906 பேர்

## கடந்த 4 மாதங்களில் யாழ்.நகரை அண்மித்து நடந்த விபத்துக்களால்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். நகரில் 4 மாதங்களில் மாத்திரம் விபத்துக்களால் தலை மற்றும் மூளை பாதிப்புக்கு உள்ளாகி 877 பேரும் எலும்புகள் முறிந்த 906 பேரும் காது மூக்கு தொண்டை பாதித்து 115 பேரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இந்த எண்ணிக்கை வேறு எந்தவொரு வைத்தியசாலையில் இருந்தும் மாற்றப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையாக அல்லாது விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து நேரடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையே என்று எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் த.கோபிசங்கர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியிலிருந்து ஏப்ரல் வரையான 4 மாதங்களில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையே இது என்றும் அவர் குறிப்பிட்டார். பாதிக்கப்படுபவர்களின் எதிர்காலமும் மோசமானதாக இருக்க வாய்ப்புள்ளது. எனவே ஒட்டுமொத்த சமூகமும் விபத்துகளிலிருந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

குடாநாட்டில் குறிப்பாக யாழ்.நகரில் விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இந்த எண்ணிக்கையானது கடந்த வருடங்களில் இடம்பெற்ற விபத்துக்கள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது சுமார் 25 வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது என்று கோபிசங்கர் கூறுகின்றார்.



இந்த எண்ணிக்கையானது கடந்த வருடங்களில் இடம்பெற்ற விபத்துக்கள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது சுமார் 25 வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது.

பிற இடங்களில் இடம்பெறும் விபத்துக்கள் பெரும்பாலும் அந்த இடங்களை அண்மித்துள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகவே யாழ்.போதனாவுக்கு மாற்றப்படுவது வழமை. அவ்வாறில்லாது விபத்து இடம்பெற்ற பகுதிகளிலிருந்து நேரடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையே இது என்பது இங்கு விபத்துக்கள் அதிகரித்துள்ளது என்பதனைக் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

வைத்தியசாலையின் 24 ஆம் இலக்க விடுதியில், தலை மற்றும் மூளையில் காயம். இரத்தக் கசிவு ஏற்பட்டு மோசமான நிலையில் 817 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்களால் உடலில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்புகள் முறிவடைந்த நிலையில் 763 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட காயங்களுடன் 98 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். காது மூக்கு தொண்டை பாதிக்கப்பட்ட நிலையில் 68 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனால் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வைத்திய நிபுணர் மேலும் குறிப்பிட்டார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் தலை மற்றும் மூளையில் காயம், இரத்தக் கசிவு ஏற்பட்டு மோசமான நிலையில் 15 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்களால் உடலில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்புகள் முறிவடைந்த நிலையில் 123 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட காயங்களுடன் 10 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். காது மூக்கு தொண்டை பாதிக்கப்பட்ட நிலையில் 14 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனால் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலையின் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் தலை மற்றும் மூளையில் காயம், இரத்தக் கசிவு ஏற்பட்டு மோசமான நிலையில் 12 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்களால் உடலில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்புகள் முறிவடைந்த நிலையில் 11 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட காயங்களுடன் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். காது மூக்கு தொண்டை பாதிக்கப்பட்ட நிலையில் 2 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் விபத்து அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தலை மற்றும் மூளையில் காயம், இரத்தக் கசிவு ஏற்பட்டு மோசமான நிலையில் 33 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துக்களால் உடலில் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்புகள் முறிவடைந்த நிலையில் 9 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட காயங்களுடன் 6 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். அதனால் 16 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

2 மாதக் குழந்தை தொடக்கம் 70 வயது முதியவர் வரையில் இவ்வாறு விபத்துக்களுக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 70 வீதமானவர்கள் வீதி விபத்துக்களால் ஏற்பட்ட காயங்களால் பாதிக்கப்பட்டவர்கள். அவற்றில் 10 வீதமானவை பாதசாரிகளால் ஏற்பட்ட விபத்துக்களே. ஏனைய 30 வீதமானவை மரம் ஏறுதல், வழுக்கி விழுதல் உள்ளிட்ட சந்தர்ப்பங்களில் காயமடைந்தவர்கள் என்றும் மருத்துவ நிபுணர் தெரிவித்தார். (ற-4)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் மலேரியா பரிசோதனை பிரிவு

தென்மராட்சி, ஜூன் 26

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விசேட மலேரியா பரிசோதனைப் பிரிவு இன்றுமுதல் செயற்படவுள்ளது. இந்த பரிசோதனைப் பிரிவில் மருத்துவமனை நோயாளர்களின் இரத்த மாதிரியுடன் தனியார் மருத்துவமனைகளால் பரிசோதனைக்காக அனுப்பப்படும் மலேரியா இரத்த மாதிரிகளும் பரிசோதித்து அறிக்கை வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவமனையில் தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இயங்கும் மலேரியா பரிசோதனை அறையில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் இரத்த மாதிரிகளும், தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் ஆயுர்வேத மற்றும் தனியார் மருத்துவ மனைகளிலிருந்து மலேரியா பரிசோதனைக்கான இரத்த மாதிரிகள் உரிய விவரங்களுடன் கிடைக்கப்பெறின் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பரிசோதனை அறையில் சளி பரிசோதனையும் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## சீவல் தொழிலாளருக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். மாவட்டத்தில் பதநீர் உற்பத்தியில் ஈடுபடும் 150 சீவல் தொழிலாளர்களுக்கு அதற்கான உபகரணங்களை பனை அபிவிருத்திச் சபை வழங்கியுள்ளது.

குடாநாட்டில் 19 பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இந்தச் சீவல் தொழிலாளர்களின் பதநீர் உற்பத்தி வசதி கருதியே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டது.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் கடந்த புதன்கிழமை பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட இணைப்பாளர் கியூபேட் அன்ரனி தலைமையில் இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

சபையின் தலைவர் சோ. கோகுலதாசன் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட இந்த 150 பயனாளிகளுக்கும் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் என்.கணேசன், பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் உத்தியோகத்தர் கே.கோபாலகிருஷ்ணன் சபையின் உற்பத்தி முகாமையாளர் எஸ். குருபரராஜா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-17)

## வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் சிவில் ராணுவ சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ராணுவத்தில் பணியாற்றி வரும் மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகேஸ் தெரிவித்தார்.

வாள்வெட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏற்கனவே 11 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 12 ஆவது சந்தேக நபராகக் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ராஜ்குமார் கபில்ராஜ் (வயது 24) என்பவரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வாள் வெட்டுக்கு இல்க்காகினர். அவர்களில் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அவரிடம் நடத்திய விசாரணை யில் குறித்த நபர் இராணுவத்தில் பணியாற்றுபவர் என்பது தெரிய வந்துள்ளது அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ற-4)

# பாடசாலை மாணவர் அனுமதியில் பொருத்தமான கட்டுப்பாடுகள்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை

அச்சுவேலி, ஜூன் 26

பாடசாலை மாணவர் அனுமதியில் பொருத்தமான கட்டுப்பாடுகளை கண்டிப்பான முறையில் மேற்கொண்டு, பிள்ளைகள் தமது வதிவிடச் சூழலில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பதற்குரிய ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வதிவிடச் சூழலை தவிர்த்து நகரப்புறப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்வதால் கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது. கிராமப்புறப் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர் அனுமதி எண்ணிக்கை பத்துக் கீழ் குறைந்த ஒற்றை இலக்க எண்ணிக்கையில் உள்ளது. இதனால் இந்தப் பாடசாலைகளை காலக் கிராமத்தில் மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் இருந்து மாணவர்கள் நகரப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு சென்று வரும்போது சமூகச் சீர்கேடான செயல்களும் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தவருடம் தரம் ஒன்று மாணவர் அனுமதியில் வகுப்பு ஒன்றில் 30 மாணவர்கள் என்ற கட்டுப்பாட்டோடு நகரப்புற ஆரம்பப் பாடசாலைகளில் நான்கு வகுப்புக்களும், ஏனைய பாடசாலைகளில் இரண்டு வகுப்புக்களுக்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

பாடசாலை மாணவர் எண்ணிக்கை அளவிலும் ஆகக்கூடிய மாணவர் எண்ணிக்கை ஆயிரத்து 500க்கு மேற்படாமல் இருப்பதற்கு வகை செய்யப்படவுள்ளது. மாணவர் அனுமதி விடயத்தில் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சட்டபூர்வ சான்றுகள் ஆவணமாக கொள்ளப்படவுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை அளவு, மாணவர் அனுமதி கல்விச் செயற்பாடு தொடர்பான நடைமுறைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு உயர்மட்ட கல்வி ஆலோசனைக் குழு கல்வியியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அலுவலகம் கச்சேரிநல்லூர் வீதியில் உள்ள ஆனந்தா வித்தியாலயத்தில் செயற்படுகின்றது. இந்தக் குழுவுக்கு கல்வியியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் தமது ஆலோசனைகள், பரிந்துரைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

# இடையூறு இல்லாது இரும்பு வர்த்தகம் மேற்கொள்ளலாம்

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் பழைய இரும்புகள் சேரிக்கும் வர்த்தகத்தில் ஈடுபடுவதை யாழ்.வணிகர் கழகம் ஆட்சேபிக்காது என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கும் யாழ்.இரும்பு வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு [illegible] யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்ற யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகருக்கும் வணிகர் கழகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பில் யாழில் இரும்பு சேகரிக்கும் வியாபாரிகள் வீடுகளில் சென்று கொள்முதல் செய்வது தொடர்பாக பொது மக்களால் சில குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.

அதன்காரணமாக ஒழுக்கக் கட்டுப்பாடுகளுடன் முறையாக பழைய இரும்பு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு சிலர் தவறு செய்திருக்கக்கூடும். அதற்காக ஒழுங்குமுறையாக இரும்பு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பாதிப்படையக் கூடாது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்ட 44 ஆலயங்களுக்கு நிதி

## இந்து விவகார அமைச்சு வழங்குகின்றது

வவுனியா,ஜூன் 26
மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்து விவகார அமைச்சால் வவுனியா மாவட்டத்தில் போரினால் பாதிப்புற்ற 44 ஆலயங்களுக்கு நிதியுதவிவழங்கப்பட்டுள்ளது.
30 வருடகாலப் போரால் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பல்வேறு அழிவுகளையும், பின்னடைவுகளையும் சந்தித்துள்ளன. அதன் போது மக்களது சொத்துடமைகள் மட்டுமல்லாது வணக்கத்தலங்களும் சேதமடைந்தும், அழிந்தும், பராமரிப்பற்றும் பலவித இடர்களுக்கும் உட்பட்டுள்ளன.
இந்த நிலையில் மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்து விவகார அமைச்சால் தற்போது இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்வதிலும், அவர்களது சுபீட்சமான மறுவாழ்வுக்கும் பல்வேறு காத்திரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தற்போது பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்டு வருவதோடு, விடுவிக்கப்படும் பகுதிகளில் தமிழ் மக்களால் வழிபட்டு வந்த இந்து ஆலயங்களையும் அடையாளம் கண்டு புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
வடக்குக் கிழக்குப் பகுதிகளில் போரினால் சேதமான ஆலயங்களை புனரமைப்பதற்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் முன்னுரிமை வழங்குகின்றது. அத்தோடு வடக்குக் கிழக்கில் சேதமான ஆலயங்கள் பலவற்றுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினூடாக நிதியுதவி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த ஆலயங்களை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு ஆலயங்களை சமுதாய மையங்களாக மாற்றி அமைப்பதற்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்பதோடு, ஆலயங்களை சிறந்த முறையில் பராமரிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் அதன் நிர்வாகிகள் மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமென அந்த அமைச்சு கேட்டுள்ளது. (ஐ)

# பாதுகாப்பற்ற கிணற்றில் விழுந்து மாணவி காயம்

## கேப்பாபிலவு அ.த.க பாடசாலையில்

கிளிநொச்சி, ஜூன் 26
பாடசாலை வளாகத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் குடிக்கச் சென்ற மாணவி கிணற்றுக்குள் தவறி விழுந்து காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று நண்பகல் முல்லைத்தீவு கேப்பாபிலவு அ.த.க பாடசாலையில் இடம் பெற்றுள்ளது.
கேப்பாபிலவு மாதிரி கிராமத்தை சேர்ந்த குறித்த பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும் தர்மராசா சஞ்சிகா என்ற மாணவியே இவ்வாறு காயமடைந்தவராவார்.
நேற்று நண்பகல் பாடசாலையில் மதிய உணவின் பின்னர் தண்ணீர் குடிப்பதற்காக குறித்த மாணவி படசாலை வளாகத்தில் சுற்றுக் கட்டு உயர்த்திக்கட்டப்படாத கிணறு ஒன்றில் தண்ணீர் அள்ளிய சமயம் எதிர்பாராத விதமாக கிணற்றினுள் தவறி விழுந்துள்ளார். கிணற்றினுள் விழுந்த மாணவி தெய்வாதீனாமாக வாளிக்கு போடப்பட்ட கயிற்றுடன் விழுந்ததால் கயிற்றை பிடித்தபடி கிணற்றினுள் இருந்து கூச்சல் இட்டுள்ளார். குறித்த மானவியின் கூச்சல் சத்தத்தை கேட்ட பாடசாலைக்கு அண்மையில் உள்ள படைத்தலைமையகத்தின் இராணுவ சிப்பாய்கள் இருவர் கிணற்றில் குதித்து மாணவியை காப்பாற்றியுள்ளார். பின்னர் பாடசாலை சமூகத்தினரால் மாணவி முல்லைத்தீவு மாஞ்சோலை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த பாடசாலை அதிபர்,
எமது பாடசாலையில்சிறிய மாணவர்கள் கல்வி கற்று வருவதால் பாடசாலைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சிடம் கோரியிருந்ததுடன், குறித்த கிணற்றுக்கு மோட்டர் பொருத்துவதுடன் மின்சார வசதியை பெற்றுத் தருமாறும் கேட்டிருந்தோம். ஆனால் இது வரை கால மும் எவையும் செய்யப்படவில்லை.– என்று தெரிவித்தார்.
(ற–21,102)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 26
அத்தியார் இந்துக் கல்லூரியின் கல்விக்கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில்நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினரர்களாக யாழ்.கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி, பழைய மாணவன் கதிர்காமு தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார். (ஐ)

# இந்துகுருமார் குருகுலத்தை மீள செயற்படுத்த நடவடிக்கை

## இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாணத்தில் இயங்காதுள்ள இந்துக்குருமார் குருகுலத்தை மீளவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்த குருகுலம் அமைந்துள்ள காணியை நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கி அதன் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
யாழ். மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மக ளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை சந்தித்து இந்து குருகுலத்தை மீளவும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரியிருந்தனர். இதற்கிணங்க நேற்று முன்தினம் பிற்பகல் இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனை அவரது அமைச்சில் சந்தித்து பேசிய பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் குருகுலத்தை மீள இயங்கச் செய்யவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறினார்.
2003 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சராக தி. மகேஸ்வரன் பதவி வகித்த காலத்தில் யாழ்ப்பாணம், இந்துக் குருமார் குருகுலம் அமைக்கப்பட்டது. யாழ். மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வந்த இந்த குருகுலத்தின் செயற்பாடுகள் 2013 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டன. இதனை இந்து கலாசார திணைக்களம் பொறுப்பேற்றிருந்தது. இதனால் குருகுல சேவைகள் இடம்பெறவில்லை.
இந்த நிலையிலேயே இந்து கலாசார அமைச்சர் சுவாமிநாதனுடனான இந்தப் பேச்சு இடம் பெற்றது. குருகுலம் அமைக்கப்பட்ட காணியை நீண்டகால குத்தகைக்கு பெற்றுக்கொடுத்து அதற்கான தளபாடங்கள், மற்றும் நிதி உதவியினை அமைச்சு வழங்க வேண்டுமென பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்ட அமைச்சர் சுவாமிநாதன் இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற)



*தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் முசலி பிரதேசத்தில் தேசிய போசாக்கு தொடர்பிலான சிறப்பு கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடத்தப்பட்டது. முசலி சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ் தலைமையில் இடம் பெற்ற குறித்த கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அன்ரன் சிசில், சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார போசாக்கு உத்தியோகத்தர் கே.சுதர்மன் கௌரவ விருந்தினரர்களாக மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் மாவட்ட இணைப்புச் செயலாளர் பத்திநாதன் ஜெரோம், மன்னார் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜே.ஜே. கெனடி ஆகியோர் கலந்து கொண்டனர். வைத்தியர்கள், அதிபர்கள் எனப் பலர் கலந்து கெண்டு தேசிய போசாக்கு தொடர்பிலான சிறப்பு கண்காட்சியை பார்வையிட்டனர். (ற–56)*

## நாகபூசணி அம்மன் மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 26
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் பத்தாம் நாள் மஞ்சத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. 108 சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட அபிஷேகம் இடம்பெற்று, கைலாச வாகனத்தில் அம்மன் வீதியூலா இடம் பெறும். இரவு மேள வாத்தியங் களுடன் சித்திரத்தேர் திருமஞ்சம் இடம் பெறும். (ஐ)

## சிறுவர் பூங்கா திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 26
சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் எஸ்.ஆர்.கனகநாயகம் சிறுவர் பூங்காத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்நிகழ்வில்பிரதமவிருந்தினராக ஜனாதிபதியின் சட்டத்தரணி க.கனக ஈஸ்வரன் கலந்து கொள்வார். (ஐ)

## விபத்தில் ஒருவர் காயம்

அளவெட்டி, ஜூன் 25
நேற்றுமுன்தினம் காலை கே.கே. எஸ். வீதி மருதனார் மடம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் அரியாலை கண்டி வீதியைச் சேர்ந்த குணராஜா நிரோஜன் (வயது30) என்பவர் காயமடைந்தநிலையில்தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற–36)

# முல்லைத்தீவில் நடைபெற்ற வயல் விழா

முல்லைத்தீவு, ஜூன் 26
முல்லைத்தீவில், வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தலைமையில் நேற்று வயல் விழா இடம்பெற்றது.
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் புளியங்குளம் பகுதியில் காலை இடம்பெற்ற நிகழ்வில், நிலக்கடலை செய்கை மற்றும் புதியவகை நிலக்கடலையின் அறிமுகம் என்பவை இடம்பெற்றன. அத்துடன் நிலக்கடலையை பிரித்து எடுக்கும் புதிய இயந்திரமும் அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த நிகழ்வில் அமைச்சருடன், வட மாகாண விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
நிகழ்வில் உரையாற்றிய விவசாயம் அமைச்சர் தெரிவித்ததாவது:–
மன்னார் கயுவத்தை இராணுவ முகாமில் 6 ஆயிரம் ஏக்கர் காடு



அழிக்கப்பட்டு மூங்கில் பயிரிடப்பட்டுள்ளது. அதுபோன்று வவுனியாவிலும் காடு அழித்து மூங்கில் நடுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி மன்னாரில் காட்டுக்குள் 65 ஏக்கர் அழிக்கப்பட்டு இரகசியமாக அன்னாசிச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மண்டைதீவில் அமைச்சின் அனுமதியின்றி கட்டப்படவிருந்த விடுதிக் கட்டுமானப்பணிகள் தடுக்கப்பட்டுள்ளது. அந்த விடுதி கட்டப்படுவதால் ஏற்படும் சூழல் பாதிப்புக்கள் இவ்வாறான திட்டங்கள் மறைமுக நிகழ்சி நிரலிற்கு அமையவே நடைபெறுகின்றதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. – என்று தெரிவித்தார். (ற)

## விநாயகர் திருவுருவம் பிரதிஷ்டை

யாழ்ப்பாணம்,ஜூன் 26
வயாவிளான் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில், விநாயகர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்ட முதலாம் வருட நிறைவையொட்டி விசேட அபிடேக ஆராதனைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.(ஐ)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 26
குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு 'கீதை காட்டும் பாதை' எனும் கருப்பொருளில் ஆன்மீக நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை இல 18, குமாரசுவாமி வீதி, கந்தர் மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவை களமிறக்கினால் சுதந்திரக் கட்சி தோற்றுவிடும்

## அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோற்றுப்போகும். தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் மஹிந்தவுக்குக் கிடைக்காது. பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்ள வேண்டும். – இவ்வாறு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராகக் களமிறக்கக் கூடாது என்பதே எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ சிறிலங்கா சுதந்திக் கட்சியை ஒரு போதும் பிளவுபடுத்த மாட்டார்கள். கட்சியின் ஆதரவாளர்களை அவர்கள் நடுத்தெருவில் விட்டு விடமாட்டார்கள்.

மஹிந்தவும் மைத்திரிபாலவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அத்தியாவசியமானவர்கள்.பொதுத்தேர்தல் பரப்புரைகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ அவசியம் தேவைப்படுபவராவார்.

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகள் இழக்கப்பட்டமையே தோல்விக்குக் காரணம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்கள் மஹிந்தவைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காக ஆர்வமுடன் வாக்களித்தார்கள். எப்போதும் தேர்தல்களில் முஸ்லிம்களின் வாக்களிப்பு வீதம் 60 ஆகவே இருக்கும். ஆனால் கடந்த ஜனாதிபதித்தேர்தலில் 80 வீதமான முஸ்லிம்கள் தமது வாக் குகளைப் பயன்படுத்தினார்கள்.

எனவே எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் சிறுபான்மை மக்களையும், சிறுபான்மைக் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டே தேர்தலில் களமிறங்கவுள்ளது. – என்றார்.(ற)

# மஹிந்தவை நிராகரித்து சிக்கலில் விழுந்துள்ளோம்

## அமைச்சர் ஹக்கீம் கூறுகின்றார்



மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து அவரை நிராகரித்து தற்போது பிறிதொரு சிக்கலில் வீழ்ந்துள்ளோம். அமைச்சரவையில் எதேச்சாதிகாரமாகச் செயற்படும் சிலர் சுதந்திரக் கட்சியில் ஒட்டிக்கொண்டு ஜனாதிபதியின் ஆசனத்தை ஆக்கிரமிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இந்த விடயத்தில் சு.க விழிப்பாகவும் எச்சரிக் கையாகவும் இருப்பது அவசியம். – இவ்வாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரி வித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் அவருடன் எனக்கு முரண்பாடுகள் காணப்பட்ட போதிலும் தற்போதைய அமைச்சரவையில் பேசுவதற்குக்கூட எமக்கு சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுகின்ற வகையில் சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரண்டாவது நாளாகவும் இடம்பெற்ற புதிய தேர்தல் முறைமை தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

புதிய தேர்தல் முறைமையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு சர்வாதிகாரப் போக்குகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் பல சந்தர்ப்பங்களில் எனக்கும் அவருக்கும் இடையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டு வந்தன. எனினும் இன்றைய அமைச்சரவையில் எமது குரல்கள் நசுக்கப்படுகின்றன. எமது கருத்துக்களை, ஆலோசனைகளை முன்வைப்ப தற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப் படுவதில்லை. தான் தோன் றித்தனமாக செயற்படுகின்ற சிலர் அமைச்சரவைக்குள் உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நிராகரித்த நாம் தற்போது வேறு ஒரு சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். அமைச்சரவைக்குள் இருக்கும் சிலர் சுதந்திரக் கட்சியில் ஒட்டிக் கொண்டு ஜனாதிபதியின் ஆசனத்தை ஆக்கிரமிப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். இந்த விடயம் தொடர்பில் சுதந்திரக் கட்சி விழிப்பாகவும் எச்சரிக்கையுடனும் இருத்தல் வேண்டும். – என்றார். (ற)



# பொதுமக்கள் பணத்தை வீணடிக்க வேண்டாம்

## ஜனாதிபதி மைத்திரி கோரிக்கை

பொது மக்களின் பணத்தை சுவரொட்டிக ளுக்காகவும், பதாகைகளுக்காகவும் வீணடிக்க வேண்டாம் என ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் நலனை பாதுகாக்கும் பொருட்டு 'நிரோகா' என்ற புதிய அதிர்ஷ்ட இலாப சீட்டு அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் .இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி காலத்தின் போது சுவரொட்டிகளுக்காகவும், பதாகைகளுக்காகவும் பல பில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. இதற்காக அரச நிறுவனங்களில் உள்ள பொது மக்களின் நிதி ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து அந்த நிதியை பொது மக்களின் நலனை மேம்படுத்துவதற்காக பயன்படுத்த வேண்டும்.– என்றார். (ற)

# கடந்த ஆட்சியாளர்களது தவறே போராட்டங்களுக்குக் காரணம்

## கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

திருகோணமலை, ஜூன் 26

கடந்த கால ஆட்சியாளர்கள் செய்த தவறே இன்றைய ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணம் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகள் வெளி மாகாணம், வெளிமாவட்டங்களில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோர் முதலமைச்சரை நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். முதலமைச்சர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே கிழக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கிழக்கு மாகாணத் திலவேலையற்ற பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள், வெளி மாகாணத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள், தகுதிக்கான தொழில் வழங்கப்படாதோர் என்று ஒவ் வொரு நாளும் போராட்டமும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது கிழக்கு மாகாணத்தில் புறக்கணிக்கப்பட்ட 100க்கும் மேற்பட்ட தொண் டர் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கூடிய விரைவில் நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதியுடனும் பேசியிருக்கிறேன். அதுபோன்று வெளிமாகாணங்களில் கற்பிக்கும் கிழக்கு மாகாண ஆசிரியர்களையும் இங்கே உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆயிரத்து 990 ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் தொடர்பான விவரத்தை பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மற்றும் கிழக்கு மாகாண ஆசிரியர்களை வெளிமாகாணங்களுக்கு நியமனம் வழங்கி அனுப்பி வைத்தமை போன்ற விடையங்களை முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கண்டும் காணாதது போலிருந்துள்ளார். இது சிறுபான்மைச் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகமாகும்.

அவர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எம்மால் இம்முறை வழங் கப் படவுள்ள தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் அவரது ஆட்சிக் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட 110 பேருக்கேயாகும். கிழக்கில் ஆசிரி யர் பதவி வெற்றிடம் எதுவும் இல்லை என்று சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறி வருகின்றார். இதில் எந்தளவுக்கு உண்மையுள்ளது என்பதை இன்னும் 2 வாரங்களில் ஆதாரத்துடன் வெளிப்படுத்து வேன். அதற்காக சகல ஆதாரங்களையும் திரட்டியுள்ளேன் – என்றார். (ற)

# சிங்கள மக்கள் விரைவில் இனவாதிகளை நிராகரிப்பர்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 26

முஸ்லிம்களின் மனங்களை வேதனைப்படுத்தி வருகின்ற பொது பல சேனா மற்றும் ஹெல உறுமய போன்ற இனவாத அமைப்பினரை விரைவில் சிங்கள மக்களும் நிராகரித்துவிடுவார்கள். – இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

முஸ்லிம்களின் வில்பத்து மீள்குடியேற்ற விவகாரம் தொடர்பில் நேற்று அவர் வெளியட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

வில்பத்து மறிச்சுக்கட்டி விடயத்தில் இனவாதத்தை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களின் மனங்களை புண்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, மனிதாபிமான முறையில் வட மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் நடைபெற வேண்டும். வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு இலங்கையின் பல மாகாணங்களில் கடந்த 20 வருடகாலமாக அகதிகளாக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தனர். அகதிகளாக்கப்பட்டு பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த வட மாகாண முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றத்தை இனவாதமாக மாற்றும் இனவாத அமைப்புகளும் இனவாதிகளும் கடந்த காலங்களில் இனவாத உணர்வுகளை தூண்டியவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதனை ஒரு பாடமாக கற்றுக்கொள்ள வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் கடந்த 30 வருட காலமாக போர்ச் சூழ்நிலையால் சகல இன மக்களும் பல துன்பங்களை அனுபவித்தனர். வடக்கு, கிழக்கில் போர்க் காலத்தில் வெளியேற்றப்பட்ட சகல மக்களையும் மீள்குடியேற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வில்பத்து மறிச்சுக்கட்டி விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அரச உயர் அதிகாரிகளும் மனிதாபிமானத்துடன் செயற்பட்டமை பாராட்டத்தக்க விடயமாகும். ஆனால், நல்லாட்சி ஏற்படுத்தப்பட்ட பின் வில்பத்து விடயத்தில் இனவாத சிந்தனைகள் தொடர்புபடுத்துவது நல்லாட்சி என்ற பெயருக்கே களங்கம் ஏற்படுத்தும் ஒரு விடயமாகும்.

கிழக்கு மாகாண சபையில் இனபேதமின்றி கடந்த காலத்தில் நமது நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு எதிரான இனவாதச் செயல்களைக் கண்டித்து நாம் கண்டனப் பிரேரணைகளை நிறைவேற்றி இருப்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். சில இனவாதச் சக்திகள் முஸ்லிம் மக்கள் மீது தவறான இனவாத உணர்வுகளை தொடர்ந்தும் தூண்டிவருவதை கிழக்கு மாகாண சபை முழுமையாகக் கண்டிக்க வேண்டும். – என்றுள்ளது. (ற)

cmyk
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர்களின் உதவி, வலிய வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**இடபம்:** அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். பணிகள் நிறைவேறுவதில், தடை குறுக்கிட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் வரவை விட, செலவு அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு, மனதுக்கு நிம்மதி அளிக்கும்.

**மிதுனம்:** எதிலும் விழிப்புடன் செயல்படுவது நல்லது. குடும்ப செலவுக்காக கடன் வாங்க நேரிடும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். இல்லறத் துணையின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது.

**கடகம்:** உறவினர்களிடம் பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். சமூகத்தில் கௌரவம் கூடும். தொழில், வியாபாரம் சிறக்கும். புதிய சொத்து வாங்க யோகமுண்டாகும். பிள்ளைகள் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** குடும்ப நன்மைக்காக தொடர்ந்து உழைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். சுப விடயத்தில், உறவினர்கள் ஒத்துழைப்பர். பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள்.

**கன்னி:** எதிரிகள் இடம் மாறுகின்ற சூழ்நிலை உருவாகும். நேர்மை மிக்கவராக நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரம் சிறக்க கடின உழைப்பு தேவைப்படும். பணம், வீடு ஆகியவற்றில் பாதுகாப்பு நடைமுறை அவசியம். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** இனிய நினைவுகளில் ஈடுபட்டு, மனம் மகிழும். அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சிறக்க உழைப்பு துணை நிற்கும். இயன்ற அளவில் தர்மச் செலவு செய்வீர்கள்.

**தனுசு:** மனதில் உற்சாகம், செயலில் திறமை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். மனைவி வழி உறவினர் மத்தியில், கௌரவம் கூடும். வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவீர்கள்.

**மகரம்:** உங்கள் செயல்களில் குறை காண, சிலர் முயற்சிப்பர். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல் நலனுக்காக மருத்துவ செலவு செய்வீர்கள். பிள்ளைகளின் நலன் குறித்து ஆலோசிப்பீர்கள்.

**கும்பம்:** உடல் நலத்தில் விழிப்புணர்வு கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். வீட்டில் வரவும், செலவும் சரியாக இருக்கும். அறிமுகம் இல்லாதவரிடம் பழக வேண்டாம்.

**மீனம்:** மனதில் புதிய உற்சாகம் பெறுவீர்கள். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.




## ஆடுகளின் அழகுராணி

லிதுவேனியாவில் ரமிகலா கிராமத்தில் 645 ஆவது வருடமாக இடம்பெற்ற ஆடுகளுக்கான அழகுராணிப் போட்டியில் பெருமளவான ஆடுகள் கலந்துகொண்டன.

இந்த நிலையில், தலைநகர் வில்னியஸிலிருந்து வடக்கே 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிராந்தியத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் மிராஸ் என்ற ஆடு வெற்றிபெற்றது.

அந்த ஆடு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அதனது உரிமையாளருடன் இருப்பதைப் காணலாம்.



## தமிழ்ப் படம் பாணியில் புதிய படம்

சிங்காரவேலன் தயாரிக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினியை கலாய்ப்பதை நோக்கமாகக் கொண்ட தமிழ்ப் படம் பாணியிலான படத்தில் நடிப்பதற்கு பவர் ஸ்டார் சீனிவாசன் சம்மதம் தெரிவித்துள்ளார்.


ரஜினிகாந்தின் கவனம் ஈர்க்கும் நோக்குடன், அமுதன் இயக்கத்தில் வெளியான தமிழ் படம் பாணியில், பவர் ஸ்டார் சீனிவாசனை வைத்து கலாய்ப்புப் படம் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பதாக லிங்கா விநியோகஸ்தர்கள் புதிய தகவலை வெளியிட்டுள்ளனர்.

அந்தப் படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் லிங்கா விநியோகஸ்தர் சிங்காரவேலன் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ச்சியாக வெற்றிப் படங்களையே கொடுத்துவரும் ஒரு நட்சத்திர நடிகர், ஒரு படுதோல்வி படத்தைக் கொடுக்கிறார். அந்தப் படத்தினால் வரும் நஷ்டங்களை எப்படி விநியோகஸ்தர்கள், அந்த நாயகனிடம் இருந்து திரும்பி வாங்கினார்கள் என்பதே மையக்கரு என்றும் தகவல் கசிந்தது.

எனக்குப் போட்டி எப்போதுமே சூப்பர் ஸ்டார் தான் என்று கூறிவரும் பவர் ஸ்டார் இந்தப் படத்தில் நாயகன் வேடத்தில் நடிக்க இருக்கிறார் என்றும், இந்தப் படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செவ்வாயில் பிரமிட்



பூமியில் இருந்து 57 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வது குறித்து ஆராய நாசாவால் கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து செவ் வாய் கிரகத்தின் புகைப்படங்களை அனுப்பி வருகிறது.

சமீபத்தில் அது அனுப்பிய புகைப்படம் ஒன்றில் பாறைகளுக்கு இடையே எகிப்தில் இருப்பதைப் போன்ற பிரமிட்டு போன்ற தோற்றமுடைய ஓர் அமைப்பு இருந்து உள்ளது.

இது குறித்து வேற்று கிரக உயிரினங்கள் குறித்து ஆய்வு செய்துவரும் ஆய்வாளர்கள் கூறும்போது பண்டைய நாகரிகத்தினர் கட்டிய பிரமிப்பைப்போல அது மிகவும் நேர்த்தியாக கட்டப்பட்டு உள்ளது. அது ஒளியின் தந்திரமாகத் தெரியவில்லை.

ஓர் அறிவார்ந்த கட்டடமாக உள்ளது. இந்த பிரமிட் கார் அளவில் உள்ளது. ஆனால் பெரிய அமைப்பு முறை செவ்வாயின் நிலப்பரப்புக்கு அடியில் இருக்கலாம். இதனால் பண்டைய எகிப்து நாகரிகத்தினர் செவ்வாய் கிரகத்தில் வாழ்ந்து இருக்கக்கூடும் என, ஆய்வாளர்கள், கருதுகின்றனர்.

## என்னம்மா இப்படிப் பண்றிங்களேம்மா ?

திரிசா, நயன்தாரா மோதல். இருவரும் எதிரும் புதிருமாக இருப்பதாக முன்பு தகவல் வெளி யானது. ஒரு கட்டத்தில் இதுபற்றி கருத்துத் தெரிவித்த இருவரும் எங்களுக்குள் மோதல் இல்லை என்றனர். திரிசா வீட்டில் நடந்த விழாவில் நயன்தாரா பங்கேற்று இருவரும் தோழிகளாக இருப்பதை உறுதி செய்தனர்.

தற்போது திரிசா – ஹன்சிகா இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாகப் பேச்சு உள்ளது. சுந்தர் சி. இயக்கும் அரண்மனை 2' படத்தில் திரிசா – ஹன் சிகா நடிக்கின்றனர். எனக்குதான் நிறைய காட்சி களை ஒதுக்க வேண்டும் என்று இயக்குனர் சுந்தர்சிக்கு நடிகைகள் இருவரும் அழுத்தம் கொடுக்கிறார்களாம். இதனால் படப்பிடிப்புத் தளத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சுந்தர்.சி தர்மசங்கடத்துக்கு ஆளாகி இருக்கின்றார். இந்த விவகாரத்தை இப்படியே விட்டால் சரிவராது என்பதால் திரிசா – ஹன்சிகா இருவரையும் இணைத்து படத்துக்கான பாடல் படமாக்கி உள்ளார் சுந்தர். இதற்கிடையே திரிசா – ஹன்சிகா இடையிலான பனிப்போரால் இருவரின் இமேஜும் பாதிக்கப்படும் என சினிமா நண்பர்கள் ஹன்சிகாவுக்கு அறிவுரை தந்தார்களாம்.

இதனால் உடனே இந்த விவகாரம் தொடர்பாக ஹன்சிகா கருத்துக் கூறியுள்ளார். அவர் கூறும்போது, திரிசா எனக்கு சகோதரி போன்றவர் என்றார். அவருடன் சேர்ந்து செல்பி படம் எடுத்து அதை இணைய தளத்தில் வெளியிட்டும் உள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல்

இல.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி, இலங்கை எனும் முகவரியிலுள்ள கே.கே.கே. அப்பரல்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் (KKK Apparels (pvt) Ltd) சில இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் என்பன லான்ட் ஓ'லேக்ஸ் (Land O'Lakes) நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் VEGA/BIZ+ வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படையான எழுத்து மூலமான சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது உரிமை மாற்றம் செய்யப்படவோ முடியாதென, பொது மக்களும் மற்றும் ஆடை உற்பத்தி கைத்தொழில் பிரதிநிதிகளும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். ஒரு அரச- தனியார் பங்குடமையின் பகுதியாக, ஓர் எழுத்து மூலமான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ், அதன் ஆடை உற்பத்தி வசதிகளை விரிவுபடுத்துவதற்கு கே.கே.கே. அப்பரல்ஸிற்கு பொருட்களாக நன்கொடையளிக்கப்பட்ட, இனங்காணப்படக் கூடிய மற்றும் பட்டியல்படுத்தப்பட்ட சொத்துக்கள், 33 சிங்கர் கைத்தொழில் தையல் இயந்திரங்கள், ஒரு சிங்கர் அலங்காரத் தையல் (Embroidery) இயந்திரம், 14 துணை உதவி இயந்திரங்கள், ஒரு கேர்லோஸ்கர் 62.5 கி. வோ மின்பிறப்பாக்கி (Kirloskar 62.5 KV), ஒரு டிமோ டாடா லொறி, மற்றும் ஒரு லங்கா அசோக் லேலான்ட் போக்குவரத்துப் பேருந்து என்பவற்றை உள்ளடக்குகின்றன. அத்தகைய அனைத்து சொத்துக்களும் சர்வதேச நன்கொடை நிதிகளால் நிதியளிக்கப்பட்டவை என்பதுடன் கிளிநொச்சி சமூகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட தனிப்பட்டவர்களுக்காக அர்த்தமுள்ள வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு மட்டும் உபயோகிக்கப்பட வேண்டிய பொதுப் பொருட்களாக கவனத்தில் கொள்ளப்படும். நன்கொடையாக அளிக்கப்பட்ட அனைத்து பொருட்களும் வற் (VAT Free) வரியின்றி இலவசமாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பதற்கான விசேட கவனம் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். விற்பனை, உரிமை மாற்றம், அல்லது சொத்துக்களின் கொள்வனவு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணிசமான வரிக் கடப்பாட்டை ஏற்படுத்தலாம். இந்த அறிவித்தல் பற்றிய மேலதிக விசாரணைகளுக்கு 011-7391890 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.


## வாடகைக்குண்டு

யாழ் நகரின் மத்தியில் வீடு பகுதியாகவோ அல்லது தனி அறைகளாகவோ வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் அரச உத்தியோகத்தர்களுக்கும் பெண்களுக்கும் மட்டும்.

தொடர்பு : 077 711 0960

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பிரத்தியேக ஆசிரியர் தேவை

பத்தாம் ஆண்டு ஆங்கில மொழிமூலம் வர்த்தக பாடத்திற்குத் தனிப்படவோ, குழு நிலையிலோ கற்பிக்கும் ஆசிரியர் தேவை.

தொடர்பு: 077 301 8266

(81364)(3)

## பிரத்தியேக வகுப்பு

O/L,A/L வரையான ஆங்கிலம்,ஆங்கில இலக்கண வகுப்புகள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்புபவர்களுக்கு பிரதியேக வகுப்புகள் (Personal Class)(இருப்பிடங்களுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 779 5287


# ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 21, கலீபா அப்துல் காதர் வீதியில் ஆதன இலக்கம்153/06 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் "மொகிதீன் பக்கீர் பெண் கச்சு உம்மா" என ஆதன வரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை கொழும்பு மாவட்டம், 73/18, பன்சல்கென வீதி, மீதொட்டமுல்ல, வெல்லம்பிட்டிய முகவரியாகக் கொண்ட சாகுல் கமீட் மொகமட் முஸ்தபா, பிரசித்த நொத்தாரிஸ் எம். எம். சுல்தான் அவர்களால் 1954 இல் எழுதப்பட்ட உறுதியில் குறிப்பிடப்படும் ஆதனம் முழுவதும் தனக்கே உரியதும், எவ்வித தங்குதடையின்றி நீண்ட கால ஆட்சியுமென வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும் எம்.எம்.எம்.ரமீஸ் முகதாவில் 29.06.2004 ஆம் திகதி 572 ஆம் இலக்க நன்கொடை உறுதியால் மொகமட் முஸ்தபா அகமட்டிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். மேலும் இவ்வாதனத்தை 153/6, கலீபா அப்துல் காதர் வீதியைச் சேர்ந்த தற்போது 73/18 பன்சல்கென வீதி, மீதொட்டமுல்ல, வெல்லம்பிட்டியாவில் வசிப்பவருமான மொகமட் முஸ்தபா அகமட் என்பவர் மொகமட் முஸ்தபா மொகமட்டிற்கு பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும் எம்.எம்.மன்சிர் முகதாவில் 13 ஆம் இலக்க 15.08.2010ஆம் திகதிய அறுதி உறுதியால் வழங்கப்பட்டுள்ளது.

ஆதன விவரம்- வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை இது உத்தரவு பெற்ற நில.பர.அளவையாளர் கே. கனகசபை அவர்களின் வரைபட இலக்கம்1616/04 -22.05.2004 இல் துண்டு் எனக்காட்டப்பட்ட நில. பர. 00குழி 16.76 இதற்கு எல்லை.

வடக்கு -எம். எஸ். சுபைர், கிழக்கு -ஒழுங்கை, தெற்கு -எம்.எஸ். மொகைடீன், மேற்கு - அப்துல்காதர்

தற்போது இவ்வாதனத்தை மொகமட் முஸ்தபா மொகமட் தனது பெய ரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித் துள்ளார். எனவே இவ்வாதனத் திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் முஸ்தபா மொகமட் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.'

# பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்
## மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம்

கீழே குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்களில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத கீழே குறிப்பிடப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை 16.07.2015 ஆம் திகதி பி.ப 2.30 வரை யாழ்ப்பாண மேல்நீதிமன்றக் கணக்குக்கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/=ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிடப்பட்ட வாகனங்களை குறப்பிடப்பட்ட நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். வாகனம் தொடர்பான விவரங்களும் மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திர வைப்புத்தொகை போன்ற விவரங்களும் பின்வருமாறு.

| வாகன விவரம் | மீளளிக்கக்கூடிய வைப்பு(ரூபா) | நீதிமன்றத்தின் பெயர் |
|---|---|---|
| 1) Mahendra Maximo (Red Colour - Small) | 5000.00 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை |
| 2) Mahendra Maximo (White Colour - Small) | 5000.00 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 3) Bajaj Auto Re 2 Stroke | 2000.00 | மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், மல்லாகம் |
| 4) Bajaj Auto (AR 4S Green) | 2000.00 | நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி |

கேள்விப்பத்திரங்களைக் கௌரவ மேல்நீதிமன்ற நீதிபதி, மேல்நீதிமன்றம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2015.07.16ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல்நீதிமன்றக் கணக்கீட்டுக்கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender box) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "நீதிமன்றத்தின் வாகனம் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் - 2015" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மா.இளஞ்செழியன்
மேல்நீதிமன்ற நீதிபதி/மேல் நீதிமன்றப் பொறுப்பதிகாரி தலைவர்
மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்


தொழில்சார் கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

DMI COMPUTER EDUCATION

**Diploma in Hardware Engineering**

கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கும் மற்றும் கணினியில் ஏற்படும் பிழைகளை திருத்திக்கொள்வதற்கும் ஏற்றவகையில் பயிற்சியளிக்கப்படுகின்றது.
நமது கணினிகளை நாமே சேவிஸ் செய்து பராமரித்துக் கொள்வதற்கும், சுயதொழில் - வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொள்வதற்குமான கற்கை நெறியாகும்.

**Diploma in CCTV Technician**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் CCTV தொழில்நுட்பவியலாளர்களின் தேவை கருதி நீங்களும் CCTV துறையில் சிறந்த தொழில்நுட்பவியலாளராவதற்கு...

Assembling a CCTV system - IP camera installation PTZ camera installation Network (LAN, WAN, IP) IP Address Configuring Final project and revision

**Dip. in Video Production & Multimedia**


Advanced video editing மென் பொருட்களை உள்ளடக்கி நவீன தொழில்நுட்பங்கள், visual effect களுடனான HD video editing கற்கை நெறிகள். Free Effects, Software,background Video, Adobe Premiere cs6, Adobe Photoshop cc Pinnacle Studio 17, After effects, EDIUS Pro 7, Adobe Audition& Studio Project

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403

நெல்லியடி — M.M.V வீதி — Tel.:021-226 2470
சாவகச்சேரி — கண்டி வீதி, (HNB அருகில்) — Tel.:021-227 0775
சுன்னாகம் — 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) — Tel.:021-224 1970
கிளிநொச்சி — A9 வீதி No.111 குருக்குபுரம் — Tel.:021-228 5655


# சேவைநலன் பாராட்டு



விநாசித்தம்பி புவனேந்திரன்
(பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர்)

மகத்தான சேவைக்கு மனதார விடை கொடுத்து
மனை நோக்கிச் செல்லும் உத்தம ஆசானே!
உளமார உவகையுடன் வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு....... வாழ்க பல்லாண்டு.

**சேவை விவரம்**

- முதல் நியமனம் 26.01.1998
- சேவை முன் பயிற்சி 27.01.1998 - 22.02.1998
- யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் 23.02.1998 - 01.03.1999
- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 02.03.1999 - 14.01.2001
- யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் 15.01.2001 - 17.01.2002
- யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் 18.01.2002 - 27.06.2015

**இணைந்த சேவை**

- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 04.08.2004 - 31.12.2005
- யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் 17.02.2006 - 31.10.2008
- யா/கச்சாய் அ.த.க பாடசாலை 01.11.2008 - 31.12.2013

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிகழகம்
யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் - மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற தாக்குதல் சம்பவம்: மாணவர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாண நீதிமன்றத் தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் ஒரு சந்தேகநபர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர், புதுமடம், மானிப்பாய் பகுதியைச்சேர்ந்த 16 வயதுடையவரும் உடுவில் பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவருமாவார். தாக்குதல் சம்பவம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட காணொளிகளிலும் ஒளிப்படங்களிலும் அவர் உள்ளார் எனத் தெரிவித்தே பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேக நபரை இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் கேசவன் உத்தரவிட்டார். (ற–103)


## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் தம்பிஐயா மஞ்சூரன் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
இராஜேஸ்வரி தம்பிஐயா



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இடைக்குறிச்சி
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்,
வரணி.

(61385) (10.6.3)

## துயர்பகிர்கிறோம்

எமது நிறுவனத்தில் பணிபுரிந்த
சுப்பையா பிறேமகாந்த்
அவர்கள் 23.06.2015 அன்று மறைந்த செய்தியைக் கேட்டு துயரடைகிறோம்



அன்னாரின் இறுதிக்கிரியைகள் 44/10,மணல் தரைலேன், கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அன்னாரின் இழப்பால் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நியூ மைதிலி ஜுவலர்ஸ் நிறுவன
உரிமையாளர், ஊழியர்கள்.
இல.38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(45.3)

## நினைவலைகள்

21 ஆம் நாள்
வீட்டுக்கிருத்திய
அழைப்பும், நன்றிநவிலலும்

12 ஆம் ஆண்டு
நினைவஞ்சலி







திருமதி
வேதவல்லி பரமானந்தம்

விஸ்வப் பிரம்மஸ்ரீ
துரையப்பா பரமானந்தம் (பத்தர்)

10.06.1945 ← தோற்றம் → 27.09.1929
04.06.2015 ← மறைவு → 04.07.2003

கடந்த 04.06.2015 சிவபதமடைந்த திருமதி வேதவல்லி பரமானந்தம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (26.06.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியும் பல வழிகளில் உதவிகள் பல புரிந்தோருக்கும்,வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

18/5, கோவில் பிள்ளையார் வீதி,
வல்லாரப்பள்ளை வட. பேந்த,
யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோவிலடி)

(61381) (45.6.3)

குடும்பத்தினர்.
021 222 1799


# வீதியைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை

## உரும்பிராய் ஞானவைரவர் கோயில் வீதி மக்கள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 26
வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட உரும்பிராய் ஞானவைர வர் கோயில்வீதிப்புனரமைப்புவேலைக்கு கற்கள் பறிக்கப்பட்டு நீண்ட நாள்கள் ஆகியுள்ள நிலையில், இதுவரை புனரமைப்புபணிகள்ஆரம்பிக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான குறித்த வீதி நீண்ட காலமாக புனரமைக்காத நிலையில் காணப்படுகின்றது என்றும், இதனால் அந்த வீதியால் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்றும் தெரி விக்கப்பட்டது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு வீதி புனரமைப்புக்காக வீதி அபிவிருத்தி திணைக்களத்தினரால்சல்லிக்கற்கள் பறிக்கப்பட்டன. ஆயினும் இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் வீதியைப் புனரமைக்காமல் கற்களை பரப்பி இருப்பதால் வாகனங்களில் செல்வோர் கற்களில் சறுக்கி விழும் அபாயமான சூழ் நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த வீதியை சுமார் 200 குடும்பங்கள் தினமும் போக்குவரத்துக்காக பயன்படுத்துவதாகவும் சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக குறித்த வீதியை புனரமைத்து அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி வகுக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# ஒன்றரை கிலோ கஞ்சா சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ்ப்பாண நகரப்பகுதியில் கே.கே. எஸ் வீதி, மானிப்பாய் வீதிச் சந்தியில் ஒன்றரை கிலோ நிறையுடைய கஞ்சா கடந்த செவ்வாய்க் கிழமை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் அது தொடர்பான சந்தேக நபர் பொலிஸாரிடம் இருந்து தப்பிச் சென்றுள்ளார். குறித்த நபரைக் கைது செய்வதற்கான தீவிர நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கஞ்சா விற்பனை செய்யும் நபருடன் தொலைபேசியில் தொடர்புகளை ஏற்படுத்திய பொலிஸார் அவரை கைது செய்வதற்காக தமக்கு கஞ்சா தேவைப்படுவதாகவும் குறித்த இடத்துக்கு வருமாறும் தொலை பேசியில் அழைத்துள்ளனர். அதனை யடுத்து முச்சக்கர வண்டியில் அவ்விடத்துக்கு வந்த சந்தேகநபர் பொலிஸாரால்தான் தனக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளதாக சந் தேகித்து அங்கிருந்து தப்பிச்சென் றுள்ளார்.

தப்பிச்சென்ற நபர் மானிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவரை கைது செய்யவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற–103)

# மாணவியை தாக்கிய யுவதி கைது

நெல்லியடி, ஜூன் 26
வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் பாடசாலை சென்று கொண்டிருந்த 13 வயது மாணவியொருவர் மீது தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 30 வயது யுவதி ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நாகர்கோயில்மகா வித்தியாலயத்தில்தரம் 8 இல் கல்வி பயிலும் 13 வயது மாணவியே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். குறித்த மாணவி காலை 7 30 மணியளவில் பாடசாலை நோக்கி சென்று கொண்டிருந்த போது அவரை வழி மறித்த யுவதி மாணவி மீது தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டது அதையடுத்து மாணவியின் பெற்றோரால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த யுவதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–109)




5 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 22.09.1937
உதிர்வு 23.06.2015

அமரர்
எலிசபேத் நீக்கிலாஸ்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், அதிபர் வண்ணேரிக்குளம்)

கடந்த 23.06.2015, ஓய்வுபெற்ற ஆசிரியரும், அதிபருமான எலிசபேத் நீக்கிலாஸ் அவர்களின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மூலமாகவும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், குறிப்பாக எமது துயரில் பங்குகொண்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும், இறுதி நிகழ்வில் கலந்து ஆறுதல் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

குறிப்பு: நாளை (27.06.2015) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் நினைவுதினத்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டு நிற்கின்றோம்.

இல.24B, ஐயனார்புரம், வண்ணேரிக்குளம்.
0777668815 (அஜந்தன்)

குடும்பத்தினர்.


# தொழில்நுட்ப மாணவருக்கான கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூன் 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2016/2017 ஆண்டுகளில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைகளில் தொழில்நுட்பவியல் பாடங்கள் கற்கும் மாணவர்களுக்கான 'தொழில்நுட்ப உலகை வென்றிடுவோம்' என்னும் தொழில் வழிகாட்டல் செயலமர்வுநேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது

"வேள்ட் விஷன்" நிறுவன அனுசரணையுடன் கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலகால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மூன்று நாள் செயலமர்வு நேற்று முதல் இடம் பெறுகிறது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப் பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் என்.யோகராஜனும் சிறப்பு விருந்தினர்களாக வேள்ட் விஷன் நிறுவன திட்டமிடல் பணிப்பாளர் தயாளன், யாழ்.பல்கலைக்கழக கல்லூரி விரிவுரையாளர் கே.சண்முகநாதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு கைநூல்களும் வழங்கப்பட்டன. (ற–9)

# பசுமாட்டை அடித்துக் கொன்ற இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 26
தனிப்பட்ட பகைமை காரணமாக பசு மாடு ஒன்றை அடித்து கொலை செய்த குற்றச்சாட்டில் கொழும்புத் துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21ஆ ம் திகதி கொழும்புத் துறைப் பகுதியில் மாடுகளை வளர்த்து வரும் குடும்பஸ்தர் ஒருவர் இரவு நேரம் பால் கறக்க சென்ற வேளை தனது வளவில் இரண்டு இளைஞர்கள் நிற்பதைக் கண்டு அவர்களை விசாரித்துள்ளார். அதையடுத்துஇரண்டு இளைஞர்களும் அவரைத் தாக்கி காயப்படுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர். இருநாள்கழித்து அந்த இரண்டுஇளைஞர்களும் குறித்த குடும்பஸ்தரின் மாட்டைத் தாக்கி அதனை கொலை செய்துள்ளனர். சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலி ஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை இம் மாதம் 29 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் கேசவன் உத்தரவிட்டார். (ற–103)

# விபத்தில் ஓட்டோ சாரதி காயம்

தென்மராட்சி, ஜூன் 26
வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வேலிக்குள் புகுந்ததில் அதன் சாரதி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் நடந்துள்ளது.

சுன்னாகம் கடவுப்புலவு சுப்பிரமணியம் சுகுமார் (வயது–34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய


# கைலாய வாகனத் திருவிழா

## நாளை (27.06.2015) சனிக்கிழமை

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின்
2015 ஆம் ஆண்டுக்கான பெருந்திருவிழா வரிசையில்

**கைலாய வாகனத் திருவிழா**

நாளை (27.06.2015) சனிக்கிழமை வெகு சிறப்பாக இடம்பெறத்
திருவருள் பாலித்துள்ளது
திருவிழாவின் போது விசேட நிகழ்வாக ஈழத்தின் மற்றும் தமிழ்நாட்டின்
புகழ்பூத்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின்
**நாத இசைச் சங்கமம்** இடம்பெறும்.



## நாத இசைச் சங்கமம்

ஆஸ்தான வித்துவான் சிவதாஸ் குழுவினர்

**நாதஸ்வரம்**

- கோண்டாவில் நாதஸ்வர இசையருவி
  VK. **பஞ்சமூர்த்தி**
- நாதஸ்வர இளவரசன் பஞ்சமூர்த்தி குமரன்
  இளம் நாதஸ்வர வித்துவான் **ப.பிருந்தாவன்**
- இளம் நாதஸ்வர வித்துவான் K. **கஜானனன்**
- இசை ஞானபூபதி நாதஸ்வர கலாசாஹரம்
  **ஜெ. சிவதாசன்**
  கோண்டாவில்

**தவில்**

- தவில் உலகமாமேதை அமரர் NR. சின்னராசா
  வின் புதல்வன் NRS. **சுதாகரன்**
- தவில்நாத இளவரசன் B. **நர்மதன்** (மது)
- தவில் மா முரசு N. **பிரசன்னா**
- இளம் தவில் வித்துவான்
  P. **விபூர்ணன்**
- ஸ்ரீகாஞ்சி காமகோடிபீட ஆஸ்தான
  வித்துவான் திண்டிவனம் (இந்தியா)
  **வெ.சரவணன்**

**கைலாயவாகனத் திருவிழா உபயகாரர்கள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதையில் இடையூறு: ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 26
பொது இடத்தில் வைத்து மதுபானம் அருந்தி பாதையில் பயணித்தவர்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவித்து அநாகரிகமாக நடந்து கொண்ட மணியம்தோட்டம், வேலணை, கிளிநொச்சி, நல்லூர் மற்றும் கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த ஐந்து பேர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். அவர்களை தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பதில் நீதிவான் கேசவன் உத்தரவிட்டார்.(ற-103)

# தொழில் முயற்சியாளருக்கு குறைந்த வட்டியில் கடன்

## சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக

வலி.மேற்கு, ஜூன் 26
வலி.மேற்கு, சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் ஊடாக தொழில்முயற்சியாளர்களுக்கான விசேட கடன்கள்குறைந்த வட்டியில் வழங்கப்படுகின்றன.
வலி. மேற்கில் உள்ளூராட்சி சபையில் பதிவுசெய்யப்பட்ட சிறு தொழில் முற்சியாளர்கள் உடன் வங்கியுடன் தொடர்புகொண்டு இந்தக் கடன்களைப் பெறலாம் என வங்கி முகாமையாளர் உலகநாதன் ராகு லன் அறிவித்துள்ளார்.
வலி.மேற்கில் மரக்காலை, சலூன், சேர்விஸ் ஸ்ரேசன், கராஜ், உணவு கையாளும் நிறுவனங்கள், தையல் கடைகள் உட்பட 25க்கும் மேற்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்கள் 5லட்சம் ரூபா கடன், 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களை இரு தொகுதிகளாகப் பெற்றுக் கொள்ளலாம்.
5 லட்சம் ரூபாவுக்குட்பட்ட கடன்களுக்கு 11.5 வீதமான வட்டியையும், 5லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களுக்கு 11வீதமான விசேட வட்டியும் அறவிடப்படும்.
மேலும் 5 லட்சம் ரூபா கடன் பெறவிரும்பும் தொழில் முயற்சியாளர்கள் இரு அரச அலுவலர்களின் பிணைகளுடன் உடன் கடனைப் பெறலாம்.
5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களை பெறவிரும்புவோர் சொத்துக்களின் உறுதிகளை அடமானமாக வைத்து கடன் பெறலாம் என சங்கானை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் உலகநாதன் ராகுலன் அறிவித்துள்ளார்.(ற-50)

# ஏழிசை மாலை நாளைய தினம்

தென்மராட்சி, ஜூன் 26
தென்மராட்சி கல்வி வலய இசையாசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நடத்தும் 'ஏழிசை மாலை 8' நாளை பி.ப. 2.30 மணிக்கு உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண வருமானத் திணைக்கள பிரதி ஆணையாளர் கந்தசாமி கமலரூபனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.மாணிக்கம், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம், ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
விருந்தினர்களின் மங்கல விளக்கேற்றலுடனும், மாணவர்களால் தேவாரம், கிறிஸ்தவ கீதம், ஏழிசை மாலை கீதம் ஆகியவற்றுடனும் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
வரவேற்புரையை வலய சங்கீத பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பு.ஈழநேசன் நிகழ்த்துவார்
நிகழ்வில் கலாவித்தகர் இசைக் கலைமாணி செல்வி யோ.கஜேந்திராவின் இசைக்கச்சேரியும், உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் பியானோ இசையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவன் ம.சேகரனின் தனியிசையும், உசன் இராமநாதன் மகா வித்தியாலய இசையாசிரியை இசைக் கலைமாணி திருமதி தி.சுபாகரனின் பாட்டும் இடம்பெறும்.
அதனையடுத்து சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவனின் இயலும் இசையும் செய்முறை விளக்கத் தொடர் இடம்பெற்று உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களின் வாத்திய பிருந்தாவும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் குழுப் பாடலும் இடம்பெறும். (ற-9)

# போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு பேரணி

தென்மராட்சி, ஜூன் 26
சர்வதேச போதைப் பொருள்பாவனை மற்றம் சட்டவிரோத கடத்தல் என்பவற்றுக்கு எதிரான தினத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயத்தினர் இன்று காலை 8 மணிக்கு மூன்று பாடசாலைகளில் விழிப்புணர்வு அமைதி வழிப் பேரணியை நடத்தவுள்ளனர்.
வலயத்தின் உயர்தர வகுப்பு மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், விழிப்புணர்வு பதாகைகளைத் தாங்கிய வண்ணம் அமைதிப் பேரணியில் கலந்து கொள்ளவுள்ளனர்.
கொடிகாமம் பிரதேச மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லாரி முன்றிலில் பேரணியை ஆரம்பித்து கச்சாய் வீதி, ஏ-9 வீதி ஊடாக கொடிகாமம் புகையிரத நிலையம் வரையும், சாவகச்சேரி பிரதேச மாண்வர்கள் , அதிபர்கள், ஆசிரியர்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாக சாவகச்சேரி பஸ் நிலையம் வரையும், நாவற்குளி பிரதேச மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் நாவற்குளி மகா வித்தியாலய முன்றலில் ஆரம்பித்து செல் வாநகர் ஊடாகச் சென்று மீள வித்தி யாலயம் வரையும் பேரணி நடத்தவுள்ளனர். (ற- 9)

# தாயொருவரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 26
கச்சேரி நல்லூர் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் காணாமல் போயுள்ளார் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.
காணாமல்போன பெண் யாழ்ப்பாணத் திலுள்ள சுத்திகரிப்பு நிறுவனமொன்றில் கடமையாற்றுவதாகவும் கடந்த திங்கட்கிழமை மதிய உணவுக்கு வீட்டுக்கு வந்து திரும்பவும் வேலைக்கு சென்றதாகவும் எனினும் வேலை முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை எனவும் கூறப்படுகின்றது.
குறித்த பெண்ணினுடைய கையடக்கத் தொலைபேசியும் தற்போது செயலிழந்த நிலையில் இருப்பதால்அவரைப்பற்றியவிவரங்களை அறிந்து கொள்ளமுடிய வில்லை எனதெரிவித்து அவருடைய தாயாரால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. காணாமல்போன பெண்ணினுடைய கணவர் வெளிநாடொன்றில் தொழில் புரிந்து வருவதாகத் தெரியவருகின்றது. (ற-103)

# ஆடுகள் மாயமாவதாக பொதுமக்கள் முறைப்பாடு

தென்மராட்சி, ஜூன் 26
சாவகச்சேரி கல்வயல் பகுதியில் மேய்ச்சலுக்குக் கட்டப்படும் ஆடுகள் மாயமாக மறைவதாக அப்பகுதி மக்கள் கூறுகின் றனர்.
தினமும் மாலை வேளைகளில் மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடப்படும் ஆடுகளே இவ்வாறு மாயமாவதாக அவர் கள் கூறினர்.
அதேவேளை, அண்மையில் இரும்பு சேகரிக்க வந்தவர்கள் வாகனத் தில் ஆடுகளைத் திருடிச் சென்ற வேளையில் பொது மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ற-9)

# வருடாந்த பொதுக்கூட்டம்

தென்மராட்சி, ஜூன் 26
அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு ஜா எல விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜேஸ்வரி தம்பிஐயா



பிறப்பு 27.07.1939 இறப்பு 24.06.2015

தென்மராட்சி மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி தம்பிஐயா 24.06.2015 மதியம் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் தம்பிஐயாவின் (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு - திருமதி தம்பையாவின் அன்பு மகளும் , காலஞ்சென்ற திரு. திருமதி கந்தையாவின் அன்பு மருமகளும் சிவநேசன் (Swiss), செந்தூரன் (France) , மஞ்சூரன் (யா/வரணி இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயம்) ,வனஜா, ரஜனா(யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் ஜெனிதா (Swiss), விஜிதா (Swiss) ஆகியோரின் அன்புத் தாயாரும் கேதினி, ரேணுகா (தீபா நன்னடத்தை உத்தியோகஸ்த்தர் சாவகச்சேரி) செல்வரத்தினம் (உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ரவிக்குமார் (கோட்டக்கல்வி அலு வலகம் தென்மராட்சி), சிவசங்கர், பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும். விதுர்சன் (Swiss), விதுர்சனா (Swiss), லதிர்சா (France), சதுர்ஷா(France), அதிர்ஸ்(France), துவானிகா, லவனிகா, சிருஸ்டியன் , விநோதன் (UK), சத்தியசுதன் - சோபிஜா , லக்ஷ்மியா , விகானி, தவினுகன் , பிரதீப் - ராகவி(Swiss), ரவீணா(Swiss), பீருஜா(Swiss), துசானி(Swiss), மீனுஜா(Swiss) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும். சமிராவின்(Swiss) அன்புப்பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு வேம்பிராய் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
மஞ்சூரன்(Srilanka)+94777633101
சிவநேசன்(Swiss)+41552834287
செந்தூரன்(France)+33952445228

தகவல் : குடும்பத்தினர்.
சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.



தோற்றம் 19 . 04 . 1938
மறைவு 24 . 06 . 2015

## திருமதி தேவிகாராணி சண்முகரத்தினம்

காரைநகர்,கணக்கனார் கண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி தேவிகாராணி சண்முகரத்தினம் 24.06.2015 புதன்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற சண்முகரத்தினத்தின் (இளைப்பாறியவங்கிஉத்தியோகத்தர்)அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான S.R .செல்லத்துரை (S.R.S) இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதியரின்அன்பு மருமகளும் பாலேந்திரா,பாலராணி,பாலரஞ்ஜினி,காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன்,பாலேஸ்வரன்,சூரியகுமார் ஆகியோரின் அன்புத்தாயாரும் பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற ஜெகதீசன் மற்றும் விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தேவதாசன் மற்றும் தேவகல்யாணி காலஞ்சென்ற தேவபாலன் மற்றும் தேவரத்தினம், தேவரோகினி ஆகியோரின் அன்பு சகோதரியும்,ஜெயராணி- மதியழகன், குபேரன், குபேரதி-மயூரன்,சேயோன், சஜீத், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சயனின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.00 மணியளவில் சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணக்கனார் கண்டி,
காரைநகர்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P: 021 221 1729

# மரண அறிவித்தல்

## சுப்பையா பிறேமகாந்



அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மணற்தறைலேன் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பிறேமகாந் 23.06.2015 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் சுப்பையா-இராசாத்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கொலற்ரின் மற்றும் சாந்தி தம்பதியரின் அன்பு மருமகனும், சோபாவின் அன்புக் கணவரும், யுவகாந்தின் அன்புத் தந்தையும், பிறேமதாஸ், பிரபாகரன், பிரதீபன், காலஞ்சென்ற பிறேமரதி மற்றும் பிறேமறீயன் பிரியதர்சினி, பிரசாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2015) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

44/10, மணற்தறைலேன்,
கந்தர்மடம்.

தகவல்: குடும்பத்தினர்.
(61389)(10.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனர்களால் திருத்தம் செய்யக்கூடிய புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசி

கைபேசி உற்பத்தியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்ற அதே சமயத்தில் ஒவ்வொரு நிறுவனமும் புதிய தொழில்நுட் பங்களைப் புகுத்தி வருகின்றன.
இதற்கிணங்க Bas van Abel என்ற நிறுவனம் பயனர்களால் திருத்தங்கள் மற்றும் மேம்படுத் தல்களைச் செய்யக்கூடிய புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை வடிவமைத்துள் ளது.
FairPhone என்ற இந்தக் கைபேசி Tantalum, வெள்ளீயம், தங்குதன் மற்றும் தங்கம் என்பவற்றைப் பயன்படுத்தி உருவாக்கப்பட் டுள்ளது.
மேலும் இது அப்பிள் மற்றும் சம்சுங் தயாரிப்புகளுக்கு இணையானதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.
இதேவேளை இந்த நிறுவனம் கடந்த இரண்டு



வருடங்களில் 60,000 ஸ்மார்ட் கைபேசிகளை விற்பனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# Ultra Fibre Optic மின்னல் வேக இணைய இணைப்பு

ஐக்கிய இராச்சியத்தில் தொலை பேசிவலையமைப்புச் சேவையை வழங்கிவரும் Virgin Media நிறுவனம் 152 Mbps வேகம் கொண்ட இணைய இணைப்பை மான்செஸ்டர் நகரில் ஏற்படுத்தி யிருப்பது யாவரும் அறிந்ததே.
இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து TalkTalk நிறுவனம் Ultra Fibre Optic தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி 940Mbps வேகம் கொண்ட இணைய இணைப்பை ஐக்கிய இராச்சியத்தின் York பகுதியில் ஏற்படுத்தியுள்ளது.
இந்த இணைப்பு Virgin Media நிறு வனத்தினால்வழங்கப்பட்டு வரும் இணைய இணைப்பு வேகத்தின் 6 மடங்கு வேகம் உடையதாகும்.
இதேவேளை இந்தப் புதிய இணைய இணைப்புக்கு புதிய கட்டணங்களையும் அந்த நிறு வனம் அறிமுகம் செய்துள்ளது.



# தேனில் தயாராகும் கார்பன் நனோ துணிக்கைகள்

மருத்துவ உலகில் காலத்துக்குக் காலம் புதிய கண்டு பிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருக் கின்றன. கார்பன் நனோ துணிக்கைகளைக் கொண்டு பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.
இந்தநிலையில் தற்போது தேன் மற்றும் நுண் அலைகளைக் (Micro Wave) கொண்டு இந்த கார்பன் நனோ துணிக்கைகளை உருவாக்க முடியும் என அமெரிக்காவிலுள்ள Illinois பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
இவ்வாறு உருவாக்கப்படும் நனோ துணிக்கைகள் 8 நனோ மீற்றர்களை விடவும் குறைந்த அளவுடை யதாக காணப்படுகின்றன என அவர்கள் தெரிவித்துள் ளனர்.
இதேவேளை உடலின் எந்தப் பாகத்திலும் செலுத்தக் கூடியதாக இருக்கும் இந்த நனோ துணிக்கைகள் மூலம் எதிர்காலத்தில் மேலும் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தேசிய போசாக்கு மாதம் ஹற்றனில் கடைப்பிடிப்பு

ஹற்றன், ஜூன் 26
அதிக பலம், ஆற்றல் மற்றும் உற்பத்தித் திறனுக்கு ஆரோக்கிய மான உணவுகள் என்ற தொனிப் பொருளில் ஹற்றனில் தேசிய போஷாக்கு மாதம் நேற்று வியா ழக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.
அதைமுன்னிட்டு பாடசாலைகளில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்து வோர் மற்றும் பாடசாலை ஆசி ரியர்கள், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு வீதி நாடகமும், பேரணியும் நடத்தப்பட்டன.
கொட்டகலை ரயில் கடவையி லிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி, கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தானம்வரை சென்று, அங்கு தேவஸ்தானத்துக்கு முன்பு வீதியில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத் தும் வகையில் வீதி நாடகம் நடத் தப்பட்டது.
இந்த நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணவர்தன, கொட்டகலை சிங்கள வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், கொட்டகலை தமிழ் மகா வித்தி யாலய மாணவர்கள் மற்றும் ஆசி ரியர்கள், சுகாதார அதிகாரிகள், ஊழியர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற)



# வெலிகந்தையில் விரைவில் சுதந்திர வர்த்தக வலயம்

பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 26
பொலன்னறுவை மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களை உள்ளடக் கியதாக வெலிகந்தை பிரதேச செயலாளர் பிரிவில் பெரிய சுதந்திர வர்த்தக வலயமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வியியல் பூங்கா வும் அமைப்பதற்கான ஆரம்ப நடவ டிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள தாக பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.
பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் அழைப்பின் பேரில் வருகை தந்த டுபாய் நாட்டின் 'காமன் குரூப்' நிறுவனத் தலைவர் ஷேக் அப்துல் றபீக் மற்றும் அவருடன் வருகை தந்த குழுவினருக்கும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுக்குமிடையில் குறித்த தினம் கொழும்பிலுள்ள ஜனாதிபதி இல்லத்தில் சந்திப்பு இடம்பெற் றுள்ளது.
குறித்த சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.
இது குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-
பொலன்னறுவை மற்றும் மட்டக் களப்பு மாவட்டங்களை உள்ளடக் கியதாக வெலிக்கந்தைப் பிரதே சத்தில் 800 ஏக்கர் காணியில் பெரும் சுதந்திர வர்த்தக வலயம் அமையப் பெறவுள்ளது. இதன் மூலம் பொலன் னறுவை, மட்டக் களப்பு மாவட்டங் களில் தொழில் வாய்ப்பற்றிருக்கும் மூவினங்களை சேர்ந்த 37 ஆயி ரம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.
அதேவேளை, இக்குழுவினருடன் இடம்பெற்ற பேச்சின் பயனாக 16 பல்கலைக் கழகங்களையும் உள் ளடக்கியதாக கல்வியியல் பூங்கா வொன்று மட்டக்களப்பு மாவட்டத் தில் 250 ஏக்கர் காணியில் அமைப் பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதில் 109 இற்கும் மேற்பட்ட கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வும், இந்தப் பல்கலைக் கழகத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களும் இதன்மூலம் ஏற் படுத்தப்படவுள்ளன.- என்றார்.
குறித்த பேச்சின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதிய மைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, டுபாய் நாட்டின் 'காமன் குரூப்' நிறுவனத் தலைவர் ஷேக் அப்துல் றபீக் மற்றும் அரப் ரைம்ஸ் பத் திரிகையின் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் உபெர் டாக்ஸி சேவை நிறுவனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒட்டுமொத்த வாகன சாரதிகளும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிரியாவின் நினைவிடங்கள் தீவிரவாதிகளால் அழிப்பு



டமாஸ்கஸ், ஜூன் 26

தொல்லியல் ஆய்வாளர்கள் தொடர்ந்து வெளியிட்டு வந்த அச்சத்தையும், ஐயப்பாட்டையும் மெய்ப்பிக்கும் வகையில் சிரியாவின் பால்மைரா நகரில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இஸ்லாமிய கல்வியாளர் ஒருவரின் சமாதியை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடி வைத்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கி உள்ளனர்.

பால்மைரா நகரின் வடக்கே பல நூறு ஆண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வந்த முஹம்மது பின் அலி என்பவரின் சமாதியையும், பால்மைரா நகரில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இஸ்லாமிய கல்வியாளரான நிஸார் அபு பஹா எடினி என்பவரது சமாதியையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் வெடி வைத்து தகர்த்து, தரை மட்டமாக்கி உள்ளதாக சிரியா நாட்டின் அருங்காட்சியகம் மற்றும் பழங்கால கலைப்பொருட்கள் பராமரிப்புத்துறை இயக்குனரான மாமவுன் அப்துல்கரிம் என்பவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த வருடம் பால்மைரா நகரை ஐ.எஸ்.தீவிர வாதிகள் கைப்பற்ஷிய வேளையில் வரலாற்றுசிறப்பும்,பழங்கால தொன்மையும் வாய்ந்த அந்த நகரில் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு இந்தத் தீவிரவாதிகளால் ஆபத்து நேரலாம் என வரலாறு மற்றும் தொல்லியல் ஆய்வாளர்கள் கவலை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# பாகிஸ்தானில் வெயில் உக்கிரம் ஆயிரத்து 200 பேர் சாவு

## பாடசாலைகள் மூடப்பட்டன

இஸ்லாமாபாத், ஜூன் 26

பாகிஸ்தானில் தொடர்ந்து கோடை வெயில் வாட்டி, வதைத்துவரும் நிலையில் சிந்து மாகாணத் துக்குட்பட்ட கராச்சி உள்ளிட்ட பல பகுதிகளில் உச்சக்கட்ட வெயில் சுட்டெரித்து வருகின்றது.

இந்த வெயிலின் தாக்கத்தால் கடந்த ஒருவார காலத்தில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் சிந்து மாகாணத்தில் மட்டும் வெயிலின் தாக்கத்துக்கு இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1200 ஆக உயர்ந்துள்ளது.

இதில் சுமார் ஆயிரம் பேர் கராச்சி நகருக்கு உட்பட்ட பகுதிகளிலும், எஞ்சிய இருநூற்றுக்கும் அதிகமானோர் சிந்து மாகாணத்தின் பிற பகுதிகளிலும் உயிரிழந்துள்ளனர் என்று அதிகாரபூர்வமாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிப் பதை தடுக்கும் வகையில் சிந்து மாகாணத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் சில அரச அலுவலகங்களை மூடிவிடும்படி அந்த மாகாண முதல் அமைச்சர் குவைம் அலி ஷா உத்தரவிட்டுள்ளார். (ஐ)



# நேபாள நாட்டின் மறுசீரமைப்புக்கு இந்தியா நிதியுதவி



புதுடில்லி,ஜூன் 26

நேபாள நாட்டில் சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் கடுமையான சேதம் ஏற்பட்டது. கட்டடங்கள் இடிந்து தரை மட்டமானதில் ஆயிரக்கணக்கான மக்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

அந்த நாட்டின் புராதனச் சின்னங்கள் சேதம் அடைந்து அழிந்து விட்டன. பூகம்ப மீட்புப் பணிக்கு இந்தியா உதவியதுடன் இராணுவத்தையும், தேசிய பேரிடர் மீட்புக் குழுவினரையும் அனுப்பி வைத் தது.

அங்கு மீட்புப் பணிகள் மாதக்கணக்கில் நடைபெற்று வந்தன. தற்போது மீட்புப் பணிகள் முடிவடைந்து மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பமாகியுள்ளன. சேதம் அடைந்த கட்டடங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. வீடு இழந்தவர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

நேபாளத்தின் மறுசீரமைப்பு பணிக்கு உதவ உலக நாடுகள் முன் வந்துள்ளன. இந்தியா சார்பில் நேபாள நாட்டுக்கு 6ஆயிரத்து 300 கோடி ரூபாய் (இந்திய) (ஒரு பில்லியன் டொலர்) வழங்குவதாக அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆப்கானிஸ்தானில் இராணுவம் தாக்குதல்; 37 தீவிரவாதிகள் சாவு

ஆப்கானிஸ்தான் நாட்டின் நாடாளுமன்றத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்தனர். அந்தத் தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

இருப்பினும் அந்த தாக்குதல், நாட்டின் பாதுகாப்புக்கு விடப்பட்ட சவால் என ஆப்கானிஸ்தான் கருதுகிறது. இதன் காரணமாக தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தான் தீவிரப் படுத்தியுள்ளது.

5 மாகாணங்களில் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் 37 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதுடன், 41 தீவிரவாதிகள் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களிடம் இருந்து 155 சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள், ஆயுதங்கள், வெடிபொருட்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தத் தகவல்களை ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. (ஐ)

# சீனாவில் பொலிஸார் தாக்குதல்



சீனாவில் ஸின்ஜியாங் மாகாணத்தில், சிறுபான்மையினராக உள்ள உய்குர் இன மக்களுக்கும், பெரும்பான்மையினராக இருக்கிற ஹான் சீன மக்களுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த நிலையில் அங்கு போக்குவரத்து சோதனைச் சாவடியில் பொலிஸ் அதிகாரிகளை கத்தியால் குத்தியும், வெடிகுண்டுகளை வீசியும் மர்ம ஆசாமிகள் தாக்குதல் நடத்தினர். அதில் பல பொலிஸார் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலை உய்குர் இனத்தவர் நடத்தியதாக தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து தீவிரவாதிகளாக அறிவிக்கப்பட்ட அவர்கள் மீது பொலிஸார் அதிரடித் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிட்டன் மகாராணியான இரண்டாம் எலிசபெத், தனது கணவர் பிலிப்புடன் மூன்று நாள் பயணமாக ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். அங்கு அவர்களுக்கு பெர்லின் பெலுவா மாளிகையில் இராணுவ மரியாதையுடன் தேசிய கீதம் பாடி வரவேற்பு வழங்கப்பட்டது. மகாராணியின் வருகையையொட்டி சிறுவர்கள் பாலத்தில் நின்று பிரிட்டன் மற்றும் ஜேர்மன் கொடிகளை அசைத்து தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ஐ)

## நட்பு நாடுகளை உளவு பார்ப்பது உடனடியாக நிறுத்தப்படும்

### ஒபாமா அறிவிப்பு



பாரிஸ், ஜூன் 26

பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதிகளை அமெரிக்கா உளவு பார்த்த விவகாரம் தொடர்பாகப் பிரான்ஸ் ஜனாதிபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் பேசியுள்ளார். அந்த உரையாடலின் போது கடந்த காலத்தில் நட்பு நாடுகளை அமெரிக்கா உளவு பார்த்த செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது. அவை உடனடியாக நிறுத்தப்படும் எனக் கூறியதாக பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

முன்னதாக, பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதிகளான ஜாக்குவெஸ் சிராக், நிக்கோலஸ் சர்கோசி மற்றும் பிராங்கோய்ஸ் ஹாலண்டே ஆகியோரை அமெரிக்கா உளவு பார்த்ததை விக்கிலீக்ஸ் இணையத்தளம் அம்பலப்படுத்தியது. இதையடுத்து அறிக்கை ஒன்றின் மூலம் கருத்து தெரிவித்த பிரான்ஸ் ஜனாதிபதி ஹாலண்டே, அமெரிக்காவின் செயலை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தார். இதனால் பிரான்ஸ் நாட்டில் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக அமைச்சர்கள் மற்றும் இராணுவத் தலைவர்களுக்கான அவசர கூட்டம் நடைபெற்றது. (ஐ)

## பேரழிவில் புருண்டி

### நாடுகடத்தப்பட்ட ஊடகவியலாளர் கருத்து



புஜும்புரா, ஜூன் 26

புருண்டி பேரழிவை எதிர்கொண்டுள்ளது. அதைத் தடுக்க உலக நாடுகள் விரைவாக செயல்பட வேண்டும் என்று நாடுகடத்தப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான புருண்டியில், ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா பதவி வகித்து வருகிறார். இந்த நிலையில் அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 3 ஆவது தடவையாக அவர் போட்டியிடுகிறார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெறுகிறது. இதற்கிடையே ஜனாதிபதி பியார்ரே நகுருன்ஜிசா, தான்சானியா நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றார். இந்த நிலையில் அங்கு திடீரென இராணுவப் புரட்சி ஏற்பட்டது.

அந்தப்புரட்சியை ஜனாதிபதி பியார்ரேவுக்கு எதிராக செயற்படும் தளபதி கோட் பிராய்டு நியோம்பர் நடத்தினார். ஆனால் அரச விசுவாச இராணுவப் படைகள் புரட்சியை முறியடித்து விட்டன.

இந்த நிலையில் அந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட ஊடகவியலாளர் பாப் ரூகுரிகா ஜெனிவாவில் அளித்துள்ள பேட்டியில் ஜனாதிபதி மற்றும் அவரது ஆதரவாளர்களால் புருண்டி மிகப் பெரிய பேரழிவை எதிர்கொண்டுள்ளது. உலக நாடுகள் விரைவாகச் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மேலும் உலக நாடுகளின் இராணுவத் தலையீடும் அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் கட[...]த மாதம் நடைபெறவிருந்த நி[...]லையில் ஆபிரிக்கக் கூட்டமைப்[...]ின் வேண்டுகோளின்படி தேர்தல் [...]ற் போடப்பட்டது. அங்கு ஜனாதிப[...]த் தேர்தல் எதிர்வரும் ஜூலை மா[...] 15ஆம் திகதி நடைபெறவுள்ள[...] குறிப்பிடத்தக்கது.

## மாறுகிறது அரச மாளிகை



லண்டன்,ஜூன் 26

பிரிட்டன் மகாராணி எலிசபெத்தின் பக்கிங்ஹாம் அரண்மனையில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச சுற்றுலாப்பயணிகள் பிரிட்டன் வரும்போது பார்க்க விரும்பும் முக்கிய சுற்றுலா ஈர்ப்புமையமாக பக்கிங்ஹாம் அரண்மனை விளங்குகிறது.

இந்த நிலையில் அங்கு 1952ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக மிகப்பெரிய பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளன.

ஒட்டுமொத்த அரண்மனையிலுமே அந்தப் பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பராமரிப்புப் பணிகளை படிப்படியாக செய்வதா அல்லது முழுமையாகச் செ[...]து முடிப்பதா என அதிகாரிகள் ஆய்வு செய்துவருகின்றனர்.

இந்தப் பராமரிப்புப்பணிகளை முழுமையாகச் செய்து முடிக்க சம்பந்தப்பட்டவர்கள் முடிவெடுக்கும் பட்சத்தில், அந்த அரண்மனையிலிருந்து மகாராணியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் தற்காலிகமாக வெளியேறவேண்டியிருக்கும் எனக் கருதப்படுகிறது.

மகராணியும், அவரது குடும்பமும் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து வெளியேறினால், பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து 25 மைல்கள் தொலைவில் உள்ள விண்ட்சர் காஸ்ல் என்னும் மகாராணியின் இன்னொரு அரண்மனைக்கு இடம்பெயரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## அமெரிக்காவில் மக்களுக்கு சுதந்திரம் இல்லை

### ஜேர்மனி மக்கள் குற்றச்சாட்டு

வொஷிங்டன்,ஜூன் 26

அமெரிக்க அரசுக்கு தனது குடி மக்களின் சுதந்திரம் குறித்து போதிய அக்கறை இல்லை என்று அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றில் ஜேர்மனிய மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உலக வல்லரசான அமெரிக்கா குறித்து ஐரோப்பிய நாடுகளில் அண்மையில் ஆய்வு ஒன்றை ஜேர்மனி நிறுவனம் ஒன்று மேற்கொண்டிருந்தது.

அதில், ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மனியில் உள்ள சுமார் 53 சதவிகித மக்கள், அமெரிக்க அரசு தனது குடிமக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் போதிய அக்கறை இல்லாமல் செயல்படுவதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான அமெரிக்காவின் தீவிரமான நிலைப்பாட்டை பெரும்பாலான ஜேர்மனிய மக்கள் வரவேற்றுப் பாராட்டியுள்ளமை அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

அதே சமயம், அமெரிக்க குடிமக்களிடம் எடுக்கப்பட்ட இதே ஆய்வில் சுமார் 51 சதவிகித மக்கள் தங்களது அரசு குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்காக பாடுபட்டு வருவதாக கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அடிப்படை உரிமைகள் தவிர, ஒட்டுமொத்தமாக அமெரிக்க அரசு மீது சுமார் 45 சதவிகித ஜேர்மனியர்களுக்கு எதிர்மறையான கருத்துக்களே இருக்கின்றன. அவர்களில் 50 சதவிகித ஜேர்மனியர்கள் அமெரிக்காவுக்குச் சாதகமான கருத்துக்களை கொண்டுள்ளனர்.

இத்தாலி, போலந்து, பிரான்ஸ், பிரிட்டன் ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான குடிமக்களுக்கு அமெரிக்கா மீது நல்ல அபிப்பிராயம் இருந்தாலும், ஐரோப்பாவிலேயே அமெரிக்கா மீது எதிர்மறையான கருத்துக்கள் கொண்டவர்கள் அதிகமாகவுள்ளது ஜேர்மனியில் தான் என அந்த ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது. (ஐ)

## சூரியனுக்கு அருகி[...] நெருங்கியது நாச[...]

சூரியனை மிக அருகில் [...] பிடித்து அதன் புகைப்படங்க[...] நாசா ஆராய்ச்சி மையம் வெ[...]யிட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு, அட்[...] 5 ராக்கெட் மூலம் சோலார் ட[...]மிக்ஸ் தொலைநோக்கி விண்[...] செலுத்தப்பட்டது.

இந்தத் தொலைநோக்கி அதிந[...] கமராக்கள் மூலம் பல்வேறு ஒ[...] படங்களை எடுத்து அனுப்பிவரு[...] இந்த நிலையில் மக்களை [...]ரியத்தில் ஆழ்த்தும் விதமாக [...]யனை பல்வேறு கோணத்தில் [...] பிடித்து அனுப்பியுள்ளது.

சூரியனில் நடைபெறும் நிச[...]கள், கொந்தளிப்புகள் போன்றவ[...] இந்தப் ஒளிப்படங்கள் மக்கள[...] எடுத்துரைக்கின்றன. மேலும், இ[...] தொலைநோக்கி, சூரியனில் உ[...] பல ஆயிரம் மடங்கு வலிமை மி[...] காந்தப்புலமான பிளாஸ்மா வ[...]யங்களை துல்லியமாகப் [...] பிடித்து அனுப்பியுள்ளது.

இவை அனைத்தும் மக்கள[...] பயனுள்ளவையாக இருக்கும்[...] கோடார்ட் விண்வெளிமைய அ[...] அலெக்ஸ் யங் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# சோளகக் காற்றினால் முடங்கியுள்ள நெடுந்தீவுக்கான படகுச்சேவை

நிமிர்த்த முடியாததற்கு இது ஒன்றும் நாய் வாலல்ல, நெடுந்தீவுக்கானகடல்போக்குவரத்துச் சேவை அது போன்றதே என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இன்றைய விஞ்ஞான அறிவு நாய்வாலைக் கூட நிமிர்த்திவிடும் அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் எம்மவர்களால் இந்தக் கடல் பயணத் தைக்கூட சீர்செய்ய முடியா திருக்கிறதே என்பதுதான் நெடுந் தீவின் வருத்தம்.

நெடுந்தீவுக்கானசேவையில்உள்ள இரண்டு அரச படகுகளுமே மூலைக்கொன்றாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. வடதாரகை கடற்படையினரின் கரங்களுக்குள் சிக்கி நயினாதீவு நாகவிகாரைத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது. குமுதினி ஊர்காவற்றுறையில் உறங்கிக்கொண்டிருக்கிறது. ஆக அரச படகுகள் இரண்டும் சேவை செய்ய முடியாத நிலையில் ஒதுங்கிக்கொண்டுள்ளன. பொதுவாக சோளகக்காற்று வீச ஆரம்பித்ததும் அரசபடகுகளின் சேவை தடைப்பட்டுப் போய்விடுகின்றது. இந்தக் காலங்களில் கண்டிப்பாக அரசபடகுகள் பழுதடையவேண்டும் அல்லது பழுதடையச் செய்ய வேண்டும் என்பது, எழுதப்படாத விதியாகிவிட்டது. படகு இயந்திரங்கள் சோளகக்காற்றுக் காலங்களில் தாமாகவே பழுதடையக்கூடிய தன்மையைக் கொண்ட விதத்தில் உருவாக்கப்பட்டவையா? அல்லது படகு ஊழியர்கள் சோளகக் காற்றை எதிர்கொள்ளமுடியாத வினைத் திறனற்றவர்களா? அல்லது படகுகள் பழுதடைவதால் திணைக்களத்துக்கு மேலதிக விசேட வருமானம் ஏதும் கிடைக்கிறதா? புரியவில்லை என்கிறார்கள் நெடுந்தீவு மக்கள். விசாரணை தேவை.






அரச படகுச்சேவைகளில் ஏற்படும் தடங்கல்களால் மக்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. நெடுந் தீவிலுள்ள தனியார் படகுகள் பெரும்பாலும் மீன்பிடிக்கென கட்டப்பட்டவை. இந்தப் படகுகளில் மக்கள் பயணிக்கக் கூடிய வசதிகள் இல்லை. வேறு வழியின்றி கடல் கொந்தளிப்புச் சமயங்களில் அவற்றில் செல்லும் மக்கள் கடவுளின் கருணையால் தப்பிவந்ததுமுண்டு. இந்த மீன்பிடிப்படகுகள் இப்போது பயணிகள் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளன. பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடக்கூடிய தகைமைகளும் அவற்றுக்குக் கிடையாது. நெடுந்தீவு பல நோ.கூ சங்கத்துக்குரிய படகு பொருள்களை ஏற்றி இறக்குவதற்குக் கட்டப்பட்டது. எனினும் இந்தப் படகு பயணிகள் சேவையில் ஈடுபடுத்தக் கூடியதாகவும் நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக்கூடியதாகவும் இருப்பதுதான் அங்குள்ள மக்களுக்கு கிடைத்ததொரு ஆறுதல். தவிர, அந்தோனியார் கோவில் படகு எனப்படும் சுவாமியார் படகு பயணிகளுக்குரியதானது. இந்த இரண்டு படகுகளையும்தான்மக்கள்நம்பியுள்ளனர். மக்களுக்கான அத்தியாவசியப் போக்குவரத்துச்சேவை என்பதால், இவை பெரும்பாலும் நட்டத்திலும்கூட இயங்க வேண்டிய நிலை உள்ளது. அதாவது அதிகாரிகளின் கையாலாகாத்தனத்திற்காக வேறு தரப்பினர் நட்டமடைய வேண்டியுள்ளது. அரசபடகுகள் சேவையில் இல்லாத சமயத்தில் படும்போது இந்த இரண்டு நிறுவனங்களுமே உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கடல் போக்குவரத்தைச் சீரமைப்பதில் அக்கறை காண்பித்தன. இன்று அந்த நிலை இல்லை. இலாபம் இல்லாத ஒரு விடயத்தில் வீண்தலையீடு எதற்காக என நினைக்கிறார்கள் போலும். உள்ளூரிலும் சரி, உயர் ஆட்சி மன்றங்களிலும் சரி, தம்மை முதன்மைப்படுத்த அயராது ஓடித் திரிபவர்களது கண்களிலும் நெடுந்தீவுப் போக்குவரத்தின் உண்மை நிலை புலப்படுவதில்லை. இந்த விடயத்தில்

> அரச படகுச்சேவைகளில் ஏற்படும் தடங்கல்களால் மக்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நெடுந்தீவிலுள்ள தனியார் படகுகள் பெரும்பாலும் மீன்பிடிக்கென கட்டப்பட்டவை. இந்தப் படகுகளில் மக்கள் பயணிக்கக் கூடிய வசதிகள் இல்லை.

சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியார் படகுகளுக்குரிய செலவைத் திணைக்களம் வழங்க முன்வர வேண்டும். கடந்த காலங்களில் இந்த நடைமுறை கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது கடல்வழி நெடுந்தீவுக் கான பபாதைச் சேவை அரசினால் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக பாதைக்கான வரியாக முன்னர் ஐம்பது சதம் அறவிடப்பட்டு வந்தது. இப்போது இலவச சேவையாக்கி அதையும் இல்லாமல் செய்து விடுகின்றனர். இது அடிக்கடி நிகழ்கின்றது.

நெடுந்தீவுக்கென ஒரு பிரதேசசபை இருக்கிறது. தனியான பிரதேச செயலகம்கூட உண்டு. மிகவும் மோசமான பின்தங்கிய பகுதியான தீவின் முக்கிய தேவைகளை, சேவைகளை வழங்கவேண்டிய கடப்பாடு இவற்றுக்கு உண்டு. நெடுந்தீவு கிராமசபையாக இருந்த காலங்களிலும் படகுகள் சேவை பாதிக்கப்பட்ட அந்தத் தரப்பினரும் மூக்கை நுழைப்பதில்லை. தப்பித் தவறி யாராவது ஒருவர் அவர்களிடம் இதைக்கூறினால் கவனிக்கிறோம் எனக்கூறி கதையை நிறுத்திவிடுவதுடன் தேவையற்ற விடயங்களில் வீண் தலையீடுகளைத் செய்வதும், கடந்த காலங்களில் நிகழ்ந்த காட்டாட்சி தான் காரணம் என்று முடிந்து போனவற்றையே விகாரப்படுத்திக் கொண்டு, நேர்மையான ஒரு நாட்டாட்சியே தேவை என்றும் சொல்லிக் கொண்டே காலத்தைக் கடத்து வதால் மக்களது தேவைகள் நிறை வேறிவிடும் என்பது கருத்தல்ல. அதற்கான இறுக்கமான நவடிக்கைகள் இடம்பெற வேண்டும். நெடுந்தீவுப் படகுச் சேவையைச் சீரமைக்கக் கூடியதாக பிரமுகர் பட்டியலில் இடம் பெறத் துடிப்பவர்கள் ஒரு துரும் பைக் கூட அசைத்ததாக இல்லை என்பதுதான் தீவின் முக்கிய செய்தி.

# குடாநாட்டு அபிவிருத்திக்கு உதவுவதில் பிரதேச அபிவிருத்தி வங்கி முன்னிலை

யாழ்ப்பாணம்,ஜூன் 26

குடாநாட்டின் அபிவிருத்திக்கு மூலதனமாக சுயதொழில் கடனுதவிகளை வழங்குவதில் பிரதேச அபிவிருத்தி வங்கி முன்னணியில் உள்ளது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் மாவட்ட முகாமையாளர் வி.அருளானந்தம் தெரிவித்தார்.

பிரதே அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளையின் 3 ஆவது வருட நிறைவு விழா நேற்று வங்கியில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கும் போது

யாழ்ப்பாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெண்களின் பங்களிப்பு முக்கிய தேவையாக உள்ளது. குறிப்பாகச் பெண்கள் சின்னகத்தில் கவனம் செலுத்துபவர்களால் பொருளாதார அபிவிருத்தியில் அவர்களது பங்களிப்பு அவசியமாகவுள்ளது. அந்த வகையில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குப் பிரதேச அபிவிருத்தி வங்கி கைகொடுத்து வருகிறது. யாழ்.கிளையானது 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதுடன், 20 ஆயிரம் பேருக்குக் கடனுதவிகளை வழங்கியுள்ளது.

இந்த வங்கியைப் பொறுத்த வரையில் கடனுதவிகளை மட்டுமல்லாது சேமிப்பையும் ஊக்குவித்து வருகிறது. பிரதேச அபிவிருத்தி வங்கியின் 267 கிளைகள் நாடளாவிய ரீதியில் உள்ள நிலையில் வடக்கில் 6 கிளைகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. வட பிராந்தியத்துக்கு இந்த 6 கிளைகளினதும் சேவைகள் போதுமானதாக இல்லை என்பதன் காரணமாக, வாடிக் கையாளர்களின் நலன் கருதி மேலும் 12 கிளைகளை வடக்கில் ஆரம்பிப்பதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதனைவிட வீடமைப்பு, கைத்தொழில், விவசா யம், கால்நடை வளர்ப்பு, போன்ற வருமானத்தைப் பெற்றுத் தரக்கூடிய சட்டபூர்வமான தொழில் முயற்சிகளுக்கு 1 மில்லியன் வரையான கடனுதவிகளை வழங்கு வதற்கும் வங்கி தயாராக உள்ளது. எனவே வாடிக்கையாளர்கள் வங்கியின் சேவைகளைப் பெற்று தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி குடா நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கைகொடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.



பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் சுப்பிரமணியம் சிவலோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச அபிவிருத்தி வங்கியின் மாவட்ட கடன் முகாமையாளர் விஜயசுந்தரம், சுன்னாகம் கிளை முகாமையாளர் லட்சுமணசர்மா, யாழ்.கிளையின் உதவி முகாமையாளர் எஸ்.சுரேஸ் மற்றும் மாதர் சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களையும் கவனத்தில் எடுங்களேன்:

### கவனத்தில் எடுத்தோம்

மேற்படி தலைப்பிட்டு 22.06.2015 உதயன் பத்திரிகையில் பக்கம் 15 கருத்துப் பகுதியில் வாசகர் திருமுகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பில் தங்களுக்கு பின்வரும் விளக்கத்தை அளிப்பது உசிதமானது எனக் கருதுகின்றேன். கைதடி தெற்கு ஜே/291 கிராமத்தில் பல அபிவிருத்தி மற்றும் மக்கள் நல நோம்புத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது உண்மையே! ஆயினும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் எடுக்கப்படவில்லை என்பதையோ, ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் என்பதால் இந்தப் பகுதி மக்களை யாரும் கண்டுகொள்ளவில்லை என்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாது.


ஏற்கனவே கைதடி தெற்கு சனசமூக நிலையத்தால் சனசமூக நிலைய நிதியிலிருந்து பின்வரும் வேலைத் திட்டங்கள் செய்யப்பட் டுள்ளன.

1. கைதடி தெற்கு ஊரியான்காடு பகுதிக்கான பிரதான நீர்க்குழாய் பொருத்தி நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.
2. ஏழைக்குடும்பம் ஒன்றுக்கு வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
3. தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பத்துப் பிள்ளைகளுக்கு தனியார் வகுப்புக் கட்டணங்கள் செலுத்தப்பட்டு வருகின்றன.
4. தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு தலா 25,000 வீதம் வழங்கப்பட்டுள்ளன.

2. கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஒன்றுக்கு இரு தடவைகள் மக்களின் கருத்தறிந்தே கைதடி தெற்கு விளையாட்டு மைதான புனரமைப்புக்குப் பயன்படுத்த முடிவாகி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

3. வாசகர் திருமுகப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீர்ப் பிரச்சினை தொடர்பில் ஏற்கனவே சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் திருமதி ஜானகி இராஜேந்திரன் மற்றும் சங்கரன் தங்கராசா ஆகியோர் மக்கள் குறைகேள் அமர்வுகளை நடத்தி குறிப்பிட்ட நீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் தீர்மானமாக எடுக்கப்பட்டு வேலைகளும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

## வாசகர் திருமுகம்



## மயானத்துக்கு கொட்டகை

மூளாய் பித்தனை இந்து மயானத்தில் பிணங் களை எரிக்கும் இடத்தில் கொட்டகை அமைக் கப்படாததால் மழை காலங்களில் பெரும் சிரமங்களை இந்தப்பகுதி மக்கள் எதிர் கொண்டு வருகின்றனர்.

பரந்த மூளாய்ப் பிரதேசத்தில் வாழு கின்ற பெரும்பான்மையான மக்கள் இந்த மயானத் தையே பயன்படுத்தி வருகின்றனர். பிணங்களை எரிக்கும் இடத்தில் கொட்டகையொன்றை அமைக் குமாறு இந்தப் பகுதி மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் அது இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளது. இதனால் மழை காலங்களில் பிணங்களை எரிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதோடு அவர்களது சிரமங்களையும் போக்கி வைக்க வேண்டியது உரிய நிர்வாகத்தினரின் முக்கிய கடமையாகும்.

ஆகவே இனிவரும் மாரிகாலத்துக்கு முன்னராவது மூளாய் மயானத்தில் கொட்டகையை அமைத்து உதவுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

யாழ். குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களில் அமைந்துள்ள மயானங்களில் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளதால் மழை காலங்களிலும் பிணங்களைச் சிரமம் ஏதுமின்றி எரியூட்ட முடிகின்றது.

இதைப்போன்று மூளாய் இந்து மயானத்திலும் கொட்டகை அமைக்கப்படுமாயின் மக்கள் சிரமமின்றிப் பிணங்களை எரியூட்ட முடியும். பல்வேறு வகையிலும் முன்மாதிரியாகத் திகழும் வலி.மேற்குப் பிரதேச சபையினர் இந்த விடயத்திலும் அக்கறையுடன் செயற்படுவார்களாயின் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும்.

*மா. சுப்பிரமணியம், மூளாய்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## நடைபாதை அரசியல்

கொழும்பு மாநகரின் நடைபாதைக் கடைகள் தொடர்பில் நாட்டின் பொறுப்புவாய்ந்த பதவிகளிலுள்ள அரசியல் பிரமுகர்கள் வெளியிட்டுவரும் அறிவிப்புகளும், கருத்துகளும் கொழும்பு நகரிலுள்ள நடைபாதை வியாபாரிகள் மத்தியில் மட்டுமன்றி, ஏனைய மக்கள் மத்தியிலும் குழப்ப நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளன.

தேர்தலொன்று விரைவில் வரவுள்ள நிலையில், அரசியல்வாதிகள் மக்களைக் கவர்வதற்கான வாக்குறுதிகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுப்பது விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருப்பினும்கூட அரசியல் ஆதாயத்துக்காக அப்பாவி மக்களின் வாழ்வாதாரத்தைப் பகடைக் காயாக்க முற்படக்கூடாது.

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை முற்றாக நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகர மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மில் தெரிவித்த தகவலை மேற்கோள்காட்டி அறிவித்தலொன்று கடந்த ஞாயிறன்று வெளியாகியிருந்தது .

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது கொழும்பு மாநகர மேயரின் உத்தரவை இடை நிறுத்திவைத்துள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வெளிநாடுகளில் நடைபாதை வியாபாரிகளின் தெருக்கள் பிரசித்தமானவை. எமது அரசியல் வாதிகள் எத்தனையோ சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வெளிநாடுகளிலுள்ள முன்னேற்றகரமான நகரங்களைப் பார்வையிடுவதுண்டு. அங்கே பார்த்தவற்றை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு இங்கு வந்ததும் பழையபடி அரசியல் பிழைப்புக்காக நடந்துகொள்வது கவலைக்கிடமானது.

கடந்த அரசு நகரை அழகுபடுத்துவதற்காக எடுத்த நட வடிக்கைகளில் ஒருபகுதியாக நடை பாதைக் கடைகளை அகற்றிய போது அதில் தொழில்செய்த மக்களைப்பற்றி முழுமையாகக் கவனம் செலுத்தவில்லை என்ற குறைபாடுகள் உள்ளன.

கடந்த அரசு நடைபாதை வியாபாரத்திற்காக பிரத்தியேக சந்தைகளை கொழும்பு நகரில் அமைத்துக்கொடுத்திருந்த போதிலும், அவை முன்னர் நடைபாதையோரங்களில் வியாபாரம் செய்த அனைத்து நடைபாதை வியாபாரி களையும் உள்வாங்கவில்லை என்றும், மக்கள் அதிகமாகப் பழகிய இடங்களை விடுத்து வேறிடம் சென்றதால் தமது வியாபாரத்தை முறையாகச் செய்யமுடியாத நிலை காணப்பட்டதாகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

நடைபாதை வியாபாரிகளுடன் கடந்த அரசு எவ்வித கலந்துரையாடல்களும் இன்றி எதேச்சாதி காரமாக முடிவுகளை மேற்கொண்டு அவர்களை அகற்றியிருந்தது.

நடைபாதைகளைப் பயன்படுத்தும் சாதாரண மக்களுக்கும் நடைபாதை வியாபாரம் அகற்றப்பட்டமை போக்குவரத்தை எளிதாக மேற்கொள்ளும் விடயத்தில் நன்மையைக் கொண்டுவந்திருந்தாலும்கூட தாம் பழக்கப்பட்ட இடங்களைவிட்டு வேறிடங்களுக்கு நடைபாதைக் கடைகள் கொண்டுசெல்லப்பட்டமையானது தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் சிரமத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தேர்தல் நெருங்கும் வேளையில், இந்த நடைபாதை வியாபாரத்தை வைத்து அரசியல் செய்வதற்கு சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. நடைபாதை வியாபாரிகளும் தேவையானவர்களே. வசதி வாய்ப்புக்கள் உள்ளவர்களைத் தவிர, சாதாரண மக்கள், ஏழை எளியவர்கள் தமக்கான உடு புடைவைகளையும் இதர பொருள்களையும் மலிவான விலையில் கொள்வனவு செய்து கொள்வதற்கு இந்த நடைபாதை வியாபாரிகள் பெரிதும் உதவுகிறார்கள். நிரந்தர வியாபாரிகளைப் போன்றல்லாமல் நடைபாதை வியாபாரிகளுக்கு கடை வாடகை, மின்சாரம் மற்றும் ஏனைய செலவுகள் இல்லாமையால் அவர்களிடமிருந்து பொருள்களை மிக மலிவாக பெறக்கூடிய நிலை, நாட்டின் பல பகுதிகளிலும் உள்ளது. அதிலும் குறிப்பாக பண்டிகைக் காலங்களில் மக்கள் தமக்குத் தேவையானவற்றைக் கொள்வனவு செய்துகொள்வதற்கு நடைபாதை வியாபாரிகளையே அதிகம் நாடுகிறார்கள்.

இவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்துபவர்களாக நடைபாதை வியாபாரிகளும் உள்ளனர். எனவே, அவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அவர்களது நலன்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அவர்களில் பலர், அன்றாடம் கிடைக்கும் வியாபாரப் பணத்தை வைத்துக்கொண்டே தமது குடும்பத்தை ஓட்டுவதால் அவர்கள் குறித்து அதிக அக்கறை காட்டவேண்டிய தேவை அரசுக்கும் ஏனையோருக்கும் உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

நடைபாதை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்காத வகையில் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கும் அதேவேளை, நடைபாதை களைப் பாவிக்கும் பாதசாரிகளான சாதாரண மக்களுக்கு அசௌகரியம் ஏற் படாத வகையிலும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

பத்தி எழுத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்துமா கூட்டமைப்பு?

பொதுத் தேர்தல் ஒன்று எந்த நிமிடத்திலும் அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலை தென்படும் பின்னணியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் இரா.சம்பந்தன் தலைமையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொறிமுறையொன்று தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர்.

பொதுத் தேர்தலின்போது எந்தக் கட்சி பதவிக்கு வரும் என்பது குறித்துத் தீர்க்கமாகச் சொல்ல இப்போது முடியாவிட்டாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேன மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர்ந்து பதவியில் இருப்பார் என்பது உறுதியான விடயம். எனவே அவருடனான கூட்டமைப்பின் சந்திப்பு வரவேற்கத்தக்கது மட்டுமல்ல, கால ஓட்டத்தில் பயனளிப்பதாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய பொறிமுறை தொடர்பாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் போசகர்களில் ஒருவருமான சந்திரிகா குமாரதுங்கவும் கலந்து கொண்டிருந்தார் என்றும் கூட்டமைப்பினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் சந்திப்பும் உரையாடலும் ஆக்கபூர்வமாகத் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

இனப் பிரச்சினைக்கான பொறிமுறை என்பது ஒரு சிக்கலான விடயம்தான். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டியவையும் உண்டு. விரிவாக ஆராய்ந்து, சரியான அத்திபாரமிட்டு, நீடித்து நிலைக்கவும், கால ஓட்டத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களை இரு தரப்புக்களால் நல்லிணக்கத்தின் மூலம் தீர்த்துக் கொண்டு முன்னேறவுமான அம்சங்கள் இடம்பெற வேண்டியவையும் உண்டு. எனவே இவ்வாறு நடைபெறுகின்ற சந்திப்புக்களில் சில மூலக்கூறுகள் பற்றி ஆராய மட்டுமே முடியும். என்றாலும் தொடர்ந்தும் சந்திப்புக்கள் இடம்பெறவிருப்பதால் பிரச்சினைகள் குறித்தும், அவை தீர்க்கப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் விரிவாக ஆராய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட முடியும். அதுமட்டுமல்லாது, இந்தத் தேசியப் பிரச்சினை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விதத்திலும் தீர்க்கப்பட வேண்டும். அதில் அதன் நீடித்த ஆயுள் தங்கியிருக்கும்.

தேர்தலின் பின்னர் -- அது உடனடியாக நடைபெற்றால், பதவியில் அமரக்கூடிய வாய்ப்பு எந்தக் கட்சிக்கு அதிக பிரகாசமாக இருக்கிறது என்று பார்க்கையில் - சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிரியாத பட்சத்தில், சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் ஆதரவை நாடி நிற்பதன் மூலம் அரசமைப்பது சாத்தியமாகலாம். அதுவும், சிறிபால டி சில்வா எந்தப் பக்கம் சாய்கிறார் என்பதைப் பொறுத்தும் அமையும். ஏனென்றால் சிறுபான்மைக் கட்சிகளை ஏற்கனவே தமது சுடுசொற்கள் மூலம் அவர் ஓரங்கட்டும் வகையில் செயல்பட்டு வருகிறார். மஹிந்த தரப்பினர் தனியாகப் பிரிந்து போட்டியிடுவார்களானால், நிச்சயம் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு அவர்களுக்கு கிடைப்பது துர்லபம். இதற்கிடையில் ஐ.தே.க தனித்துப் போட்டியிட்டு வெற்றிவாகை சூடும் வாய்ப்புத் தனக்கு இருப்பதாக அறிவித்து வருகிறது. மொத்தத்தில் பார்க்கையில், எந்தக் கட்சி தனித்து அரசமைக்கும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாதுள்ளது.

எதுவானாலும் மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பார் என்பதால் பதவிக்கு வரும் கட்சியின் மீது அவரது செல்வாக்கு தொடர்ந்தும் செலுத்தப்படுவதாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலைமையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்கள் பயனளிக்காது போக இடமில்லை. இருந்தாலும், வரப்போகின்ற பொதுத் தேர்தலையொட்டி அவர்கள் தமது வியூகங்களை உத்வேகமாக வகுத்துக்கொண்டு செயல்பட ஆரம்பிக்க வேண்டிய கால கட்டமாகவும் இது இருக்கின்றது.

எனவே, புதிய அரசு பதவிக்கு வருவதற்கு பெரும்பங்காற்றியவர்களான தமிழ் மக்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அதற்கான பலாபலன்களை ஓரளவாவது அரசிடம் பெற்றுக்கொள்ளாது போனால், மக்களின் வெறுப்புக்கு ஆளாக நேரும். குறைந்தபட்சம், காரணமின்றியும், வெறும் சந்தேகத்தின் பேரிலும் விசாரணையின்றி நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் இளைஞர்களை விடுதலை செய்யும் விடயம் உறுதிப்படுத்தப்படுவதும், இது போன்ற உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களில் தீர்க்கமான முடிவுகளைப் பெற்றுக் கொள்வதும், அவைகளைச் செயல்பட வைப்பதும் தமிழ்த் தரப்பினருக்குரிய பொறுப்பாக இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

# வெளிநாடுகளுக்கு சீனா வழங்கும் கடன்களின் பின்னணி என்ன?



புராதனபட்டுப்பாதையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக சீனா 'ஒரு அணை மற்றும் ஒரு பாதை' என்கின்ற திட்டத்தை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. ஐரோப்பாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புராதன பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் இது முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படும் நாடுகளில் சீனா பல்வேறு முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது. சீனாவின் 'ஒரு பாதை ஒரு அணை' என்கின்ற திட்ட மூலோபாயம் 2013 இன் பிற்பகுதியிலிருந்து நடை முறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சீன அரசின் பிரதான நிதி வழங்குனர்களான சீன அபிவிருத்தி வங்கி மற்றும் சீனா எக்சிம் வங்கி ஆகியன சீனாவின் ஒரு அணை ஒரு பாதை என்கின்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நாடுகளில் 67 சதவீதக் கடன்களை வழங்கியுள்ளதாக லண்டனிலுள்ள முதலீட்டு வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் இந்தத் திட்ட மூலோபாயத்துக்குள் உள்ளடங்காத இலத்தீன் அமெரிக்கா மற்றும் மேற்கு, மத்திய ஆபிரிக்கா போன்றன இந்த ஆய்வுக்குள் உட்படுத்தப்படவில்லை.

சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்ட மூலோபாயமானது சீன அதிபரின் முக்கிய கோட்பாட்டுத் திட்டமாகக் காணப்படுகிறது. இந்தத் திட்டம் முதன் முதலாக கம்யூனிசக் கட்சியால் 2013 இன் பிற்பகுதியில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

சீனாவுக்கும் 65 உலக நாடுகளுக்கும் இடையிலான தொடர்பை அதிகரிப்பதுடன் வர்த்தக சார் தொடர்புகளையும் நெருக்க மாக்குவதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்காகும்.

சுமார் 4.4 பில்லியன் மக்களை மையப்படுத்தித் தற்போது மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டமானது சீனாவின் கூட்டாளி நாடுகளின் உட்கட்டுமான மற்றும் நிதி, வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை மேற்கொள்வதை அடிப்படையாகக் கொண்டது.

[illegible] மின்சக்தித் திட்டங்கள் உட்பட பல்வேறு கட்டுமானத் திட்டங்களுக்காக சீனா கடன் வழங்கி வருகிறது. இந்தக் கடனுதவியானது 52 சதவீதம் தொடக்கம் 67 சதவீதம் வரை காணப்படுகிறது.

இதேவேளை வர்த்தக நிதி சார் மேம்பாட்டுக்காக 30 சதவீத முதலீடு மேலதிகமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. சீனாவால் தனது ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக உலக நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள 67 சதவீத கடனானது 49,4 பில்லியன் அமெரிக்க டொலராகும்.

தனது திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நாடுகளுடன் சீனா கொண்டுள்ள மூலோபாயம் சார் உறவானது சீனாவின் வர்த்தக மற்றும் மூலோபாய நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகும் என நியூ அமெரிக்கன் நிறுவனத்தில் பணியாற்றும் மூத்த ஆய்வாளரான கலாநிதி பராக் கான்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

உட்கட்டுமான முதலீடு என்பது நாடுகளின் பூகோள அரசியல் சார் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான ஒரு தொடர்பாடல் கருவியாகும் என்கிறார் கலாநிதி கான்ன.

உட்கட்டுமானத் திட்டங்கள் குறிப்பாக ரயில் பாதைகளை அமைத்தவை இன்னமும் சில நூறு ஆண்டுகளுக்கு சீனா தனது செல்வாக்கை நிலைப்படுத்துவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறது.

ஆனால் இவ்வளவு பெரிய அளவில் இதனை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என கலாநிதி கான்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா தற்போது புதிய மாபெரும் போட்டி ஒன்றில் வெற்றி காண்கிறது. அதாவது புதிய பட்டுப் பாதைகளை அமைப்பதன் மூலம் சீனா இந்த வெற்றியைப் பெறுகிறது என கான்ன தெரிவித்துள்ளார்.

இதேபோன்று 19ஆம் நூற்றாண்டில் தமது செல்வாக்கை மத்திய ஆசியாவில் நிலைநிறுத்து வதற்காக ரஷ்யா மற்றும் பிரிட் டனுக்கு இடையில் மோதல் ஏற்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனாவின் பட்டுப்பாதை பொருளாதார அணை என்பது புதிதல்ல. இந்தத் திட்டம் மறைமுகமாக 25 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இதற்காக சீனா சொல்லும் காரணம் எப்போதும் ஒரே மாதிரியாகவே உள்ளது.

> “சீனாவின் ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்ட மூலோபாய மானது சீன அதிபரின் முக்கிய கோட்பாட்டுத் திட்டமாகக் காணப் படுகிறது. இந்தத் திட்டம் முதன் முதலாக கம்யூனிசக் கட்சியால் 2013 இன் பிற்பகுதியில் உத்தி யோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

அதாவது பொருள்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான போக்குவரத்தை சுலபப்படுத்துவதற்காக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக சீனா கூறி வருகிறது என கலாநிதி கான்னா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு முன்னான பத்தாண்டுகளில் மேற்குலக சக்திகளாலும் யப்பானாலும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உதவித் திட்டங்கள் போன்று தற்போது சீனாவானது ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்தின் கீழ் தனது வங்கிக் கடன் கோட்பாட்டை விரிவாக்கியுள்ளது.

இறுதியாக, சீன அரசின் சலுகை ரீதியான கடன் வழங்கலானது இனி வருங்காலங்களில் குறைந்து செல்லலாம். சீனாவால் தனது ஒரு அணை மற்றும் ஒரு பாதைத் திட் டத்துக்காக வழங்கப் படும் கடனுக்கான வட்டியானது வெளியில் கூறப்படாவிட்டாலும் கூட,முன்னர் இந்தக் கடன் வட்டி 2-2.5 சதவீதமாகக் காணப் பட்டது.

ஆனால் தற்போது இந்த வட்டி வீதமானது 4-4.5 சதவீதமாக அதிகரித்துள்ளதாக லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் முதலீட்டு வங்கியொன்று சுட்டிக் காட்டியுள்ளது.

*நன்றி–புதினப் பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனகாரிக தர்மபாலவை உதவிக்கு அழைக்கும் மஹிந்த ராஜபக்ஷ



■ சேரலாதன்

அன்று அனகாரிக தர்மபாலவைக் குறை கூறினார்கள். இன்று என்னைக் குறை கூறிக்கொண்டிருக் கிறார்கள். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் முடங்கிப் போய்க்கிடக்கின்றன. அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக்கூட கடன் வாங்கித்தான் வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறு தமது உள்ளக் குமுறலைக் கொட்டித் தீர்த்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டின் மீது அவருக்கு இருக்கின்ற அக்கறையைப் பார்க்கும்போது உடல் புல்லரிக்கின்றது. இவர்தான் உண்மையான மக்கள் தலைவர் என்ற எண்ணமும் உதயமாகின்றது. ஆனால் இவரது கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது சாத்தான் வேதம் ஓதுவது போன்றதொரு தோற்றப்பாடுதான் கண்களில் தெரிகின்றது.

அனகாரிக தர்மபால புத்த தர்மத்தைப் போதிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த ஒருவராவார். மணம் முடிக்காமல் புத்த மதத்துக்காக முழுநேரமும் உழைக்கும் ஒருவரே அனகாரிக என அழைக்கப்படுகின்றார். அனகாரிக தர்மபால மஞ்சள் உடை தரித்தபோதிலும் இவ்ரொரு பிக்கு அல்ல. இவர் தனது தலைமயிரைக் கூட மழித்துக் கொண்டதில்லை. இவர் புத்த மதத்தைப் பரப்புவதிலேயே தமது ஆயுட் காலம் முழுவதையும் செலவிட்டார். இவ ரொரு தீவிர பௌத்தராக விளங்கியமையால் ஏனைய மதத்தினரின் வெறுப்புக்கும், கண்டனத்துக்கும் உள்ளானார்.

இவரது உருவச் சிலையைத் திறந்து வைக்கும் நிகழ்வு தங்காலையில் இடம் பெற்றபோது அதில் மஹிந்தவும் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அநகாரிகவைப் போன்று தாமும் குறை கூறப்படுவதாக விசனம் தெரிவித்துள்ளார். இதன் மூலமாகத் தாமொரு தீவிர சிங்கள பௌத்தர் என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

முதலில் மற்றவர்கள் தம்மீது எதற்காகக் குற்றம் சுமத்துகிறார்கள் என்பதை அவர் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். தம்மீது தவறான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுமாயின், அவை தவறென்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். ஆனால் தாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு அவர் இதுவரை ஏதாவது செய்தாரா என்று வினா எழுப்பினால் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும். மேலும் தம்மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து எவ்வாறு நழுவிச் செல்லலாம் என்பதே அவரது சிந்தனையாகவும் காணப்படுகின்றது. இந்த நிலையில் அவர் மற்றவர்களைக் குறை கூறுவதில் அர்த்தமே இல்லை.

மேலும் நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள் வேடிக்கையானவை. தமது ஆட்சியின் கீழ் இடம் பெற்ற ஊழல், மோசடிகளை அவர் மறந்துவிட்டவர் போன்று நடந்து கொண்டிருக்கிறார். இந்த நாட்டு மக்களைக் கடனாளிகளாக்கியதைத் தவிர அவர் வேறு எதனையும் பெரிதாகச் சாதித்ததாகத் தெரியவில்லை. இந்த நிலையில் அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பான அவரது கருத்துக்கள் பொருத்தமற்றவை.

தற்போது மஹிந்தவின் அரசியல் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. தாம் எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் ஊடுருவித் தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த மஹிந்த தற்போது மைத்திரியின் அதிரடி முடிவுகளால் அல்லாடிப்போய்க் காணப்படுகின்றார். இவருடன் நெருக்கமாக இருந்த சிலருக்கும் இனிமேல் இவரை விட்டு விலகுவதைத் தவிர வேறு வழியேயில்லை. இதனால் மஹிந்தவொரு அரசியல் அநாதையாக மாறப்போவது ஏறக்குறைய உறுதியாகி விட்டது. இந்த நிலையில்கூட அவர் தமது வறட்டுப் பிடிவாதங்களைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் 70 வயதான மஹிந்த தாம் அரசியலை விட்டு விலகப்போவதாக என்றுமே தெரிவிக்கவில்லையெனக் கூறியுள்ளார். உண்மையில் அவர் இந்த நாட்டின் மீது பற்றுக்கொண்ட ஒருவராக இருந்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் அரசியலை விட்டே விலகியிருப்பார். அவரது மூத்த புதல்வரான நாமல் ராஜபக்ஷ கூட அரசியலில் தீவிரமாகப் பங்கு கொண்டுள்ள நிலையில் மஹிந்தவும் அரசியலில் நீடிக்கவே விரும்புகின்றார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது இதைப் போன்றதொரு நிலை இதற்கு முன்னர் உருவாகவில்லை என்றே கூற வேண்டும். முன்னரெல்லாம் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இருதுருவங்களாகக் காட்சியளிப்பது வழமையாகும். ஆனால் இன்றுள்ள நிலையில் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசொன்றை அமைத்துச் செயற்படுகின்றன. ஆனால் இவையிரண்டும் உண்மையான ஐக்கியத்தைக் கொண்டுள்ளன என்று கூற முடியாதுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மஹிந்த அணி, மைத்திரி அணியென இரண்டாகப் பிளவுபட்டு நிற்கின்றமையே இதற்கான காரணமாகும். எதிர்வரும் பொதுத்தேர்தலில் கூட ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்முனைகளில் நின்று போட்டியிடப் போகின்றன. இந்த இரண்டு கட்சிகளும் தற்போது தேசிய அரசொன்றை அமைத்திருந்தாலும் பொதுத்தேர்தலின்போது எலியும், பூனையும் போன்றே செயற்படப்போகின்றன.

இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷ கூட நாடாளுமன்றத் தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். தேர்தல் முடிவுகள் சாதகமாக இருந்தால் பிரதமர் பதவியில் அமர்வதுதான் அவரது குறிக்கோளாகவும் உள்ளது.

மேலும் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவைத் திரட்டும் பொருட்டு பௌத்த விகாரைகளைத் தமது அரசியல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றார். அனகாரிக தர்மபாலவை அவர் தம்முடன் ஒப்பிட்டுப் பேசுவதற்கும் இதுவே காரணமாகும். சிறுபான்மையின மக்கள் தொடர்பாக அவரது வாயிலிருந்து அனுதாப வார்த்தைகள் எதுவும் வெளிவருவதில்லை. மாறாக புலிகள் மீளவும் செயற்படுவதற்கான சூழ்நிலைகள் காணப்படுவதாகத் தெரிவித்து வருகின்றார். பெரும்பான்மையின மக்களின் உணர்வுகளைச் சீண்டிவிடும் ஒரு செயற்பாடாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

ஆக மொத்தத்தில் இலங்கையின் அரசியல் நிலைமைகள் சீரான முறையில் இருப்பதாகத் தெரியவில்லை. மஹிந்த போன்றவர்களின் குழப்பகரமான நடவடிக்கைகள் இதனை மேன்மேலும் சிக்கலுக்குள் இழுத்துச் செல்வதையே அவதானிக்க முடிகிறது.

**மஹிந்தவின் அரசியல் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறி நிற்கின்றது. தாம் எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் ஊடுருவித் தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து விடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த மஹிந்த, தற்போது மைத்திரியின் அதிரடி முடிவுகளால் அல்லாடிப்போய்க் காணப் படுகின்றார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 800 | 600 |
| நண்டு | 300 | 450 | 400 | 400 | 300 | 450 |
| கணவாய் | 550 | 600 | 600 | 600 | 600 | 500 |
| பாரை | 550 | 600 | – | 500 | 600 | 370 |
| சுறா | 600 | 600 | – | 650 | 1000 | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 500 | – |
| விளை | 600 | 450 | 400 | 550 | 600 | 350 |
| முரல் | 300 | 350 | 400 | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 600 | – |
| கிழாக்கன் | 650 | 800 | 400 | 500 | 300 | – |
| ஒரா | 350 | 400 | 300 | 450 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 300 | 200 | 300 | – | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 200 | 100 |
| ஓட்டி | 250 | 300 | – | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 400 | 100 | 250 | 400 | 140 |
| பாலை | 400 | 300 | 300 | 500 | 400 | – |
| வாழை | 100 | 250 | – | 300 | – | – |
| கொய் | 80 | 250 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 100 | 300 | 280 | 250 | – | 200 |

## நாளை

**ஆனி-12**
**சனிக்கிழமை**
**27.06.2015**

**திதி:** தசமி
மு.ப. 08.20 வரை
**நட்சத்திரம்:** சுவாதி
பி.இ.01.50 வரை
**சுபநேரம்:**
02.55-04.25 வரை
**இராகுகாலம்:**
08.55-10.25 வரை

## ஆன்மிகச் சிந்தனை

நீங்கள் தூய உள்ளத்துடன் இறைவனைத் தியானித்தால் இறைவன் உங்கள் உள்ளத்திலேயே இருப்பதைத் தெளிவாக உங்களால் உணர முடியும். மனதை ஆன்மிக சாதனைகளால் ஒருமுகப்படுத்தினால் மனதின் ஆழத்தில் இறைவன் உணரப்படுகிறான். பக்தியால் நமது மனித மனம் பக்குவம் பெறும் போது எல்லா உயிர்களிலும் இறைவன் இருப்பதை நாம் உணர்ந்து கொள்கிறோம். தன்னை நம்பி வாழ்பவர்களுக்கும் தன்னைச் சார்ந்து வாழ்பவர்களுக்கும் இறைவன் அருள் புரிவான்.

ஞானச்சுடர்



# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 60 | 80 | 60 | 80 | 40 |
| கத்தரி | 50 | 50 | 50 | 50 | 40–60 | 80 | 80 | 25 |
| கரட் | 150 | 180 | 160–250 | 160 | 240–260 | 280 | 220 | 240 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 60 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 140 | 120 | 140 | 120 | 180 | 120 | 140 | 120 |
| பாகல் | 150 | 160 | 160 | 180 | 160 | 160 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120–160 | 140 | 140 | 180 | 200 | 140 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 90 | 100 | 90 | 80 | 80 | 120 | 80 | 60–70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 50–60 | 40 | 80 | 30–35 |
| கீரை | 10 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 30–35 | 10 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 35 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 120 | 160 | 160 | 180–200 | 200 | 200–220 | 220 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80–100 | 120 | 80 | 70 |
| வெண்டி | 120 | 100 | 100–140 | 120 | 140–160 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 220 | 140 | 180 | 240 | 320 | 240 | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 140 | 160 | 240 | 160 | 140 |
| தேங்காய் | 50 | 40 | 60 | 40–50 | 50–60 | 40 | 35–50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 90 | 90 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 140 | 120 | 100 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 130 | 160 | 120–140 | 160 | 200–240 | 200 | 200 | 120 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | – | 100–120 | 160 | 180 | – |
| முருங்கைக்காய் | 600 | 400 | 600 | 350 | 500–600 | 400 | – | 300 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### மதத்தின் இரகசியம்

நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும், உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள். உடலையும் புலன்களையும் வழிநடத்தும்போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத் தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.

மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வதுதான் மதத்தின் முழுப்பரிமாணமாகும்.

ஒருவன் தன்னை வெறுக்கத் தொடங்கிவிட்டால், அவன் கீழ் நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள். எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தனது விருப்பத்துக்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்தவொரு வேலையும் அற்பமானதல்ல.

## உடல் நிறை குறைவதற்கான காரணங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**பட்டினி**
உடல் நிறை குறைவதற்கு முக்கிய காரணம் பட்டினி இருப்பது தான். அதிலும் பெண்கள் குண்டாக இருக்கிறோம் என்று சரியாகச் சாப்பிடாமல், 'டயட்' என்ற பெயரில் பட்டினி இருக்கிறார்கள். ஆனால் இந்த நிலையில் உடல்நிறைகுறைந்தால்,உடலில்வேறு சில பிரச்சனை இருக்கிறது என்று தான் அர்த்தம். ஆகவே மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**பசியின்மை**
சிலருக்குப் பசியின்மையினால், உடலுக்கு அன்றாடம் வேண்டிய சத்துக்கள் கிடைக்காமல், உடல் நிறைகுறைய ஆரம்பிக்கும். உண்மையில் நிறையைக் குறைக்க வேண்டுமெனில் சரியான உணவுகளை உட்கொண்டு நிறையைக் குறைக்க வேண் டும். இல்லாவிட்டால், ஊட்டச் சத்துக் குறைபாடு ஏற்படும்.

**மனச்சோர்வு**
மன அழுத்தம், சோகம், கவலை, மன உளைச்சல் போன்றவை அதிகம் இருந்தாலும்,உடல்நிறை குறையலாம். எனவே தியானம், யோகா, உடற்பயிற்சி போன்றவற்றை அவ்வப்போது மேற் கொண்டு, மனதை அமைதியாகவும், சந்தோஷமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உடலில் வேறு சில பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும்.

**தூக்கமின்மை**
சரியான தூக்கத்தை மேற்கொள்ளாவிட்டாலும், உடல் எடையானது யில் நல்ல மாற்றம் தெரியும்.

**இதயக் கோளாறு**
இதயத்தில் ஏதாவது கோளாறு இருந்தால், அந்தக் கோளாறு திடீர் உடல் நிறைக் குறைவின் மூலம் தென்படும்.

**சர்க்கரை நோய்**
உடலில் நீரிழிவு நோய் தோன்றியிருப்பதை, உடல் திடீரென்று மெலிவடைவதைவைத்தேதெரிந்து கொள்ளலாம்.

**காசநோய்**
காசநோய்ப் பிரச்சினை இருந்தால், உடல் மெலிய ஆரம்பிக்கும்.

**இரத்தத்தில் தொற்று**
இரத்தத்தில் ஏதேனும் பிரச்சினைகளோ அல்லது நாள்பட்ட மலேரியா போன்றவை கூட உடல் நிறையைக் குறைக்கும்.

(தொடரும்)

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 2 | | 5 | 7 | | |
| 2 | 7 | | | | 8 | | | 6 |
| | | | | 7 | | 3 | | |
| | | | | | 1 | | | 7 |
| 3 | | 7 | | | | 1 | | 5 |
| 6 | | | 7 | | | | | |
| | | 4 | | 9 | | | | |
| 7 | | | 5 | | | | | 4 |
| | | 3 | 6 | | 2 | | | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 3 | 7 | 6 | 2 | 5 | 4 | 9 |
| 6 | 4 | 7 | 5 | 9 | 8 | 3 | 1 | 2 |
| 5 | 9 | 2 | 1 | 3 | 4 | 7 | 6 | 8 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 8 | 5 | 1 |
| 1 | 8 | 9 | 6 | 2 | 5 | 4 | 3 | 7 |
| 4 | 7 | 5 | 8 | 1 | 3 | 2 | 9 | 6 |
| 3 | 5 | 1 | 2 | 7 | 9 | 6 | 8 | 4 |
| 7 | 6 | 4 | 3 | 8 | 1 | 9 | 2 | 5 |
| 9 | 2 | 8 | 4 | 5 | 6 | 1 | 7 | 3 |

**சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் நட்சத்திர பலன்கள்

ஜென்ம நட்சத்திரத்தை வைத்துப் பெண் களின் குணாதிசயங்களைக் கணிக்க முடியும்.

**அச்சுவினி:** கவர்ச்சியானவர்கள். கனிவானவர்கள். சுத்தமானவர்கள். காம வேட்கை, கடவுள் பக்தி அதிகமிருக்கும்.

**பரணி:** சுத்தமில்லாதவர்கள். சண்டைகளை விரும்புபவர்கள். வஞ்சகம் மிக்கவர்கள். திரை மறைவில் தீமை புரிபவர்கள்.



**கார்த்திகை:** கொள்கைப் பிடிப்பற்றவர்கள். கோபம் அதிகமிருக்கும். சண்டை போடுபவர்கள். சுற்றத்தை வெறுப்பவர்கள்.

**ரோகிணி:** செல்வம் படைத்தவர்கள். அழகானவர்கள். மூத்தோரை மதிப்பவர்கள்.

**மிருகசீரிடம்:** சுகாதாரமானவர்கள். அழகானவர்கள். ஆடை, ஆபரண யோகம் பெற்றவர்கள். தரும காரியங்களில் ஈடுபாடு உடையவர்கள்.

**திருவாதிரை:** குரோத குணமும், நய வஞ்சகமும் படைத்தவர்கள். ஆத்திரம் மிக்கவர்கள். வீண் செலவு செய்பவர்கள்.

**புனர்பூசம்:** பண்பானவர்கள். அடக்க மானவர்கள். அழகும், லட்சணமும் மிக்க கணவரைப் பெறுவார்கள். சுய கௌரவம் படைத்தவர்கள்.

**பூசம்:** வீடு, நிலம், வாகனம் ஆகிய வளங்களைப் படைத்தவர்கள். அழகானவர்கள்.

**ஆயிலியம்:** அழுது ஆர்ப்பரிப்பவர்கள். ஆபாச வார்த்தைகளை அள்ளி வீசுபவர்கள். விசுவாசமில்லாதவர்கள். ரகசியம் காக்கத் தெரியாதவர்கள்.

**பூரம்:** சந்தோஷ சல்லாபம் மிக்கவர்கள். செல்வாக்கு மிக்கவர்கள். நீதி நெறி வழி நடப்பவர்கள். தைரியமானவர்கள்.

**உத்திரம்:** சரச சல்லாபத்தை அனுபவிப்பவர். ஒழுக்கமானவர்கள்.



**அத்தம்:** சுகபோகமாக வாழ்வார்கள். கவர்ச்சியானவர்கள். நுண்கலை வல்லுநர்கள்.

**சித்திரை:** வனப்பும், வசீகரமும் உடையவர்கள். அழகானவர்கள்.

**சுவாதி:** ஒழுக்கமானவர்கள், நல்லோர் நட்பைப் பெற்றவர்கள். எதிர்ப்பை வெல்லும் குணமுடையோர்.

**விசாகம்:** சாஸ்திர, சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பவர்கள். அறிவாற்றல் மிக்கவர்கள்.

**அனுஷம்:** தியாக குணம் படைத்தவர்கள். பொதுச் சேவையில் நாட்டம் உடையவர்கள்.

**கேட்டை:** சத்திய நெறி காப்பவர்கள். சந்தோஷமானவர்கள். சுற்றத்தாரை நேசிப்பவர்கள்.

**மூலம்:** குரோதமானவர்கள். வெறுப்பும், விகற்பமும் மிக்கவர்கள்.

**பூராடம்:** குடும்பத்தில் சிறந்தவர்கள். அதிகார அந்தஸ்து மிக்கவர்கள்.

**உத்திராடம்:** பேரும், புகழும் மிக்கவர்கள். சந்தோஷமும், சல்லாபமும் அனுபவிப்பவர்கள். உல்லாசவாசிகள்.

**திருவோணம்:** பிறருக்குச் சேவை செய்பவர்கள். நம்பிக்கையும், நேர்மையும் மிக்கவர்கள். இரக்க மனம் படைத்தவர்கள்.

**அவிட்டம்:** சகல சௌபாக்கியங்களையும் பெற்றவர்கள். பெருந்தன்மையானவர்கள். கருணை மிக்கவர்கள். நேர்மையானவர்கள்.

**சதயம்:** பிற பெண்களை நேசிப்பவர்கள். சுற்றத்தாரால் விரும்பப்படுபவர்கள். கலகலப் பாக இருப்பவர்கள்.

**பூரட்டாதி:** சமுதாயத்தில் உயர் அந்தஸ்து பெற்றவர்கள். அறிவானவர்கள். கல்வி மற்றும் கலைகளில் வல்லவர்கள்.

**உத்திரட்டாதி:** பாசமானவர்கள். அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள். உண்மையை விரும்புபவர்கள்.

**ரேவதி:** சம்பிரதாயங்களை மதிப்பவர்கள். கட்டுத்திட்டங்களுக்கு மதிப்பு கொடுப்பவர்கள். நேசம் மிக்கவர்கள்.

**மகம்:** ஆசார, அனுஷ்டானங்களை அனுசரிப்பவர்கள். பாசம் மிக்கவர்கள்.

# சகோதரியே! சற்று கேள்!



இவ்வுலகில் வாழ ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்க்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் நீடிக்கும். அந்தக் குறிப்பிட்ட கால வரையறை முடிவுற்ற அடுத்த கணமே சாவு வந்துவிடும். ஆனால் ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அமைக்கப்பட்டுள்ள எமது வாழ்க்கையை நாம்தான் மகிழ்ச்சியானதாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

சோகங்களே நிறைந்துள்ள எமது வாழ்க்கையை எப்படி மகிழ்ச்சியானதாக ஆக்கிக் கொள்ள முடியும்? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் அந்தச் சோகங்கள் நிரந்தரமானவை அல்ல என்றும் அந்தச் சோகங்களைக் கொடுத்த கடவுள் அவற்றை நீக்கக்கூடிய ஆற்றல் கொண்டவன் என்பதையும் நீங்கள் மனதினுள் ஆழமாகப் பதிய வைத்துக்கொள்ளும்போது உங்கள் சோகங்கள் அகன்று இன்பமாக மாறி விடும்.

நமது வாழ்க்கையில் எண்ணற்ற சிக்கல்கள் அவ்வப்போது எம்மை எதிர்நோக்கி வந்து கொண்டே இருக்கும். அவற்றைச் சமாளித்து வெற்றிகொண்டு மகிழ்வதே வாழ்க்கை.

சின்னச் சின்னச் சிக்கல்கள் உங்கள் வாழ்க்கையில் வரும்போது நீங்கள் அதற்காகப் பெரிய அளவில் வருத்தப்படக்கூடாது. மாறாக, அத்தருணத்தில் அதைவிடப் பெரிய சிக்கலை எண்ணிப் பார்த்து, அது எம்மை அடையாமல் போனதே என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டும். பெரிய கோட்டைச் சிறிய கோடாக மாற்ற, அதைவிடப் பெரியதொரு கோட்டை அதனருகில் வரைந்தால் முதல் கோடு மிகச் சிறியதாக மாறிவிடும். அதே நிலைதான் வாழ்க்கையை இயல்பாக எடுத்துக்கொள்கின்ற, கொண்ட ஆண் பெண்களின் நிலை.

உங்கள் கணவன் தான் பிரச்சினை என்றால், கணவனே இல்லாமல் விதவையாக இருந்து கொண்டு, நாள்தோறும் சமுதாய மக்களின் ஏச்சுப் பேச்சுகளை காதில் வாங்கிக்கொண்டு வெம்பி, நொந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களைப் பார் அத்தகைய சோக நிலையை எனக்குத் தராத கடவுளுக்கு நன்றி என்று கூறு. உங்கள் பிரச்சினை எங்கோ ஓடி மறைந்து விடும்.

உங்களது மாமியார்தான் உங்களுக்கு ஒரு மிகப்பெரும் சிக்கல் என்றால், அவரின் மனதைக் கவர உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். உங்களுக்கு என்ன பிடிக்கும் மாமி? என்று மனம் விட்டுக் கேளுங்கள்! அதை அவருக்குச் செய்துகொடுங்கள். உங்களது பிரச்சினை தீர்ந்துவிடும். அத்தோடு குடும்பமே இல் லாமல், உறவினர்களே இல்லாமல் ஒற்றையாக வாழ்ந்து கொண்டிருக்கிற பெண்களைச் சற்று உற்றுநோக்குங்கள். எனக்கு ஓர் அழகான குடும்பத்தையும், கணவன், பிள்ளைகள், மாமனார், மாமியார் போன்ற உறவுகளையும் அமைத்துக் கொடுத்துள்ள கடவுளுக்கு நன்றி என நீங்களாகவே கூறுவீர்கள். அதன்பின் உங்களது; சோகம் மறைந்து மகிழ்ச்சி பிறக்கும் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமா?

இப்படி ஒவ்வொரு துக்கம் ஏற்படும் போதெல்லாம், அதைவிடப் பெரியதை எண்ணிக் கொள். கவலையே உனது வாழ்வில் இருக்காது. நாம் இவ்வுலகில் கவலைகொள்ள பத்துக் காரணங்கள் இருந்தால், நாம் மகிழ்வோடு இருக்க நூறு வழிகளை கடவுள் வைத்துள்ளான். ஒவ்வொன்றையும் நாம் அணுகும் விதத்தில் தான் இருக்கிறது.

உங்கள் சோகத்தை மறந்து உங்கள் கணவனை மகிழ்விக்க என்னென்ன வழிகள் உள்ளனவோ அவற்றை நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்! உங்கள்; உடலில் நிறைய பொன் நகைகள் அணிந்துகொண்டு உங்கள் கணவனை மகிழ்விக்க நினைப்பதை விடவும் உங்கள் உதட்டோரப் புன்னகையால் அவரைப் பல மடங்கு மகிழ்விக்க முடியும். எனவே அவனைக் காணும்போதெல்லாம் உங்கள் உதட்டில் புன்னகை இழையோடட்டும்!




கணவனை மகிழவைப்பது மனைவியாக உள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் அவசியமாகும். நீங்கள் அவரை மகிழ்ச்சிப்படுத்தினால் அதன் பயனை அனுபவிக்கப்போவது நீங்கள் தான். எனவே நீங்கள் உங்கள் கணவனைப் பார்க்கும்போதெல்லாம் உங்கள் உதட்டோரத்தில் புன்னகையைத் தவழவிட மறவாதீர்! இதையே உங்கள் மாமியாரிடமும் அண்டை வீட்டுப் பெண்களிடமும் கடைப்பிடியுங்கள் எல்லோரும் உங்களுக்குச் சாதகமானவர்களாக ஆகி விடுவார்கள். பிறகு உங்களுக்கு என்ன கவலை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# முட்டாள் காவலர்கள்



முல்லா வாழ்ந்துவந்த நாட்டுக்கு அடுத்த நாட்டிலே சட்டம் ஒன்று போட்டிருந்தார்கள் அந்தநாட்டின் எல்லைக்குள் எவரும் கோழி முட்டைகளைக் கொண்டு சென்று வியாபாரம் செய்யக்கூடாது என்று. ஆனால் கோழிகளைக் கொண்டு செல்வதற்குத் தடை ஒன்றும் இல்லை. முல்லா அந்த நாட்டுக்கு பிறர் அறியாமல் கோழிமுட்டை களைக் கொண்டு சென்று வியாபாரம் செய்து வந்தார். ஒரு நாள் முல்லா கோழி முட்டைக் கூடையுடன் அந்த நாட்டுக்குள் பிரவேசித்தபோது இரண்டு காவலர்கள் அவரைப் பிடித்துக் கொண்டனர். அவரது கையிலிருந்த மூடப்பட்டிருந்த கூடை யைப் பார்த்து கூடைக்குள் என்ன இருக்கிறது ? என்று காவலர்கள் கேட்டனர். கோழிக் குஞ்சுகள் இருக்கின்றன என்றார் முல்லா. கோழிக்குஞ்சுகளை எடுத்துச் செல்வது குற்றமல்ல என்றாலும் சுங்க அதிகாரிகள் இந்தப் பக்கம் வரும்போது கூடையை அவர்களிடம் காண்பிக்க வேண்டும்! என்று காவலர்கள் கூறினர். அவ்வளவு நேரம் என்னால் தாமதிக்க முடியாதே! இன்று ஒரு நாளாவது என்னை நாட்டுக்குள் போக விடக் கூடாதா? என்று கேட்டார் முல்லா. அது எப்படி முடியும். உம்மை எதிர்பாராத விதமாக சுங்க அதிகாரிகள் பிடித்துக் கொண்டு உமது கூடையைப் பரி சோதிக்கும்போது இதிலே முட்டை இருந்து விட்டால் உமக்குத் தண்டனை கிடைப்பது மட்டுமல்ல எங்கள் வேலையும் போய்விடும் என்றனர் காவலர்கள். என்னுடைய கஷ்டம் உங்களுக்கு விளங்கவில்லை. நான் உடனே செல்லாவிட்டால் குடி முழுகிப் போய்விடும். தயவு செய்து இன்று என்னை விட்டு விடுங்கள் என்றார் முல்லா. காவலர்கள் யோசித்தனர். பின்னர் இருவரும் கலந்து பேசினர். பாவம், இந்தப் பெரியவர் அவசரமாகப் போக வேண்டும் என்கிறார். கூடைக்குள் என்ன இருக்கிறது என்று நாமே பரிசோதித்துப் பார்த்து விட்டு இவரை அனுப்பி விடலாமே என்று இருவரும் தீர்மானித்தனர். கூடையை நாங்களே பரி சோதனை செய்து பார்த்துவிடுகிறோம் என்று கூறியவாறு காவலன் ஒருவன் கூடையின் மூடியை அகற்றினான். கூடைக்குள் ஏராளமான முட்டைகள் இருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பெரியவரே, பொய்சொல்லி அல்லவா எங்களை ஏமாற்றப்பார்த்தீர். சுங்க அதிகாரிகளிடம் நீங்கள் பிடிபட்டி ருந்தால் எங்கள் வேலை போயிருக்கும் என்றனர் காவலர்கள். முல்லா கோபங் கொண்டவர்போலப் பாவனை செய்து, நீங்கள் இருவரும் அடிமுட்டாள்களாக இருக்கிறீர்களே! நான் பொய் சொன்னேன் என்று ஏன் அபாண்டமாகப் பேசுகி றீர்கள்? என்று கேட்டார். கூடைக்குள் கோழிக்குஞ்சுகள் இருப்பதாக அல்லவா நீர் சொன் னீர்? என்றான் ஒரு காவலன். ஆமாம், அப்படித்தான் சொன்னேன்! என் றார் முல்லா. கூடைக்குள் கோழி முட்டைகள் அல்லவா இருக்கின்றன. இது பொய் அல்லவா! எனக் காவலர்கள் வினவினர். மோசமான முட்டாள்களாக நீங்கள் இருவரும் இருக்கிறீர்கள். இப்போது எனது கேள்விக்கு பதில் சொல்லுங்கள். கூடைக்குள் என்ன இருக்கின்றன? என்று முல்லா கேட்டார். கோழி முட்டை கள் என்று காவலர்கள் பதில் கூறினார்கள். கோழி முட்டைகளுக்குள் என்ன இருக் கின்றன? என்று வினவினார் முல்லா. காவலர்கள் இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திரு திருவென விழித்தனர். என்ன முழிக்கிறீர்கள்? வேறு மாதிரியாகக் கேட்கிறேன் கோழிக் குஞ்சுகள் எங்கிருந்து வருகின்றன? என்று முல்லா கேட்டார்.

கோழி முட்டைகளுக்குள்ளிருந்து எனக் காவலர்கள் விடை கூறினர். அப்படி யானால் முட்டைகளுக்குள் கோழிக்குஞ்சுகள் இருக்கின்றன என்று ஆகிற தல்லவா? என்று கேட்டார் முல்லா. ஆமாம் என்று காவலர்கள் விடை கூறினர். அதாவது கூடைக்குள் முட்டைகள் இருக்கின்றன அல்லவா என்று வினவினார் முல்லா. இதைத்தான் நான் சொன்னேன். ஆக நான் கோழிமுட்டைகளுக்குள் உள்ள குஞ்சுகளைத் தான் எடுத்துச் செல்லுகிறேன். ஆகவே சட்டப்படி இது குற்றமல்ல என்று முல்லா வாதித்தார். அந்த முட்டாள் காவலர்கள் முல்லாவுக்கு ஒரு கும்பிடு போட்டு நாட்டுக்குள் செல்ல அனுமதித்தனர்.

# கிவி



கிவி என்பது நியூசிலாந்தில் வாழும், அப்டெரிக்ஸ் (அப்டெரி கைடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரே இனம்) இனத்தைச் சேர்ந்த சிறிய, பறக்காத, ஏதாவதொரு வகைப் பறவையைக் குறிக்கும். இவை கசோவரிகள் அல்லது மோவாக்களுக்கு நெருக்கமான உறவை யுடையனவாகக் கருதப்பட்டாலும், இவற்றின் பரிணாமத் தோற்றம் உறுதியாகத் தெரியவரவில்லை. பல கிவி வகைகள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. கிவிகள் வெட்கம் கொண்ட, இவை சிறப்பாக வளர்ச்சி பெற்ற முகர்ச்சிப் புலனைக் கொண்டுள்ளதுடன், பறவைகளில் வழமைக்கு மாறாக இவற்றின் மூக்குகள் கூரான சொண்டின் நுனியில் அமைந்துள்ளன. இவை தங்கள் சொண்டுகளை நிலத்துக்குள் செலுத்திப் புழுக்கள், பூச்சிகள், முள்ளந்தண்டற்ற ஏனைய பிராணிகள் முதலியவற்றைத் தேடி உண்கின்றன. இவை பழங்களையும் கூட உண்கின்றன. சந்தர்ப்பம் ஏற்பட்டால், இவை, நீரிலும் நிலத்திலும் வாழும் சிறிய பிராணிகள் போன்றவற்றையும் உணவாகக் கொள்கின்றன. கிவிகளில் நிலத்தில் வாழ்வதற்கான இசைவாக்கம் விரிவானது. கிவிகளில் மூன்று வகைகளும், அவற்றிலொன்றில் ஒரு துணை வகையும் உண்டு. இவை பலதரப்பட்ட வாழிடங்க ளுக்குத் தங்களை இசைவாக்கிக் கொண்டுள்ளன. பெண் கிவிவிகள் பொதுவாக இரண்டு முட்டைகளை இடுகின்றன. இவற்றை ஆண் கிவிகள் அடை காக்கின்றன.

# வள்ளுவத்துள் மனித நேய சிந்தனை

ப.அனோஜா
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

*(நேற்றைய தொடர்ச்சி)*

விண்ணுலகையும், மண்ணுலகையும் கைம்மாறாகக் கூடக் கொடுக்கலாம்.

மேலும் மனிதநேயப் பண்புகளில் போற்றுதற்குரிய நீதிபற்றிக் கூறுகையில் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து ஒருபக்கம் கோடாமை சான்றோர்க்கு அணி என்றார். நீதி செய்வதில் பக்கச்சார்பற்று நிற்கும் துலாக்கோல் போல் அமைந்து உறுதியுடன் செயற்படும் பக்குவம் வேண்டும். நீதி தவறாத வாழ்வில் தானும் தன்னைச் சாந்தவர்களும் நலம்பெற்று சீரும் சிறப்புடனும் வாழமுடியும் என வலியுறுத்தியுள்ளார்.

மனிதன் அடக்கம் உடையவனாக வாழ வேண்டும். "யாகாவாராயினும் நாகாக்க" என்றார். தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு நாம் எதைப் பேசினாலும் ஆராய்ந்து அறிந்து பேச வேண்டும். இல்லையேல் அது மிகப் பெரிய அழிவுக்கே வித்திட்டுவிடும். சிறந்த சிந்தனையும் நேரிய பார்வை யும் எம்மை உயர்த்திக்கொள்ள சிறந்த வழிக ளாகும்.

பிறர்க்கு உதவி செய்யும் மாண்புடைய மனிதனாக வாழும் பண்பு ஒப்பற்றது. ஊரின் நடுவே பழமரம் காய்த்துக் கனிந்தால் அது எத்தனையோ பேருக்குப் பயன் தரும். புலால் மறுத்தல், பொய் கூறாமை, பிறர்மனை நாடாமை போன்றவற்றின் சிறப்பையெல்லாம் நயந்துரைத்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக மனிதன் கல்வியறிவுடையவனாக வாழ்வதன் அவசியத்தை "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" எனக்கல்விய றிவை மனிதனின் கண்களாகவே உவமிக்கின்றார். மனம்போன போக்குக்கெல்லாம் போகாது நன்மை, தீமையை அறிந்து உண்மையாக நடக்கும் பக்குவத்தைக் கல்வியே வழங்கும்.

மேலும் ஊக்கமுடைய மனிதனின் மாட்சிமை பற்றிக் கூறுகையில் நிலத்தில் நீர்மட்டம் உயர உயர நீர்ப்பூக்களின் தாள்கள் எவ்வாறு உயருமோ அவ்வாறே மனிதனின் ஊக்க மானது உயர உயர சிறப்பும் மேலோங்கும். துன்பத்தைக் கண்டு அஞ்சக்கூடாது. வாழ்வில் இன்பதுன்பமென்பது சுழன் றோடும் சக்கரங்கள் போன்றவை.

எனவே அதைவிடுத்து இடுக்கண் வருங்கால் நகுக என அழ காகக் கூறியுள்ளார். மேலும் மனிதன் தூய்மை பேணுவதன் அவசியம் பற்றியும், சிறந்த நட்புறவு பற்றியும், இன் னோரன்ன பல விடயங்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். அது மட்டுமா, நாட்டில் நல்லாட்சி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகத் தருகிறார். காதலையும், வீரத்தையும் போற்றி மனம்போனபோக் கெல் லாம் வாழ்ந்த சங்ககாலத்தை அடுத்துவந்த சங்கம் மருவிய காலமான அறநெறிக் காலத்தில் மக்களை நெறிப்படுத்தும் நோக்கில் தோற்றம் பெற்றதே திருக்குறள் எனும் தெய்வத் திருநூல். இதில் எந்தக் காலத்துக்கும், எந்த மதத்துக்கும் உரியதுமான சீரிய மனித விழுமியங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன என் பது திண்ணம்.



வர்ணாச்சிரம தர்மங்களான கிருகஸ்தம், வானப்பிரஸ் தம், சந்நியாசம், பிரம் மச்சரியம் மற்றும் பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் ஆகிய ஒவ்வொரு வகையினருக்கும் உரியதும், அவரவர் கள் கடைப்பிடிக்க வேண்டியதுமான பல தர்ம சிந்தனைகள் வள்ளுவத்துள் சித றிக் கிடக்கின்றன. எனவே எமக்குப் பொருத்தமாக தினமொருகுறளை திறனாய்வு செய்திடு வோம். திடத்துடன் வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவாக மண் ஏற்றிய 52 டிப்பர்கள் பறிமுதல்

கொழும்பு,ஜூன் 26

சட்டவிரோதமான மண் கடத்தலில் ஈடுபட்ட 53 பேர் கைது செய்யப் பட்டுள்ளதுடன்,மண் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 52 டிப்பர்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் அம்பலாந் தோட்டை பல்லேரொட்டே பகுதி யில் நேற்று முன்தினம் இடம்பெற் றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் நீண்ட கால மாக இடம்பெற்று வந்த மண் அகழ்வு தொடர்பில் பிரதேச மக்க ளால் பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தன.

சுற்றுச் சுழலுக்குப் பங்கம் ஏற்படுத் தும் வகையில் இடம்பெற்று வந்த இந்தத் திருட்டு தொடர்பில் நேற்று முன்தினம் அதிகாலை விசேட சுற்றி வளைப்பு பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்டது.

அம்பாந்தோட்டைப் பிரதேசத்துக் குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் தலைமையின் கீழ், விசேட சுற்றிவளைப்புப் பிரிவின் அதிகா ரிகள் மற்றும் நான்கு பொலிஸ் நிலையங்களை சேர்ந்த பொலிஸார் கூட்டாக இணைந்து இந்தச் சுற்றி வளைப்பை மேற் கொண்டிருந்தனர்.

இதன்போதே குறித்த மண் கடத்த லில் நேரடியாகத் தொடர்புபட் டுள்ள 53பேர் கைது செய்யப்பட்டுள்ளது டன்,கடத்தலுக்குப் பயன் படுத்தப் பட்ட 52 டிப்பர் வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (த)

# பொலிஸார் மீது தாக்குதல் மேலும் ஐவர் கைது

தென்மராட்சி, ஜூன் 26

கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடமைக்குச் சென்ற பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தி அவர்களை கடமையைச் செய்ய விடாமல் தடுத்த குற்றச்சாட்டில் மேலும் ஐந்து பேரைப் கொடி காமம் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

குறித்த ஐந்து பேரும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்க னவே 16 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-9)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**Jaffna University Entrance Coaching Class For ART & DESIGN**

25.06.2015 ஆம் திகதிய விளம்பரத்தில் வழி காட்டல் கருத்தரங்கு ஜூன் 28,29 ஜூலை 01 -2015 என இருப்பதை ஜூன் 27 (சனி), 28 (ஞாயிறு), ஜூலை 01 (புதன்) -2015 என திருத்தி வாசிக்கவும்.

பட்டதாரி மாணவர்கள்

**JCB ஒப்ரேட்டர்/ சாரதி தேவை**

முன் அனுபவம் உள்ள JCB சாரதி தேவை. பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பிள்ளையார் ஸ்ரோஸ்
51 மானிப்பாய் வீதி, T.P : 077 722 2715
யாழ்ப்பாணம். 077 727 9151

**ஆதார வைத்திய சாலை- தெல்லிப்பழை**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர்
Dr. மு. உமாசங்கர் அவர்களின்
சேவை நயப்பு விழா

27.06.2015 சனிக்கிழமை நடைபெறுவதாக இருந் தது. தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி நிகழ்வு 01.07.2015 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. சிரமத்துக்கு வருந் துகின்றோம்.

நோயாளர் சேவையில் என்றும்,
லயன். சி. ஹரிகரன்
செயலாளர்,
நோயாளர் நலன்புரி சங்கம்

**தவறிவிட்டது**

சைலா விஜயரூபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 798373935V , லைசென்ஸ், இன்சூரன்ஸ், ரைக்ஸ் என்பன அடங்கிய பேஸ் உரும்பிராய் சுன்னாகம் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 077 433 4428
077 839 7548
(61399)

**மேசன்மார் தேவை**

✱ யாழ்நகரில் உள்ள சங்கென் வேலைத் தளத்திற்கு மேசன்மார் தேவை . தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியுண்டு.

விவரங்களுக்கு:
071 864 3635, 071 864 3636
071 869 7269

✱ முல்லைத் தீவிலுள்ள சங்கென் வேலைத்தளத்திற்கு வேலை செய்யக்கூடிய மேசன்மார் தேவை.

விவரங்களுக்கு:
071 238 7076,
077 877 0140

(c 16400)(3.5.)

**TRADE FINANCE & INVESTMENTS PLC**

விற்பனைக்குண்டு

மோட்டார் சைக்கிள்கள்

1. APPACHE 150 - NPBBF-XXXX
2. I SMART - NPBBF - XXXX
3. HONDA DREAM YUGA - NPBBK - XXX
4. HERO HONDA GLAMOUR - NPVV XXXX

தொடர்புகளுக்கு :- மேனகாந் 077 364 4409
TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898
(c 16205)

**வாடகைக்கு**

நல்லூருக்கு அண்மையாக அனெக்ஸ் ஒன்று வாடகைக்கு உண்டு. தனியறை இணைந்த குளியலறை , சமையலறை, கோல் என்பன உண்டு. முற்பணம் 250 000/=. அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 078 521 0573

**சிறுநீரகம் KIDNEY தேவை**

"O" இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை,
தகுந்த சன்மானம் வழங்கப்படும்
உடன் அழையுங்கள் - 076 600 4115
071 976 0258

**UNIVERSITY OF JAFFNA - SRI LANKA**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பீடத்தினால் நடத்தப்படும் சித்திரமும் வடிவமைப்பும், நடனம் மற்றும் சங்கீதம் ஆகிய பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 30.06.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அனுப்பத் தவறியவர்கள் தங்களுடைய விண்ணப் பங்களை உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு பதிவுத் தபா லில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர் கள். மேலும் தபாலில் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுவது காலதாமதமாவதன் காரணமாக விண் ணப்பங்களை நேரில் சமர்ப்பிப்பது வரவேற்கத் தக்கது.

பதிவாளர். 26.06.2015

**தேவை**

வீட்டுக்காவலாளி தேவை
தொடர்பு : 077 030 3982
(61394)(3.11.1)

**புத்துவெட்டுவான் அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் 2015**



அம்பாள் அடியார்களே தொன்மை வாய்ந்த அருள்மிகு புத்துவெட்டு வான் பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் மன்மத வருடம் ஆனிமாதம் 14ம் நாள் (29.06.2015) திங்கட் கிழமை காலை தொடக்கம் ஆரம்பமாகி மறுநாள் காலை வரை 30.06.2015 வரை நடை பெறும் என்பதனை பக்த அடியார் களுக்கு அறியத்தருகின்றோம்.

அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆலய
பரிபாலன சபையினர்
புத்துவெட்டுவான்-மாங்குளம்.
(61393)

**ST . JOHN'S COLLEGE, JAFFNA ANNUAL PRIZE GIVING 2015**

Saturday 27th June 2015
at 10.00 a.m

*Chief Guests*
Mr.Manicavasagar.Ilancheliyan
High Court Judge, Jaffna
&
Mrs. Lalitharanee Ilancheliyan
*Chairman*
Ven S.J. Jeyaveerasingan
Archdeacon of Jaffna
& Manager of the College
*Parents, old boys & well-wishers are cordially invited*
(c 16204) Principal, Staff & Students




**பணிநிலை வெற்றிடங்கள்**

1) சிறுமிகள் மேற்பார்வையாளர் - பெண்
2) முதியோர் மேற்பார்வையாளர் - ஆண், பெண்
3) முகாமைத்துவ உதவியாளர் - பெண்

குறிப்பு

1) வயது 30 இற்கு மேல்
2) முதியோர் , சிறுவர்களை அன்புடன் பராமரிக்க கூடியவராக இருத்தல் வேண்டும்
3) இல்லத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
4) கல்வித்தகைமைகள், அனுபவங்களுக்கான விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.
5) ஊதியம் நேர்முகத்தேர்வின் போது தீர்மானிக்கப்படும்.
6) விண்ணப்ப முடிவுத்திகதி - 15.07.2015

தலைவர் :
ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமம்
வதிரி , கரவெட்டி. தொடர்பு : 021 321 5156
021 226 3136


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களுக்குஇனி நன்னடத்தைச் சான்றிதழ்

யாழ்ப்பாணம் ,ஜூன் 26

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில்எவராவதுபோதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பு உடைய வர்களா எனக் கண்டறிந்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டால் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நன்னடத்தை சான்றிதழ் வழங்க முடியும் எனப் போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களுக்கு வேட்புமனுக்களை வழங்கக் கூடாது என்ற யோசனையில் சகல கட்சிகளின் தலைவர்களும் அண்மையில் கையொப்பமிட்டிருந்தனர்.

இதனை அடுத்தே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்புகின்ற வேட்பாளர்களுக்கு, போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பு இருக்கின்றதா என அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுமாயின் ,அவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும்.

அவர்கள் தொடர்பில் சரியான தகவல்கள் பெறப்பட்டு நன்னடத்தை சான்றிதழ் வழங்க தயாராக இருப்பதாக அபாயகரமான போதைக் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் வைத்தியர் திலங்க சமரசிங்க தெரிவித்துள்ளார். (த)


## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் அம்புறோஸ் யேசுதாசன்

(முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர், சுன்னாகம் அந்தோனியார் ஆலய சங்கிலித்தாம்)



தோற்றம் 1948 - 12 - 01 மறைவு 2015 - 05 - 30

கடந்த 30.05.2015 அன்று இறைவனடி சேர்ந்த அ.யேசுதாசன் அவர்களின் நினைவு நாள் நன்றி திருப்பலி சனிக்கிழமை 2015.06.27 அன்று மு.ப 11.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் இவர் வைத்தியசாலையில் நோயுற்று இருந்த காலப்பகுதியில் இவரது ஆன்மீக கடமைகளை நிறைவு செய்து உதவிய வைத்தியசாலை ஆன்மீக குருவானவருக்கும் பல வழிகளில் உதவிய வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்களுக்கும் அன்னாரின் மரண செய்தி கேட்டு நேரிலும் , தொலைபேசியிலும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களிற்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்ட அனைவருக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

Dr.சுப்பிரமணியம் றோட், சுன்னாகம். குடும்பத்தினர்.

(61302)



## துயர் பகிர்கின்றோம்

### சுப்பையா பிறேமகாந்



அவர்கள் 23.06.2015 செவ்வாய்க்கிழமை அன்று மறைந்த செய்தி கேட்டு நாம் மிகுந்த துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நியூ நகுலா ஜூவலர்ஸ்
உரிமையாளர், ஊழியர்கள்.
இல 45 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜூவலர்ஸ்
உரிமையாளர், ஊழியர்கள்.
இல 30,32 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(c 16213)



## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 27.07.1998 விண்ணில் 26.06.2014

செல்வன்
### அலோசியஸ் வின்சன்ற் மனோராஜ் அன்ரனி

(தரம் 11-J/ST.Johns College,Jaffna)

இவரது இறுதிப் பிரிவில் கலந்து கொண்டோருக்கும் விஷேசமாக பாடசாலை சமூகத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு உங்களது செபங்களிலும் இவரை நினைவுகூருமாறு வேண்டுகின்றோம்.

இறைவா உமதண்டை வந்த அடியாரை மன்னித்து உமது நித்திய பேரின்ப வான் வீட்டில் சேர்த்தருளும். ஆமென்!

காலை 6.30 இற்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். குடும்பத்தினர்.


# பல லட்சம் பெறுமதியான பொருள்களுடன் கொள்ளைக் கும்பல் கிளிநொச்சியில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26

7 லட்சம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான பொருள்களுடன் 6 பேர் கொண்ட கொள்ளைக்குழு ஒன்றை நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகேஸ் தெரிவித்தார்.

அந்தக் குழுவிடமிருந்து மோட்டார் சைக்கிள் 4, கமரா 3, சங்கிலி 1, காப்பு 1 சோடி, ஐ பாட் 2, தொலைபேசிகள் 4, வாள் 1 மற்றும் 6 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு வரும்போது பல்கலைக்கழக மாணவர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகினர். இதனையடுத்து 11 பேர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களது வாக்குமூலத்தின் அடிப்படையில் பலர் தேடப்பட்டு வருகின்றனர். அவ்வாறு தேடப்படுபவர்களில் ஒருவர் வாளுடன் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் அவர் திருட்டுக் கும்பலுடனும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரியவந்தது. அவரது தொலைபேசி அழைப்புக்களின் பிரகாரம் இடம்பெற்ற விசாரணையிலும் அது நிரூபணமாகியது. இதனடிப்படையில் கிளிநொச்சி சாந்தபுரம் மற்றும் உருத்திரபுரத்தில் 6 பேரடங்கிய கொள்ளைக் கும்பலைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் திருட்டுப் போயிருந்த பொருள்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது பற்றிய விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர், கட்டுடையை சேர்ந்த 3 பேர், சங்கானையைச் சேர்ந்த 2 பேர், மானிப்பாயை சேர்ந்த ஒருவர் என 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் குறித்த திருட்டுக் கும்பலுடன் தொடர்புபட்டுள்ளனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர். குறித்த 7 பேரும் நேற்று மல்லாகம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொறுப்பதிகாரி மகேஸ் மேலும் தெரிவித்தார். (த-4)

# கோஷ்டி மோதலில் நேற்று 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்துக்கு அருகில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 5 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். இரண்டு தரப்புகளுக்கு இடையில் மைதானம் தொடர்பில் எழுந்த பிரச்சினையே மோதலுக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை காயமடைந்தவர்கள் சிகிச்சை பெறும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்னாலும் இரு தரப்பும் முறுகிக்கொண்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது. எனினும் சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறைப் பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

கொற்றாவத்தை மைதானம் தொடர்பில் இரு தரப்பினருக்கு இடையே நீண்ட காலமாக பகைமை இருந்து வந்தது. இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கொன்று இடம்பெற்றும் வந்துள்ளது. இந்த நிலையில் நேற்றுக் காலை மைதானம் நோக்கிச் சென்ற இளைஞர்கள் மீது வேறொரு குழுவினர் தாக்குதல் நடத்தியதை அடுத்து மோதல் ஏற்பட்டது.

கத்திகள், பொல்லுகள், வாள் என்பவற்றைக் கொண்டு தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று மதியம் திடீரென இரு தரப்பும் வைத்தியசாலைப் பகுதியில் முறுகிக்கொண்டன. இதனால் வைத்தியசாலைப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனை அடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (த-109)

# தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தும் செயற்றிட்டம்

கிளிநொச்சி, ஜூன் 26

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இளைஞர், யுவதிகளை இலக்காகக் கொண்டு அவர்களின் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தவும் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தவதற்காகவும் நோர்வே அரசின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிறுவனத்தின் ஊடாக அந்தந்த மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களூடாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் இணைய விரும்பும் இளைஞர் யுவதிகள் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாலத்தின் கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப. 2 மணிவரை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி சிவசக்தி சயந்தனும், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் திருச்சி நவரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## வலய நிலை சித்திரப்போட்டி

தென்மராட்சி, ஜூன் 26

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கான வலய நிலை சித்திரப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைமண்டபத்தில்நடைபெறவுள்ளது. பங்குபற்றவுள்ள பாடசாலைகளை குறித்த நேரத்துக்கு முன்னர் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-9)

## மேல் மாகாண முதலமைச்சருக்கு எதிராக முறையீடு

கொழும்பு,ஜூன் 26

மேல் மாகாண முதலமைச்சருக்கு எதிராக நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க காணி விவகாரம் ஒன்று தொடர்பில் சுமார் 70 மில்லியன் ரூபா நிதியை கோரியுள்ளார் என்று தெரிவித்தே நிதி மோசடி விசாரணைப் பிரிவில் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட் டுள்ளது. மொரட்டுவையைச் சேர்ந்த நபர் ஒருவரே இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார். (த)

## தண்டனை

பிரசாத் (வயது-5) ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர். வில்வராஜாவின் குடும்பத்தினர் இன்னமும் யாழ்ப்பாணத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். அவரது மகளான சோபா தெரிவித்ததாவது:

அப்பா கொலை செய்யப்படும் போது எனக்குப் 16 வயது. நான் குடும்பத் தில் மூத்தவள். இப்போது எனது அம் மாவும், நானும் இன்னமும் மூன்று பெண் சகோதரர்களும் இருக்கின்றோம். அப்பா, சகோதரங்கள் இல் லாமையினால் அம்மாதான் கஷ்டப்பட்டு எங்களை வளர்த்தார். இப்போதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார். எங்களுக்கு உதவிகள் இல்லை.

குடும்பத்தின் உழைப்பாளிகளை இழந்தமையினால் நாங்கள் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த நிலையில், அப்பாவையும் சகோதரங்களையும் கொலை செய்தவர்களுக்கு 15 வருடங்களுக்குப் பின்னராவது தீர்ப்புக் கிடைத்திருப்பது மகிழ்ச்சிதான். அப்பாவின் கொலைக்கு நீதி கிடைத்தாகவே சந்தோசப்படுகின்றோம்.

94 சாட்சியங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலும் ஏனைய 4 பேரும் போதிய சாட்சியின்றி விடுவிக்கப்பட்டமை ஏமாற்றமளிக்கின்றது என்றார் சோபா.

இதே சம்பவத்தில் தனது கணவரையும் ஓர் மகனையும் இழந்த திருமதி ஞானசந்திரனும் இதே கருத்தையே தெரிவித்தார்.

"15 வருடங்களின் பின்னர் நீதி நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. ஆனாலும், நான் எனது கணவரை இழந்து ஏனைய பிள்ளைகளை முன்னேற்றுவதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றேன். இப்போதும் கூலி வேலை செய்தே எனது குடும்பத்தை பார்க்கின்றேன். எனக்குக் கேணியா வருத்தம். வைத்தியர்கள் கஷ்டமான வேலை செய்ய வேண்டாம் என்று சொல்கின்றனர். ஆனாலும் எனது குடும்பத்தை பரா மரிப்பதற்காக கூலி வேலைக்கு இப்போதும் செல்ல வேண்டியிருக்கின்றது " என்றார். (உ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனது கணவர் சரணடையும்போது பெயர் கூறி அழைத்தது இராணுவம்

*மலரவனின் மனைவி ஜெனிவாவில் சாட்சியம்*

ஜெனிவா, ஜூன் 26
இராணுவத்தினரிடம் எனது கணவர் சரணடையும் போது, அவரது பெயரைக் கூப்பிட்டே இராணுவத்தினர் அழைத்துச் சென்று என்னிடமிருந்து பிரித்தனர். இதன் போது பல பெண் புலிப் போராளிகளையும், அவர்களது பெற்றோரிடமிருந்து பிரித்து – இராணுவத்தினர் தனியாக அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு இறுதிக் கட்டப் போரின் போது சரணடைந்து இன்று வரை காணாமற் போயுள்ள, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாக சேவைப் பொறுப்பாளர் மலரவனின் மனைவி, ஜெனீவாவில் சாட்சியமளித்தார். அவருடன், இராணுவத்தினரிடம் சரணடைய வந்த போது சுட்டுக் கொல்லப்பட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோரது உறவினரும் ஜெனீவாவில் சாட்சியமளித்தனர்.

ஜெனீவாவில் தற்போது 29 ஆவது, மனித உரிமைகள் கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதன் பக்க நிகழ்வுகளில், இலங்கை தொடர்பான விவாதம் நடைபெற்று வருகின்றது. அதன் ஓரங்கமாக இடம்பெறும் கூட்டத்திலேயே, புலிகளின் சரணடைவும் அதன் பின்னர் காணாமற் போனமை தொடர்பிலும் பேசப்பட்டது. பசுமை தாயகம் மற்றும் அமெரிக்காவின் தமிழர் பாதுகாப்பு சபை ஆகியன இந்த கூட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனது மனைவி குறிப்பிடுகையில், 17 ஆம் திகதி மே மாதம் 2009 ஆம் ஆண்டு மக்களுடன் மக்களாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தேன். நான் அவருடன் இருக்கின்ற போது, சரணடைதல் தொடர்பில் பலருடன் பேச்சுக்கள் நடந்தது தெரியும். பின்னர் 18 ஆம் திகதி சரணடையப் போகும் போது அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 18 ஆம் திகதி நடந்த சம்பவங்கள் எனக்கு உடனடியாகத் தெரியாது. நான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர், முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தேன். அங்கிருந்து வெளியில் வந்த பின்னரே, சரணடையச் சென்ற போது சுட்டுக் கொல்லப்பட்ட விடயங்களை அறிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் சாட்சியமளித்த, தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் மலரவனின் மனைவி, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி, வட்டுவாகல் ஊடாக இராணுவத்தினரிடம் சரணடைந்தோம். இதன் போது இராணுவத்தினர், எனது கணவர் உள்ளிட்ட பல்வேறு தளபதிகளின் பெயர்களைக் கூறி அழைத்து, குடும்பங்களிடமிருந்து அவர்களைப் பிரித்துச் சென்றனர். இதன் போது எனது கணவரை நான் பிடித்து வைத்திருந்த போது வயரால் இராணுவத்தினர் என்னைத் தாக்கினர். பின்பு நான் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். இன்று வரை கணவர் எங்கே என்று தெரியாது எனக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனின் மகன் சாட்சியமளிக்கையில், அப்பாவுடன் மே 18 ஆம் திகதி காலையில் கதைத்தேன். அப்போது சரணடையப் போகின்றோம் என்பதை மாத்திரம் சொன்னார். அதன் பின்னர் தொடர்பு கொள்ள வில்லை என்று தெரிவித்தார். இதே வேளை, அப்பாவுடன் மே 15 ஆம் திகதி கதைத்த போது, சர்வதேச சமூகத்துடன் சரணடைவு தொடர் பில் பேசிக் கொண்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டதாக அவர் தெரிவித்தார். (த-5)

# தங்கம் கடத்த முற்பட்ட எட்டு இந்தியர்கள் கைது

தங்கம் கடத்த முற்பட்ட எட்டு இந்தியர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சுமார் 45லட்சம் பெறுமதியான தங்கத்தைக் கடத்த முற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேற இருந்த நிலையில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இந்தியர்கள் 8பேரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா தம்பையா



காரைநகர், களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும், இல 57, சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தம்பையா நேற்று (25.06.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தர்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பையாவின் (இளைப்பாறிய ஆசிரியர்) மனைவியும், இந்திராணி, யோகராணி, அம்பிகைபாகன் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் கனடா), நடேசலிங்கம், தியாகலிங்கம் (வைகுந்தன், களஞ்சியம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பரமானந்தம், ராஜலோஜினி, பரமேஸ்வரி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.06.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

57, சீனிவாசகம் வீதி,
கொட்டடி யாழ்ப்பாணம்.

(61303)(10.1)

தகவல்: குடும்பத்தினர்.
த.தியாகலிங்கம் (மகன்)
0775921176

### அப்புத்துரை விக்னகுமார்



நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை விக்னகுமார் நேற்று (25.06.2015) வியாழக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - லீலாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌரீஸ்வரியின் (முகாமைத்துவ உதவியாளர், நகரசபை சாவகச்சேரி) அன்புக் கணவரும், றோகானி, சிறானி, அபிநாத், சிவானி, கோபிநாத் (மாணவன், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.06.2015) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாளையடி அம்மன் கோயில் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.
(T.P: 077 078 2637)

தகவல்:
குடும்பத்தினர்.

# பல்கலை மாணவர் மீது வாள் வெட்டு: இராணுவச் சிப்பாய் வாளுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இராணுவத்தில் பணியாற்றிவரும் மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகேஸ் தெரிவித்தார்.

வாள்வெட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஏற்கனவே 11 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 12 ஆவது சந்தேக நபராகக் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ராஜ்குமார் கபில்ராஜ் (வயது 24) என்பவரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகினர். அவர்களில் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். கைதான நபரிடம் நடத்திய விசாரணையில் குறித்த நபர் இராணுவத்தில் பணியாற்றுபவர் என்பது தெரியவந்துள்ளது அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ள தாகவும் அவர் தெரிவித்தார். (த-4-101)

# அதிவேக நெடுஞ்சாலை விஸ்தரிப்பு விரைவில்

கொழும்பு,ஜூன் 26
தெற்கின் அதிவேக நெடுஞ்சாலையை விஸ்தரித்தல்,உள்ளிட்ட பல்வேறு வீதி அபிவிருத்தி திட்டப்பணிகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசினால் முன்னெடுக்கப்பட்ட பல வீதி அபிவிருத்தித் திட்டங்கள் நிதிப் பிரச்சினைகளால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்போது மைத்திரி அரசினால் இடைநிறுத்தபட்ட அந்தத் திட்டங்கள் புத்துயிர் பெற்றுள்ளதாக அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டியிருந்தார்.

தற்போதைய நல்லாட்சி அரசின் 100நாள் வேலைத் திட்டத்தின் மூலமாக முறையாக நிதி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் ,திறைசேரியில் தற்போது சிறு சிறு தொகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் , அனைத்து வீதிகளும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளதுடன் பல புதிய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார். (த)

# 9 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்; வயோதிபருக்கு விளக்கமறியல்

வடமராட்சி, ஜூன் 26
வல்வட்டித்துறைப் பகுதியில் 9 வயதுச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்த 69 வயது வயோதிபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


கடந்த 18 ஆம் திகதி குறித்த சிறுமிக்கு 100 ரூபாவைக் கொடுத்து துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு இந்த வயோதிபரை வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினார்கள்.

சந்தேக நபரான வயோதிபரைப் பிணையில் விடுமாறு கோரி அவர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்த போதும்,இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான குற்றச் செயல்களுக்குப் பிணை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா, எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டதுடன் சந்தேகநபரை இன்று வெள்ளிக்கிழமை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (த-173)

## மரண அறிவித்தல்

### யாக்கோப்பு இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற கணக்காளர்-பனை, தென்னை வளஅபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்)



கோப்பாய் தெற்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட யாக்கோப்பு இம்மானுவேல் 24.06.2015 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி யாக்கோப்பு அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் பாசத்திற்குரிய மகனும் ஆவே மரியலில்லி, பார்பறா, அருட்சகோதரி மேரி பிலோமினா (செபமாலைக் கன்னியர் மடம்- அச்சுவேலி), மேரி மெக்டலீன், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலிங்கம் வெலிச்சோர், ஸ்ரீறங்கநாதன், பேனாட் மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், றஜனி (கனடா), சோபியா, ஜெனி, நிக்ஷனா, நிக்ஷலா, மொறின், மொறிஸ் (அருட் சகோதரன் குருத்துவ கல்லூரி கண்டி), டொனால்ட், அனோஜ், றொஷான், திரியங்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் தாசன் (கனடா), குமார், சிவா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் பவன்(கனடா), அற்றிஷன்(கனடா), நிலான் ஆகியோரின் பாசமிகு பேரனும் இறைபுகழ்வாழியின் அன்புப் பெறாமகனும், அருட்சகோதரி கிறிஸ்ரீனா சேலி(செபமாலைக் கன்னியர்மடம் - அச்சுவேலி) அன்னமலர் ஆகியோரின் அன்புநிறை மருமகனு மாவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றித்திருப்பலியானது இன்று (26.06.2015) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கோப்பாய் புனித மரியன்னை ஆல யத்தில் ஒப்புக்கொடுத்து நல்லடக்கத்துக்காக புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(61396)

தகவல்:
குடும்பத்தினர்.

# மாபிள் வெட்டும் இயந்திரம் பதம்பார்த்தது காலை

தென்மராட்சி, ஜூன் 26
வீட்டு தளத்திற்கு மாபிள் பொருத்தும் பணியில் பயன்படுத்திய மின்சாரத்தில் இயங்கும் இயந்திரம் அதனைப் பயன்படுத்தியவரின் காலை வெட்டிப் பதம் பார்த்தது. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை வரணியில் இடம்பெற்றது. தாவளை – இயற்றாலை யைச் சேர்ந்த நற்குணம் மயூரன் (வயது–31 ) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிருசுவில்

தன்னுடன் வந்தவர்களை இராணுவத்தினர் கொன்று மலக்குழிக்குள் போட்டு மூடிவிட்டனர் என்று அதிர்ச்சித் தகவலை அவர் வெளியிட்டார். தன்னையும் அவர்கள் வெட்டினர் எனினும் அவர்கள் அசந்திருந்த சமயத்தில் நைசாக நழுவித் தான் தப்பி வந்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்தார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில், தேடுதல் நடத்தப்பட்டது.

சாட்சியத்தின் அடிப்படையில் இடம் பெற்ற விசாரணைகளின்போது, காணமற்போயிருந்த எட்டுப் பேரினதும் சடலங்கள் குழிக்குள்ளிருந்து மீட்கப்பட்டன. அனைவரும் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட் டிருந்தனர். 5 வயதுச் சிறுவன் ஒரு வனும் இவ்வாறு கொன்று புதைக் கப்பட்டிருந்தான்.

கொலை தொடர்பான சந்தேகத்தில் அதிகாரி உட்பட 9 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை வைத்து நடத்தப்பட்ட அடையாள அணி வகுப்பில் 5 இராணுவத்தினரை சாட்சி அடையாளம் காட்டினார்.

வழக்கு ட்ரயல் அற் பார் நீதிமன்றத்தினூடாக விசாரிக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு சில சட்டச் சிக்கல்கள் காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு மீண்டும், மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. 5 இராணுவத்தினருக்கு எதிராகவும் 17 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

விசாரணையின் ஒரு பகுதியாக 2012 ஆம் ஆண்டு மிருசுவிலுக்கு நேரடியாக வருகை தந்த நீதிபதிகள் குழு சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்வையிட்டது.

15 வருடங்களாகத் தொடர்ந்த, இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அரச தரப்பின் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சரத் ஜெயமன்னே மன்றில் முன்னிலையாகினார். இராணுவத்தினர் சார்பில், அனில் சில்வா, அல்விஸ் ஆகியோரும், கொல்லப்பட்டவர்கள் சார்பில், மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல், ரனிதா மயூரன், சுரங்க பண்டார, மங்களா சங்கர் ஆகியோர் வாதாடினர்.

விசாரணை நடத்திய மூன்று நீதிபதிகள் குழுவில் ஒரு நீதிபதி ஏற்கனவே ஓய்வு பெற்ற நிலையில், எஞ்சிய இரு நீதிபதிகளான மேல் நீதிமன்ற நீதிபதிகள் பிரீதி பத்மன் சூரசேன, லலித் ஜெயசூரிய ஆகிய இருவரும் நேற்றுத் தீர்ப்பை வாசித்தனர்.

முதலாவது குற்றவாளியான முன்னாள் சார்ஜன் சுனில் ரட்ணாயக்கவுக்கு தூக்குத் தண்டனை விதித்து அவர்கள் தீர்ப்பளித்தனர். ஏனைய நான்கு பேருக்கும் கொலையுடன் தொடர்புகள் இருப்பதற்கான போதிய ஆதாரங்கள் இல்லாமையினால் அவர்களை விடுவிக்கிறார்கள் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

(உ-5)

## புலம்பெயர்

புலம்பெயர் தமிழர்கள், ஐக்கிய இலங்கைக்குள் செயற்படவே விரும்புகின்றனர். ஆனால், அவர்களைப் புலிகள் என்று சித்திரித்து அவர்கள் இலங்கைக்கு திரும்புவதையும் முதலீடுகளை மேற்கொள்ள முற்படுவதையும் தடுக்கிறீர்கள். சமூகப் பொறுப்புள்ளவர்களை இந்த நாட்டிக்குள் அனுமதிக்க மறுக்கின்றீர்கள் – என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தால் வெளியிடப்பட்டதான சர்வதேச பாதுகாப்பு தொடர்பில் 2014ஆம் ஆண்டுக்கான அறிக்கை குறித்து பேராசிரியர் ஜி. எல். பீரிஸினால் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச ரீதியில் இன்னும் புலிகள் இயங்கி வருவதாகக் கூறுகின்றனர். இது ஒரு புதிய விடயமல்ல. இதனை நாமும் அறிந்தே வைத்திருக்கின்றோம்.

இருந்த போதிலும் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு தீர்வு ஒன்று வேண்டும் என்பதை வலியுறுத்தியே கடந்த அனைத்து தேர்தல்களிலும் எமது மக்கள் வாக்களித்து வந்துள்ளனர். நாம் முன்னைய அரசுடன் 18 சுற்றுப் பேச்சுகளை மேற்கொண்டிருந்தோம். இருப்பினும் எந்தவித முடிவும் இன்றிய நிலையில் அவர்களே அந்த பேச்சுக்களை முறித்துக் கொண்டனர். சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ளாமைக்காக அன்றைய ஆட்சியாளர்கள் வெட்கப்பட வேண்டும்.

உள்ளக விசாரணை ஒன்றையே 2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் சர்வதேச மனித உரிமைகள் சபையில் சர்வதேச நாடுகளின் கோரிக்கையாக இருந்தது. எனினும், முன்னைய அரசு அதனை செயற்படுத்தாத காரணத்தால்தான் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு தள்ளப்பட்டுள்ளது.

அக்காலப்பகுதிகளில் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விடயங்களை அன்றைய பெருந்தோட்ட அமைச்சர் நிறைவேற்றிக் கொண்டிருந்த வேளை அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பின்வரிசையில் அமர்ந்திருந்ததையிட்டு வெட்கப்படுகின்றேன்.

இப்படியான தகுதியற்றவரான பீரிஸ் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அறிக்கை தொடர்பில் பேசுவதற்கோ எமது நாட்டினதும் மக்களினதும் இறைமை பற்றி பிரஸ்தாபிப்பதற்கோ எந்த அருகதையும் அற்றவர் என்பதையும் கூறிக் கொள்கின்றேன்.

க.வி.விக்கினேஸ்வரன் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர். அவர் தனது நிர்வாகப் பிரதேசத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்று கூறுவதற்கு அனைத்து உரிமையும் கொண்டிருக்கிறார். அவர் அவ்வாறு கூறுவதால் க.வியை விடுதலைப்புலியாக சித்திரிக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

இவர்கள் இந்நாட்டில் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் புலிகள் என்றும் அச்சுறுத்தல்காரர்கள் என்றும் சர்வதேசத்துக்கு சித்திரித்துக் காட்ட முயற்சிக்கின்றனர். இவர்கள் தொடர்பில் நான் அலட்டிகொள்ளவில்லை. ஆனால், நாட்டில் பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம் என்று கூறிக் கொள்கிறேன்.

இந்நாட்டில் வாழும் சகலருக்கும் சமத்துவம் இருக்க வேண்டும். அப்படி இல்லாதுவிடின் இறைமைபற்றி பேசுவதற்கு எவருக்கும் அருகதை இல்லை – என்றார்.

(த-சி)

## வடக்கு

வழக்கில் வழங்கிய கட்டளையிலேயே நீதிபதி மா.இளஞ்செழியன் பொலிஸாருக்கு இந்த இறுக்கமான பணிப்புரை களை விடுத்துள்ளார்.

அவரது கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குற்றங்கள் புரியும் நெற்கபேக்களைப் பொலிஸார் புலனாய்வு மூலமாகக் கண்காணித்து அவர்களுக்கு எதிரா கச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றம் புரிபவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துவதுடன் நெற்கபேக்களை மூடுவதற்கு வேண்டிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள், மாணவர்களைத் தனியாக நெற்கபேக்களுக்குள் அனுமதிக்கக் கூடாது. பெற்றோருடன் வரும்போது மாத்திரமே அவர்களை உள்ளே அனுமதிக்க வேண்டும். மாணவ மாணவியரையும் நெற்கபேக்களுள் தனியாக அனுமதிக்கக்கூடாது. ஆசிரியர், பெற்றோருடன் வரும்போது மாத்திரமே அனுமதிக்க வேண்டும். காதலர்களின் பொழுதுபோக்கிடமாக இயங்க நெற்கபேக்களை அனுமதிக்கக்கூடாது.

புலனாய்வு மூலம் நெற்கபேக்கள் கண்காணிக்கப்பட்டு சைபர் குற்றங்கள் புரிகிறார்களா என்பதனை அவதானித்துச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நெற்கபேக்களில் அறிவியற் புரட்சித் தகவல்களைத் தரவிறக்கம் செய்வதனைவிட யாழ்ப்பாணத்தில் பாலியல் ரீதியான தகவல்கள் அதிகளவில் தரவிறக்கம் செய்யப்படுவதாகத் தரவுகள் கூறுகின்றன. அத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்கும் நெற் கபேக்கள் பொதுமக்களின் பயன்பாட்டுக்குத் தடைசெய்யப்பட வேண்டும். நெற்கபேக்களில் அத்தகைய படங்களைப் பார்த்து சட்ட ஒழுங்குக்கு உட்பட்டு நடக்காதவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

நீதிமன்றக் கட்டளை பெற்று தொலைத் தொடர்பு நிறுவனங்கள் ஊடாகக் குறிப்பிட்ட நெற் கபேக்கள் இணையக் குற்றங்கள் புரிகின்றனவா என்பதனைக் கண் காணித்து அவர்கள் உள்நுழைகின்ற தளங்களை அவதானித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முகப்புத்தகம், ருவிற்றர் போன்ற வலைத் தளங்கள் நன்னோக்கத்திற்காக, தொடர்பாடலுக்காக, விரைவில் தகவல்களைப் பெறுவதற்காக உருவாக்கப்பட்டதே. இந்த அறிவியல் புரட்சியை நாசப்படுத்த சிலர் முகப்புத்தகம் ருவிற்றர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மூலமாகக் குற்றச் செயல்கள், கலாசார சீரழிவுகளில் ஈடுபடுகின்றவர்களைச் சட்டத்தினூடாகக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமூகச் சீரழிவை ஏற்படுத்தும் இணையத்தளங்களைக் கட்டுப்படுத்த நீதிமன்ற உத்தரவுகள் மூலமாக நடவடிக்கை எடுப்பதுடன் அவற்றுக்குத் துணை போகும் நெற்கபேக்கள் சட்ட ரீதியாக இயங்குகின்றனவா? சட்ட ரீதியான பதிவுகளுடன் இயங்குகின்றனவா? இணையக் குற்றங்கள் புரிகின்றனவா? என்பனவற்றைப் பொலிஸார் கண்காணிக்க வேண்டும். குற்றம் புரியும் நெற்கபேக்களை நீதிமன்ற உத்தரவின்படி இழுத்து மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறிவியல் புரட்சி மூலம் அறிவை வளர்ப்பதற்கு நீதிமன்று தடையாக இருக்காது. மாறாக அறிவியல் புரட்சி என்ற பெயரில் சமூக, கலாசார சீரழிவை ஏற்படுத்தும் வகையில் இயங்கும் நெற்கபேக்களைச் சட்டக் கண்காணிப்புக்குள் பொலிஸ் கொண்டு வரவேண்டும் – என்று தெரிவித்துள்ளது.

(உ-4)

## போதையை

மற்றும் கெட்ட நோக்கத்துடனான ஆள்கடத்தல், முகநூல் பாவனை, பாலியல் முறைகேடுகள், மதுப் பாவனை, புகையி லைப் பாவனை, தெரு விபத்து, மாணவர் சீரீர தண்டனை, வீண்வார்த்தைப் பிரயோகம் ஆகியவற்றில் ஒன்று பற்றிய செயற்பாடு [illegible] [illegible] னைக் கொண்டு மேற்கொள்ள வேண்டும் என்று வட மாகாணக் கல்வி அமைச்சு அறி வுறுத்தியுள்ளது.

இதேவேளை, இன்று காலை 8.20 தொடக்கம் 10 மணிவரை இது தொடர்பான நடைபவனிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. போதைப் பாவனை, சட்டவிரோதக் ஆள்கடத் தல், முகநூல் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், மதுப் பாவனை, புகையிலைப் பாவனை, தெரு விபத்து, மாணவர் சீரீர தண்டனை, வீண்வார்த்தைப் பிரயோகம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் சுலோகங்களுடன் இந்த நடைபவனி இடம்பெறும்.

இதனைவிட சர்வதேச போதைப் பாவனை மற்றும் சட்டவிரோதக் கடத்தல் என்பவற்றிற்கு எதிரான தினம் இன்று. அதனையொட்டி இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**தீவக வலயம்:** வேலணை நகரம், நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, **யாழ். வலயம்:** யாழ். நகரம், கொக்குவில், திருநெல்வேலி, ஆவரங்கால், அச்சுவேலி, உரும்பிராய், **வலிகாம வலயம்:** சங்கானை நகரம், வட்டுக்கோட்டை, மருதனார் மடம், சுன்னாகம், மானிப்பாய், பண்டத்தரிப்பு, கீரிமலை, **தென்மராட்சி:** சாவகச்சேரி நகரம், கொடிகாமம், கைதடி, நாவற்குழி, **வடமராட்சி:** பருத்தித்துறை, குடத்தனை, உடுப் பிட்டி, வல்வெட்டித்துறை, உடுத் துறை, **கிளிநொச்சி வலயம்:** பளை, தர்மபுரம், கிளிநொச்சி நகரம், முழங்காவில், துணுக்காய் வலயம்: ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, பாண்டியன்குளம், **முல்லைத்தீவு வலயம்:** முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, மடு வலயம்: அடம்பன், **மன்னார் வலயம்:** மன்னார் நகரம், முசலி, நானாட்டான், முருங்கன், வங்காலை, வவுனியா வடக்கு வலயம்: கனக ராயன்குளம், புளியங்குளம், ஓமந்தை, புதுக்குளம், கிராஞ்சி, **வவுனியா தெற்கு வலயம்:** வவுனியா நகரம், நெடுங்குளம், செட்டிக்குளம், பரக் கும்பர ஆகிய இடங்களில் விழிப்பு ணர்வு நிகழ்வுகளில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(உ-4)

## நான்

மன்றில் கதறி அழுதனர்.

மிருசுவிலில் 8 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முதலாவது குற்றவாளியான, இராணுவ சார்ஜன் சுனில் ரட்ணாயக்கவிடம், அவரது கருத்தைச் சொல்வதற்கு நீதிபதி சந்தர்ப்பம் வழங்கினார்.

விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்களான ஆர்.டபிள்யூ.எஸ்.முனசிங்க, பி. எம்.ஜயரத்ன, பி.சமன்குமார, காமினி முனசிங்க ஆகிய நால்வரும் முதலாவது குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதைக் கேட்டு மன்றில் கதறி அழுதுள்ளனர்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பின் மூலம் இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு உள்நாட்டுக்குள் பலம் வாய்ந்த கட்டமைப்பொன்று இருக்கின்றது என்பது நிரூ பிக்கப்பட்டுள்ளது என்று வழக்கில் அரச தரப்பில் முன்னிலையான சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமன்ன தெரிவித்தார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் நியாயமான முறையில் விசாரணைகளை மேற்கொண்டதன் காரண மாகவே இந்தத் தண்டனையைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## குடாநாட்டிலும்

இந்த வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள். இவை தென்பட்டால் தாமதிக்காது உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லும்படி சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். “இந்த நோய்த் தொற்று ஏற்பட்டால் எவ்வளவுக்கு எவ்வளவு நேரம் தாமதிக்காது சிகிச்சைக்கு செல்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நோய் குணமாகும் வீதம் அதிகமாகும்” என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய இடங்களில் இன்புளுவன்சா வைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தது. பின்னர் வவுனியாவுக்குப் பரவியது. தற்போது மன்னார், யாழ்ப்பாணம் வரை பரவியுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் மன்னாரில் இன்புளுவன்சா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்து விட்டார். “அவர் வரும்போதே கவலைக்கிடமான நிலையில்தான் வந்திருந்தார். அவர் இன்புளுவன்சா வைரஸ் தொற்றினால்தான் இறந்திருப்பார் என்ற முடிவுக்கு வரமுடிகிறது எனினும் சந்தேகத்தை உறுதிப்படுத்த அதுபற்றிய ஆய்வுக்கு பாகங்கள் அனுப்பட்டுள்ளன” என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக இந்த வைரஸ் தொற்றினால் பீடிக்கப்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். அவர்களில் சிலர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுத் திரும்புகின்றனர். சிலர் வைத்தியசாலை விடுதிகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். குழந்தைகள் 9 பேரும் கர்ப்பிணிகள் 6 பேரும் ஏனையவர்கள் 5 பேரும் என 20 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

குழந்தைகள், கர்ப்பிணிகளில் இந்த வைரஸ் அதிகம் தொற்றுவதுடன் நிர்ப்பீடனம் குறைந்தவர்களிலும் – பாதிக்கப்பட்டவர்களிலும் இந்தத் தொற்று அதிகம் ஏற்படுகிறது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

(உ-4)

## மீண்டும்

பேற்றனர். அங்கு மீண்டும் தும்பு உற்பத்தி நிலையத்தினை ஆரம்பிக்க திட்ட மிடப்பட்டது. காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் அங்கு வந்த படையினர் “இந்தக் காணி படையினருக்குச் சொந்தமானது” என்ற அறிவித்தலை ஒட்டிய பின்னர் காணியைத் துப்பரவு செய்து வருகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

காணியைச் சுற்றி வேலி அடைக்க ஒப்பந்தம் செய்தவர் அரைவாசி வேலை முடிந்த நிலையில் படையினரின் தலையீட்டினால் செய்த வேலைக்குரிய கொடுப்பனவும் பெறாத நிலையில் ஒதுங்கியுள்ளார். இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதிலும் ஒருவரும் தெளிவான பதிலை வழங்கவில்லை.

ஏழு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இந்தக் காணியையும் தும்புத் தொழிற்சாலைக் கட்டடத்தையும் 2000ஆம் ஆண்டிலிருந்து படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

(உ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்றிக்குட்டி சிங்கத்துக்கு சவாலா?

கொழும்பு, ஜூன் 26
பன்றிக்குட்டி சிங்கத்துக்கு சவால் விடுவது போன்று அமைச்சர் ராஜிதவின் புதல்வர் செயற்படுகின்றார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அண்மையில் ராஜிதவின் புதல்வர் சதுர சேனாரத்ன சவால் விடுத்திருந்தார்.
முடிந்தால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பெலியத்த தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி யீட்டிக் காட்டுமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கு சதுர சேனாரத்ன சவால் விடுத்திருந்தார்.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கப்பட்டு வரும் சவால்களை அவர் பொருட்படுத்த மாட்டார் என மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
மஹிந்த இந்த நாட்டின் வீரர் எனவும், மக்கள் அவர்மீது மரியாதை கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.
மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்தவொரு விசேட பதவியோ, விசேட பாதுகாப்போ, வேறு வரப்பிரசாதங்களோ அவசியமில்லை எனவும், வெகுவிரைவில் மக்கள் அவரிடம் நாட்டை ஒப்படைப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## கோத்தாவின் பிரஜாவுரிமை பறிபோகும்?

கொழும்பு, ஜூன் 26
மிக் விமானம் கொடுக்கல் வாங்கல் குறித்து முறையாக விசாரணை நடத்திச் சட்டத்தை செயற்படுத்தினால் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பிரஜாவுரிமை பறிபோகும் அபாயம் உள்ளதென மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.
மிக் விமானக் கொள்வனவில் ஏற்பட்ட நிதி மோசடிகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது,
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போர் ஆரம்பித்ததே தரகுப் பணம் பெற்றுக் கொண்டு தான். தான் வெளியிடும் கருத்து பொய் என்றால் தனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சவால் விடுத்துள்ள மங்கள, 2006ஆம் ஆண்டு 4 மிக் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவை அதிக விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் போர்க் காலம் என்பதால் அது கணக்கிலெடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.
இந்தக் கொடுக்கல் வாங்கலுக்கு இணைப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் லண்டன் அலுவலகம் என்று ஒன்று இல்லை எனவும் பிரிட்டிஷ் வேர்ஜினியா என்ற நிறுவனம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் கும்பலுக்குச் சொந்தமானதெனவும் மங்கள சமரவீர தெரிவித்தார்.
இந்தக் கொடுக்கல் வாங்கலுடன் உக்ரைன் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்குத் தொடர்பு இருப்பதாகவும் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.
உதயங்கவின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப் பெற்றதாகவும் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மங்கள தெரிவித்தார்.
இவையாவும் பொய் என்று கோத்தபாய சொல்வாரானால் எனக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)

# செப்ரெம்பருக்கு முன் புதிய நாடாளுமன்றம்

### மங்கள சமரவீர நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 26
செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னதாக புதிய நாடாளுமன்றம் அமையும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
செப்ரெம்பருக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் அமைவது புத்திசாலித்தனமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.
தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.
செப்ரெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியிடப்படவுள்ள நிலையில், அதற்கு முன்னதாகத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைச்சரின் கருத்து அமைந்திருந்தது.
இன்னமும் சில நாள்களின் பின்னர் அன்றி இன்னமும் சில மணி நேரங்களில் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என நம்புவதாகவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
நாடாளுமன்றம் செவ்வாய் நள்ளிரவு கலைக்கப்படவுள்ளதாகப் பரவலாகச் செய்திகள் வெளியாகி வருவது பற்றி எழுப்பப்பட்ட கேள்வி தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கருத்து வெளியிடுகையில்,
நானும் அப்படித்தான் நம்புகின்றேன். இன்னும் சில நாள்களின் பின்னர் அன்றி சில மணித்தியாலங்களில் அது இடம்பெறும் என நான் நம்புகின்றேன். சரியாக எப்போது கலைக்கப்படும் என்பது ஜனாதிபதிக்கும் கடவுளுக்கும்தான் தெரியும். இந்தநாடாளுமன்றத்திற்கு புதிய மக்கள் ஆணை தேவையாகவுள்ளது. உண்மையில் ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேனவுக்கு வழங்கிய ஆணையை நடைமுறைப் படுத்துவதற்குப் புதிய நாடாளுமன்றம் தேவை. அதனால்தான் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என நாம் நம்பு கின்றோம்.
செப்ரெம்பருக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் ஒன்று இலங்கையில் இருக்கும் என ஜனாதிபதியே வெளிநாட்டுப் பிரமுகர்கள் பலரிடம் கூறியிருக்கின்றார். செப்ரெம்பருக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் இருக்கும் என நான் நம்புகின்றேன். ஜனாதிபதி சரியான தீர்மானத்தை எடுப்பார் என நம்புகின்றேன்–எனத் தெரிவித்தார்.
வெளிநாட்டுச் செய்தியாளரொருவர் செப்ரெம்பர் மாத நடுப் பகுதியிலா புதிய நாடாளுமன்றம் அமையும் என மீண்டும் வினவியபோது,
செப்ரெம்பருக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் இருக்கும் என நான் நம்புகின்றேன். செப்ரெம்பருக்குமுன்னர் நடத்துவது புத்திசாலித்தனமானது" எனக் கூறினார். (த)

# பெண்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்படுவதில்லை

### மகளிர் விவகார அமைச்சர் ரோசி கவலை



கொழும்பு, ஜூன் 26
பெண்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப்படுவதில்லை என மகளிர் வி[illegible]கார அமைச்சர் ரோசி சேனநா[illegible]க்க தெரிவித்துள்ளார்.
[illegible]பு மனுக்களைப் பெற்றுக் கொள்ளும்போது பெண்களுக்கு ஏதேனு[illegible] பிரச்சினையிருந்தால் அத[illegible] தன்னிடம் அறிவிக்குமாறு அ[illegible]கூறியுள்ளார்.
அ[illegible]மையில் நடைபெற்ற பெண்களு[illegible]கான தலைமைத்துவ நிகழ்வு ஒ[illegible]லேயே அவர் இதனைத் தெரிவி[illegible]துள்ளார்.
தெற்காசியாவில் கூடுதல் கல்வியறிவைக் கொண்ட நாடு இலங்கையாகவும், தாய்–சேய் மரணங்கள் குறைவாகப் பதிவாகும் நாடாகவும் இலங்கை திகழ்கின்றது. எனினும், தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் பெண்களுக்கு உரிய சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. எங்கள் நாட்டில் பெண்கள் மிகவும் குறைவாகவே மதிக்கப்படுகின்றனர் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## சஜின் வாஸின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 25
பொதுச் சொத்துக்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவின் விளக்கமறியல் எதிர்வரும் ஜூலை மாதம் 07ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்று இடம் பெற்றது. கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை, சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# 600 மில்லியன் யூரோ வீணாகச் செலவழிப்பு

### லஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 26
இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமை அமைச்சு பலனளிக்காத திட்டம் ஒன்றுக்காக 600 மில்லியன் யூரோக்களை வங்கிக் கடனாகப் பெற்று அதனை வீணாகச் செலவிட்டுள்ளதாக லஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.
ஊழல் எதிர்ப்பு முன்னணி இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளது.
இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமை அமைச்சின் செயலாளருக்கும் நெதர்லாந்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கை ஒன்றின் ஊடாக எவ்வித விலை மனுவும் கோரப்படாமல், பலனளிக்காத திட்டம் ஒன்றுக்காக 600 மில்லியன் யூரோக்கள் வங்கி கடனாகப் பெறப்பட்டுள்ளது. அதிக வட்டி வீதத்துக்கு இந்தக் கடன் பெறப்பட்டுள்ளது.
இடர் முகாமைத்துவ தொடர்பாடல் மற்றும் பிரசாரத்தை ஊக்குவிக்கும் திட்டம் என்ற பெயரிலான இந்த உடன்படிக்கை 2007ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி கையெழுத்திடப்பட்டுள்ளது.
இந்தளவு பெருந்தொகை பணத்தைப் பலனளிக்காத திட்டம் ஒன்றுக்குச் செலவிட்டமை காரணமாக நாட்டுக்குப் பெரும் கடன் சுமை ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (த)

## கேகாலையில் தாயும் சேயும் இன்புளுவன்சாவினால் சாவு

கொழும்பு, ஜூன் 26
கேகாலை அரச வைத்திய சாலையில் நடந்த பிரசவத்தின் பின் தாயும், பிறந்த குழந்தையும் இன்புளுவன்சா காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பொல்காவலை ஈதெல்ல, பனலிய, புவத்வத்த பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற் சாலையொன்றில் தரப் பரிசோதகராகப் பணி புரிந்த நிரோனி தில்ருக்ஷா பண்டார எனும் 30 வயதுப் பெண்ணும் அவர் பிரசவித்த ஆண் குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.
இந்தப் பெண்ணுக்கு ஏற்கனவே மூன்று வயதுடைய பெண் குழந்தையொன்று இருப்பதாகவும் அவரது இரண்டாவது பிரசவத்தின் போதே இந்தத் துர்ப்பாக்கிய சம்பவம் நடந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.
பிரசவம் சம்பந்தமான சிகிச்சை முகாமில் (கிளினிக்) இவருக்கு ஜூலை மாதம் 21ஆம் திகதி பிரசவம் நடக்கலாம் என எதிர்வு கூறப்பட்டிருந்தது. எனினும், கடந்த 10ஆம் திகதி இவருக்குத் திடீரென காய்ச்சல் ஏற்பட்டதால் அளவ்வ கிராமிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக கேகாலை அரச வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவசர சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் நடந்த சில மணித்தியாலங்களில் தாயும் சேயும் உயிரிழந்துள்ளனர். (த)

# இரட்டை வாக்குச்சீட்டை சுதந்திரக் கட்சி நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 26
சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இரட்டை வாக்குச்சீட்டு முறைமை கோரிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று முன்தினம் சபையில் நிராகரித்தது.
இரட்டை வாக்குச்சீட்டு முறைமையானது, தற்போதைய தேர்தல் முறைமையைப்போல நாட்டில் மீண்டும் இனவாதம், குலவாதம், வகுப்புவாதம் என்பவற்றை ஏற்படுத்தும் என்று காரணம் கூறி தமது எதிர்ப்பையும் தெரிவித்தது.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற புதிய தேர்தல் முறைமை தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான ஜோன் செனிவிரட்ன மேலும் தெரிவித்ததாவது:–
தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசார தேர்தல் முறைமையானது ஐக்கிய தேசியக் கட்சி யால் அறிமுகப்படுத்தப்பட்ட தொன்றாகும். இந்த முறைமையானது, நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என ஆரம்பம் முதலே நாம் கூறிவருகின்றோம். தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.
இதனடிப்படையில்தான் தேர்த
முறைமை மாற்றமானது 20 ஆவ
திருத்தச்சட்டம் மூல மாக கொண்
வரப்பட்டுள்ளது. நாடாளுமன்
உறுப்பினர்களின் தொகை 225
விட அதிகரிக்கக் கூடாது என ஐ
கிய தேசியக்கட்சி கூறுகின்றது. மேலு
சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்
களும் 237 நாடாளுமன்ற உறுப்
னர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கி
றன. 225ஆக நாடாளுமன்ற உறு
பினர்களின் தொகை அதிகரிக்
படவேண்டும் என்றும் கூறுகின்ற
இருப்பினும், மலையகப் பிரதிநி
ளின் கோரிக்கைகளுக்கமைய மல
யகத்தில் தமிழ் மக்கள் அதிக ம
வாழும் பகுதிகளில் பல தொ
முறைமையை நடை முறைப்படு
வேண்டும்.
ஆனால், பல்வேறு சிறிய மற்
சிறுபான்மைக் கட்சிகள் முன்வை
கும் இரட்டை வாக்குச்சீட்டு மு
மைக்கு நாம் இணங்கமுடியா
ஏனெனில், இலகுவான தேர்
முறைமையொன்றைத்தான்
கள் கோருகின்றனர். ஒரு வாக்
சீட்டில் அவர்கள் தமது பிரதி
களைத் தெரிவுசெய்யவேண்
ஒரு வாக்காளர் இரு வாக்குச்
டுக்களைப் பயன்படுத்துகின்ற மு
மையானது நாட்டில் மீண்டும் இ
வாதம், குலவாதம், வகுப்புவாதத்
ஏற்படுத்தும். இந்த இரட்டை வாக்
சீட்டு முறைமையை எம்மால்
றுக் கொள்ள முடியாது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலப்பலரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

**யாழ். மாவட்ட தாச்சித் தொடர்**

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் மின் ஒளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு அறிவொளி அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்**

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் 13வயதுப் பிரிவு ஆண்களுக்கான அரையிறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன.

இதன்படி மாலை 3மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. இதனைத் தொடர்ந்து மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்த்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோத வுள்ளது. (ம-23)

## முதல் எட்டு அணிகளுக்குள் இடம்பிடித்தன
# பாடுமீன், நவஜீவன்ஸ் அணிகள்

கரணவாய் ஜூன் 26

கொலின்ஸின்உதைபந்தாட்டத்தொடரில் நடுவரின் சிவப்பு மட்டைத் தீர்ப்பை ஏற்க மறுத்த பொற்பதி சென்.பீற்றர்ஸ் அணி ஆட்டத்தில் தொடர்ந்து விளையாட மறுப்புத் தெரிவித்ததையடுத்து, குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றதாக நடுவர் குழுவால் அறிவிக்கப் பட்டது. மற்றொரு ஆட்டத்தில் ஆட்டம் முழுவதும் ஏக ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் குறிஞ்சிக் குமரனை இலகுவாக வீழ்த்தியது.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடு மீன் விளையாட்டுக்கழகமும் பொற் பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பித்து பதின்ம நிமிடங்களில் சென். பீற்றர்ஸ் அணிக்கு தண்டனை உதை யொன்று கிடைத்தது. ஆட்டத்தின் முதல் கோல் சென்.பீற்றர்ஸ் சார்பாக பதிவாகப்போகிறது என்று எதிர்பார்த்தவேளையில், வாய்ப்பைக் கோட்டைவிட்டு ரசிகர்களின் வசைபாடலை முறையாக வாங்கிக் கட்டியது அந்த அணி. வேறு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறாமல் கோலெதுவும் பதியப்படாமல் முடிவடைந்தது ஆட்டத்தின் முதல்பாதி.

முதல்பாதியின் பதின்ம நிமிடத்தில் சென்.பீற்றர்ஸ் அணிக்கு கிடைத்த வாய்ப்பு இரண்டாம் பாதியின் பதின்ம நிமிடத்தில் பாடுமீன் அணிக்கும் கிடைக்கவே செய்தது. அதாவது இரண்டாம் பாதியின் 15 ஆவது நிமிடத்தில் பொற்பதியின் கோல் பிரதேசத்திற்குள் வைத்து அவ்வணி வீரர் முறையற்ற ஆட்டத்தில் ஈடுபட்டதால், பாடுமீன் விளையாட்டுக் கழகத்திற்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. வாய்ப்பு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட பாடுமீன் அணிக்கான முதல் கோலும் வெற்றிக் கோலும் பதிவுசெய்யப்பட்டது. பாடுமீனின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்ய படாதபாடுபட்டனர் சென்.பீற்றர்ஸ் வீரர்கள். விளைவாக எல்லைதாண்டிச் சென்று முறையற்ற ஆட்டத்தில் ஈடுபட்டு நடுவரினால் சிவப்பு அட்டை வாங்கிக்கொண்டார் சென். பீற்றர்ஸ் வீரரொருவர். சிவப்பு அட்டை வழங்கப்பட்ட விதம் தவறு என்று தமக்குச் சார்பான நியாயங்களை எடுத்துக் கூறிய சென்.பீற்றர்ஸ் வீரர்கள் தொடர்ந்து விளையாட மறுப்புத் தெரிவித்து மைதானத்தை விட்டு வெளியேற, பாடுமீன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலன் முதல் 8 அணிகளுக்கான தெரிவிற்குள் பாடுமீன் கழகம் இடம் பிடித்துக் கொண்டது.

அதற்குமுன்னர் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவனஸ் விளையாட்டுக் கழகமும் உரும்பிராய் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்ட நேரம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழ கம் 3:0 என்றகோல்கள் அடிப்படையில் வென்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியது. (ம-108)

## சென்.ஹென்றிஸ் - டி மசெனட் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 26

கொத்மலை சொக்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையில் நடத்தும் கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை கந்தானை டி மசெனட் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கந்தானை டி மசெனட் கல்லூரி அணிமோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலை யானது. (ம-23)

## பல்கலைகளின் கூடைப்பந்தாட்டத் தொடர்; யாழ்.பல்கலை பெண்கள் அணி மூன்றாமிடம்

மாங்குளம், ஜூன் 26

அகில இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். பல்கலைக் கழகத்தின் பெண்கள் அணி 3ஆம் இடத்தையும் ஆண்கள் அணி 4ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

கடந்த 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை கிழக்குப் பல்கலைக் கழக மைதானத்தில் குறித்த போட்டித் தொடர்கள் நடைபெற்றன. இதில் பெண்களுக்கான தொடரில் 1ஆம் இடத்தை ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணியும், 2ஆம் இடத்தை களனி பல்கலைக்கழக அணியும் பெற்றன.

யாழ். பல்கலை பெண்கள் அணி 3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கிழக்குப் பல்கலைக்கழக அணி மோதியது. இதில் ஆட்ட ஆரம்பம் முதல் தமது அபார திறமையைக் காட்டிய யாழ்.பல் கலைக்கழக அணியினர் 60:49 என்ற அடிப்படையில் சொந்த மைதானத்தில் கிழக்குபல்கலைக் கழகத்தை வீழ்த்தி மூன்றாம் இடத்தை தமதாக்கினர்.



**யாழ். பல்கலை ஆண்கள் அணி**

ஆண்கள் பிரிவின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். பல் கலைக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டத்தில் தோல் வியடைந்த காரணத்தினால் யாழ். பல்கலையின் ஆண்கள் அணி நான் காம் இடத்தை பெற்றுக் கொண்டது. (ம-422-86)

## தங்கராசா ஞாபகார்த்தக் கிண்ணம்
# அலையோசை - சுப்பர்றாங் அனல் பறக்கும் இறுதி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 26

முள்ளியவளை, வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் தங்கராசாவின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு உடுப்புக்குளம் அலையோசை அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் அணி மோதவுள்ளது.

கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறும் இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் முன்னாள் துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளருமான சு.திருஞானம் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந் தினர்களாக வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும் வவுனியா வடக்கு கல்விக் கோட்ட அதிகாரியுமான மூ.பாலசிங்கமும், வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், முல்லைத்தீவு கல்வி வலய பிரதிப் பணிப்பாளருமான செ.சிவராசாவும் வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி சண்முகராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக ஆசிரிய ஆலோசகர் சிற்சபேசன், முல்லைத்தீவு மாவட்டபதில் நீதிவான் பரஞ்சோதி, சட்டத்தரணி கங்காதரன் ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23-102)

## மாகாண உடல்நல வேலைத்திட்டம்: சென்.ஹென்றிஸ், பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை சம்பியன்







மாங்குளம் ஜூன் 26

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான உடல்நல வேலைத் திட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலைஅணியும்சம்பியன்களாகின.

**ஆண்கள் பிரிவு**

கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற குறித்த போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணியும் 2ஆம் இடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை தும்பளை சைவப்பிரகாச வித்தியாலய அணியும் 4ஆம் இடத்தை [illegible] அணியும் பெற்றுக் கொண்டன.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் 2ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியும் 3ஆம் இடத்தை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.


கல்வி அமைச்சினால் பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவரும் காலை உடல்நல வேலைத் திட்டத்தில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதுக்கு அமைய இந்த உடல் நல வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடிகொடுக்கும் முனைப்பில் இலங்கை

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாம் நாள் முடிவான நேற்று பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸிற்காக 138 ஓட்டங்களில் சுருண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை 70–1 என்ற பலமான நிலையில் உள்ளது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஷ்பா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் ஹபீஸ் மற்றும் ஜஷசாட். ஒரே ஓட்டத்துடன் ஓட்டம் பிடித்தார் ஜஷசாட். ஐந்தே ஓட்டத்தில் பாகிஸ்தானின் முதல் இலக்கு பறிபோனது. ஹபீஸுடன் இணைந்து அசார் அலி நிதானிக்க மேலதிக இலக்கு இழப்பில்லாமல் பாகிஸ்தான் 50 ஓட்டங்களை எட்டியது. இணைப்பாட்டம் வலுப்பெறும் நிலையில் பாகிஸ்தானின் மற்றொரு இலக்கினையும் சரித்தார் பிரசாத். யுனிஸ்கானும் வந்த வேகத்தில் பிரசாத்தின் பந்தில் சிக்க பாகிஸ்தான் 74–3. மூன்று இலக்கும் பிரசாத்தினாலேயே பறிபோனது. பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்கத்தை தாண்டமாட்டோம் என்று ஒற்றைக்காலில் நின்று ஒருவர் பின்னர் ஒருவராக கௌசலின் பந்தில் களத்தினை விட்டு வெளியேறினர். ஒற்றையிலக்கத்தை தாண்டிய சிலரும் பதின்மத்தை தாண்டவில்லை முடிவில் பாகிஸ்தான் 138 ஓட்டங்களில் சுருண்டது.


ஆட்டமிழந்த அதிருப்தியில் மிர்ஷா

பந்துவீச்சில் இலங்கை சார்பாக கௌசல் ஐந்து இலக்குகளையும் பிரசாத் மூன்று இலக்குகளையும் சமீர ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.. 139 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் இலங்கையின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய கருணாரத்ன மற்றும் சில்லா இணைப்பாட்டமாக முழுமையாக ஐம்பது ஓட்டங்களைப் பூர்த்தி செய்யவில்லை ஆயினும் முதல் இன்னிங்ஸை முன்னிலை வகிக்கக்கூடிய இணைப்பாட்டத்தினை வழங்கினர். அணியின் ஓட்டம் 47 ஆக இருந்த வேளையில் கருணாரத்ன 28 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். சங்காவும் சுமாரான பங்களிப்பு வழங்க ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 70–1 என்ற நிலைமையில் உள்ளது. சில்வா 21 ஓட்டங்களுடனும் சங்கா 18 ஓட்டங்ளுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## டோனியின் வழிகாட்டலில் பங்களாதேஷின் ரஹ்மான்





இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல். தொடரின் மிகவும் பிரபலமான அணியான சென்னை அணியில் பங்களாதேஷின் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிர் ரஹ்மானுக்கு இடம் கொடுக்குமாறு பங்களாதேஷின் அணித்தலைவரான மோர்ரசா டோனியிடம் பரிந்துரைத்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்களாதேஷின் அறிமுக இளம் பந்துவீச்சாளர் முஸ்தபிர் ரஹ்மான் தனது பந்துவீச்சில் இந்திய வீரர்களை மிரட்டினார். இவரது அபார பந்துவீச்சால் பங்களாதேஷ் அணி ஒருநாள் தொடரை 2–1 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்துள்ளது. இந்த நிலையில் பங்களாதேஷின் அணித் தலைவர் மொர்ரசா, ரஹ்மானை ஐ.பி.எல். தொடரில் சென்னையில் சேர்த்துக் கொள்ளுமாறு டோனியிடம் பரிந்துரை செய்துள்ளதாகவும், அதற்கு டோனியும் சம்மதம் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

## ஜடேஜாவின் தெரிவு சரியே



இந்திய அணியின் சகலதுறை வீரரான ஜடேஜா, சமீப காலமாக தொடர்ந்து சொதப்பி வருகிறார். உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியில் இடம்பெற்றிருந்த அவர், எந்த ஆட்டத்திலும் தனது தெரிவை சரியென்று நிரூபிக்கவில்லை. ஆனாலும் அவருக்கு டோனி தொடர்ந்து வாய்ப்பளித்து வருவதுடன் ஜடேஜாவுக்கு வாய்ப்பினை வழங்குவது சரியென்று தெரிவித்துள்ளார்.

ஜடேஜாவின் தெரிவு தொடர்பாக டோனி தெரிவித்ததாவது 'ஜடேஜாவுக்கு துடுப்பெடுத்தாட சரியான வாய்ப்புக்கிடைக்கவில்லை. பந்துவீச்சில் முதல் 10 பந்துப்பரிமாற்றங்களில் இவரை பயன்படுத்துவதில்லை. அணியின் இக்கட்டான நிலைமைகளில் துடுப்பெடுத்தாடுதல், பந்து வீசுதல் என்று இரண்டையும் செய்யும் ஒரே வீரர் அவர்தான். இதனால் அவருக்கு சுமைகள் அதிகம். இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்' என்றார். (ம)

## ரசிகரை சந்தித்த வீரர்கள்



பங்களாதேஷில் தாக்கப்பட்ட சச்சினின் ரசிகரை இந்திய வீரர்களான கோஹ்லி, ரெய்னா, அஸ்வின் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தின் பொழுது சச்சினின் தீவிர ரசிகரும் இந்தியாவின் ஆதரவாளருமானசுதிர் கௌதம் சென்ற முச்சக்கர வண்டியை வழிமறித்து பங்களாதேஷின் ரசிகர்கள் சிலர் தாக்கினர். இதில் அவர் காயம் அடைந்தார். இது தொடர்பாக சுதிர் கௌதம் பொலிஸில் முறைப்பாடு அளிக்காத நிலையிலும், கடைசி ஆட்டத்தைக்காண அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது

அத்துடன் தமக்காக தாக்கப்பட்ட அவரை இந்திய அணியின் துணை அணித் தலைவர் விராட் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, அஸ்வின் ஆகியோர் சந்தித்து தாக்குதல் பற்றி கேட்டறிந்தனர். மேலும், கோஹ்லி தன்னுடையை தனிப்பட்ட கைத் தொலைபேசியின் இலக்கத்தை அவரிடம் கொடுத்து எப்போது [illegible] மானாலும் தன்னை [illegible] கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். (ம)

## வடமாகாண ரெனிஸ் தொடர் மூன்றாம் இடம் கிளி. மகா வி.

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான ரென்னிஸ் தொடரின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொட்டடி நாமசிவாய அணியை கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ரென்னிஸ் திடலில் இடம்பெற்ற இரண்டு ஒற்றையர் ஆட்டத்தினையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தினையும் கொண்ட இறுதியாட்டத்தின் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி சார்பாக தருன்சனும் கொட்டடி நமசிவாய வித்தியாலய அணி சார்பில் அனேகனும் மோதிக் கொண்டனர். இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் தருன்சன் 6:3, 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார்.

இரண்டவது ஒற்றையர் ஆட்டத்தில் கொட்டடி நமசிவாய வித்தியாலய அணி வீரன் கார்த்தீபன் தனது அதிரடி ஆட்டத்தினை வெளிப்படுத்தி 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முடிவை நமசிவாய அணிக்குச் சாதகமாக்கிக் கொள்ள ஆட்டம் சமநிலையானது.



வெற்றியாளரை தீர்மானிக்கும் ஆட்டமாக இரட்டையர் ஆட்டம் அமைந்தது. இரட்டையர் ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி சார்பாக ஸ்ரீமதுரன், கவீதன் ஜோடியும், கொட்டடி நமசிவாய வித்தியாலய அணி சார்பில் கௌசன், மதுசன் ஜோடியும் மோதிக் கொண்டனர். இரட்டையர் ஆட்டத்தின் முதலாவது செற்றினை கிளிநொச்சி மகா வித்தியாலய அணியின் ஜோடியினர் 6:0 புள்ளிகளின் அடிப்படையில் தமதாக்கினர். இரண்டாவது செற் ஆட்டத்தில் சுதாரித்துக் கொண்ட கொட்டடி நமசிவாய வித்தியாலய அணியின் ஜோடியினர் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுக்க ஆட்டம் சமநிலையானது. முடிவைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் கிளிநொச்சி ஜோடியினர் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற மாகாண மட்ட ரென்னிஸ் தொடரின் மூன்றாம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வசமானது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சானியா - ஹிங்கிஸ்

## சானியா - ஹிங்கிஸ் இணை
# காலிறுதிக்கு தகுதி

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஏகான் சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா - ஹிங்கிஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதிக்கு தகுதியாகும் ஆட்டத் தில் சானியா - ஹிங்கிஸ் இணை கரோலினா பிளிஸ்கோவா - மிச்செல்லா கிராஜிசெக் இணையை எதிர்கொண்டது. 46 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் சானியா - ஹிங்கிஸ் இணை 6-0, 6-2 என்ற நேர் செற்றில்வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

(ம)

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் ஓடியோ, வீடியோ மூலம் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகிறது. இம்முறையும் எமது மாணவர்கள் A1 பரீட்சையில் 60-75 வரையான புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்கள்.

* புதிய பிரிவுகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பமாகவுள்ளன.

German Language Academy

ஆரியகுளம் சந்தி (புத்த விகாரைக்கு எதிரே). 0779707322

FLC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்.
விரிவுரையாளர் MR. V.JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
கடந்த March மாத, DELF A1, A2 Exam இல் 100 % சித்தியடைந்துள்ளனர்...
938 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்...
Register now : 0779 789 456 / 021 221 7781

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 27.06 சனி 2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 29.06 Mon 4pm No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி | ஆரம்பம்: 24.06 Wed 4pm கண்டி வீதி, அரசடி, சாவகச்சேரி. |

ACCOUNT'S CLERK
தேவை



பிரபல்யமான தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கணக்குப் பதிவுகளை மேற் கொள்வதற்கு பெண் வேலையாள் தேவை.

* MS office தேர்ந்திருத்தல் வேண்டும்.

சுயவிவரக்கோவையை 02.07.2015 இற்கு முன் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

Email: jaffnavacancy@gmail.com
மே/பா உதயன்
விளம்பர இல. 5068,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய விசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி

Student, Migration Visa மூலமாகUK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

உதயன் விளம்பரத்திற்கு
advt@uthayan.com
0215671111

விசேட வகுப்புகள்

வடமாகாண சாரதி தேர்வு
சனி 1.00- 4.00வரை
வடமாகாண கலாசார உத்தியோகத்தர்
சனி 2.00- 5.00வரை
அதிபர் சேவை தரம் 3
ஞாயிறு 1.00- 5.00வரை
பதிவாளர் சட்டமாணி வங்கி
பரீட்சைகளுக்கு
ஞாயிறு 2.00- 5.00வரை

T.P: 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

சாரதி தேவை

யாழ். மாநகரசபைக்குள் வசிக்கும் A/D சாரதி அனுமதிப்பத்திரம் உடைய வாகன சாரதி தேவை.
தொடர்பு: 077 8314 201

புவியியல் தொடர் கருத்தரங்கு

ஆரம்பம்
28.06.2015 ஞாயிறு 1.00 மணி
P.S.குமரன்
பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்.

மாபெரும் இசை நிகழ்ச்சி

கிருஸ்ணா ஐயர்
தேனிசைத் தென்றல் "தேவா"
வானிசை திலகம் மோகன்ராஜ்

பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.மண்ணில் முதன் முறையாக "தேனிசைத் தென்றல்" தேவா உடன் தென்னிந்திய திரைப்பட பின்னணிப் பாடகர்கள் கிருஸ்ணா ஐயர் வினைதா, இள்ளயராஜா மீனாட்சி ஆகியோர்களுடன் இலங்கையின் முதல்தர இசையமைப்பாளர் வானிசை திலகம்

மோகன் ராஜின் இசையில்
தேனிசை இராகங்கள்

இள்ளயராஜா மீனாட்சி
வினைதா

நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு: சிட்னி மோகன்

ஊடக அனுசரணை: உதயன்

வடமராட்சி தரம் 5 மாணவர்களுக்கான மாபெரும் இலவசக் கருத்தரங்கு

முன்னணி கையேடான புலமைச்சுடர், வடமராட்சியின் முன்னணி வங்கியான கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் அனுமதியுடன் நடத்தும் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் : நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
காலம் : 28 .06.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி
காலை 8 மணிக்கு முன்னர் மாணவர்கள் மண்டபத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

குறிப்பு: அனுமதிக்கான முற்பதிவுகளை நெல்லியடி கொமர்ஷல் வங்கியில் மேற்கொள்ளலாம். 0212263787 / 0212263785

மேலதிக தொடர்புகளிற்கு : 077 392 0632 (புலமைச்சுடர் இணைப்பாளர், வடமராட்சி)

அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5 புலமைச்சுடர்
COMMERCIAL BANK
நெல்லியடி கிளை
சுடர் ஒளி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org